# சோசலிசத் தத்துவமும் கொரில்லா யுத்தமும்



தமிழீழ விடுதலைப் புலிகள்

# சோசலிச தத்துவமும் கொரில்லா யுத்தமும்

விடுதலைப் தமிழீழ புலிகள்

LIBERATION
TIGERS
OF
THAMIL EALAM

வெளியீடு
பிரச்சார வெளியீட்டு வாரியம்
**தமிழீழ விடுதலைப் புலிகள்**

புத்தக வெளியீட்டு எண் : 6.

முதற் பதிப்பு, ஜனவரி 1984

## காணிக்கை

புரட்சியின் பூக்கள் பூத்தன, அவையோ
பூமியில் உலர்ந்து மடிந்தன, அவற்றின்
நறுமணமோ என்றும் சாவதில்லை.
புதிய மொட்டுகள் மலர்ந்து, பெருகி
அந்த சுகந்தத்தை திக்கெங்கும் பரப்பிவரும்.

[ சிங்கள இனவாத வெறியாட்டத்தில் சிறைக்குள் வைத்து உயிர் சிதைக்கப்பட்ட எம்முயிர் புரட்சித் தோழர் தாமு கந்தையா (புத்தூர் கிழக்கு), சின்னப்பு சத்தீஸ்வரன் (அச்சுவேலி) குருநகர் இராணுவ முகாமில் கொலை செய்யப்பட்ட சித்திர வேல் சிவாநந்தராஜா (கிளிவெட்டி) ஆகியோரு க்கு இந்நூலை காணிக்கையாக வைக்கிறோம் ].

### அட்டையில்

*தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிரடிப்படை பிரிவொன்றைச் சேர்ந்த வீரர்கள் தமிழீழக் காட்டுப்புறத்தில் ஒளிந்திருந்து திடீர்த் தாக்குதலை நடத்தும் போர் யுக்திகளில் பயிற்சிபெறும் காட்சி.*

# தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்ட அரசியல் கொள்கை விளக்க நூல்கள்

—x—

1. சோசலிசத் தமிழீழத்தை நோக்கி
   நவம்பர் 1979

2. இனவெறிப் பிடிக்குள் ஈழத்தமிழினம்
   ஜனவரி 1980

3. அரச பயங்கரவாதமும் ஆயுதப் புரட்சியும்
   ஏப்ரல் 1983

4. *LIBERATION TIGERS AND TAMIL EELAM FREEDOM STRUGGLE*
   *AUGUST 1983*

5. *WOMEN AND REVOLUTION : THE ROLE OF WOMEN IN TAMIL EELAM NATIONAL LIBERATION STRUGGLE*
   *NOVEMBER 1983*

6. சோசலிச தத்துவமும் கொரில்லா யுத்தமும்
   ஜனவரி 1984

## விரைவில் வெளிவரவிருக்கும் வெளியீடுகள்

7. விடுதலைப் புலிகளும் தமிழீழ சுதந்திரப் போராட்டமும்.

8. பெண்களும் புரட்சியும் : தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்களின் பங்கு.

9. தமிழீழ தனியரசே மலையகத் தமிழரின் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு.

# உள்ளடக்கம்

—x—

பக்கம்

**முன்னுரை**-சோசலிச தத்துவமும் கொரில்லா யுத்தமும் i — iv

**சேகுவாரா**-'கொரில்லாப் போராட்டத்தின் சாராம்சம்' 1 — 7

**ரெஜி டெப்ரே**-'புரட்சியில் புரட்சி' 8 — 26

**மாசே துங்**-கொரில்லாப் போர்முறை 27 — 64

# சோசலிச தத்துவமும் கொரில்லா யுத்தமும்

ஒரு அரசியற்போராட்டத்தின் அதி உச்ச கட்டமாக, அப்போராட்டத்தின் வளர்ச்சியும் முதிர்ச்சியும் அடைந்த நிலையில், புரட்சிகர ஆயுதப் போராட்டம் தோற்றம்கொள்கிறது. இது உலகளாவிய வரலாற்று உண்மை. உலக சோசலிசப் புரட்சிகளும், தேசிய விடுதலைப் போராட்டங்களும் ஆயுதம்தரித்த புரட்சிகரப்போராட்ட பரிணமம் பெற்றவையே.

ஒடுக்குமுறையாளன் தனது அடக்குமுறை சாதனமாக ஆயுத பலாத்காரத்தையே பிரயோகிக்கிருன். இந்த அநீதியான ஆயுத பலாத்கார அடக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழும் மக்கள் ஆரம்பத்தில் அமைதிவழிப் போராட்டங்களை நடாத்துகின்றனர். ஆனல் இந்த அமைதி வழி 'மென்முறைப்' போராட்டங்களை நசுக்க ஒடுக்குமுறையாளன் ஆயுத வன்முறையை அதிதீவிரப்படுத்துகிருன். இதனல் சட்ட ரீதியான, சமாதான, சனநாயக போராட்ட முறைகளில் மக்கள் நம்பிக்கை இழக்கின்றனர், அதே சமயம் ஒடுக்குமுறையோ நீடிக்கிறது; சாதாரண வாழ்க்கையின் சகல பரிமாணங்களிலும் ஊடுருவிச் செல்கிறது. மனித உரிமைகள் இழந்த அடிமைத்தனத்திற்கு மக்கள் தள்ளப்படுகின்றனர். அடக்குமுறையின் அழுத்தம் அதிகரிக்க மக்களிடம் ஆவேசம் பிறக்கிறது. விடுதலை வேட்கை எழுகிறது. ஆயுத பலாத்கார அடக்குமுறையை ஆயுதம் தாங்கி எதிர்கொள்ள மக்கள் தயாராகின்றனர். இந்தப் புரட்சிகர வரலாற்று சூழ்நிலையிலேயே ஆயுதம் தரித்த எதிர்ப்பு இயக்கம் (armed resistance movement) ஒரு வெகுசன போராட்ட வடிவத்தை எடுக்கிறது. எனவே, அடக்குமுறைக்கு எதிராக சகலவிதமான சமாதான வழி தழுவிய போர்முறைகளையும் கையாண்டு தோல்விகண்ட மக்கள், வேறெந்த வழியுமற்ற சூழ்நிலையில், ஆயுதம் தாங்கிய புரட்சிகரப் போராட்டத்தில் குதிப்பது தவிர்க்க முடியாத வரலாற்று நியதியாகிவிடுகிறது. தமிழீழ தேசிய சுதந்திரப் போராட்ட வரலாற்றை எடுத்துக்கொண்டால் இந்த உண்மை நன்கு புலனகும்.

எமது போராட்டம் 35 வருட கால வரலாற்றைக்
கொண்டது. இந்த வரலாற்றுக்காலத்தில் எமது விடுதலைப்
போராட்டம் பல திருப்புமுனைகளை அடைந்திருக்கிறது;
புதிய வடிவங்களைப் பெற்றிருக்கிறது; புதிய பரிமாணங்
களை உள்ளடக்கியதாக விரிவுபெற்றிருக்கிறது. சம உரிமை
கோரி, மொழியுரிமை கோரி, சமஷ்டி ஆ சி கோரி, ஈற்றில்
சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனியாட்சி கோரும்
அளவிற்கு எமது போராட்டம் வளர்ச்சியும் முதிர்ச்சியும்
கண்டது. ஆரம்பத்திலிருந்து கால்நூற்றாண்டு காலத்திற்கு
மேலாக நாம் அகிம்சைத் தத்துவத்தின் அடிப்படையில்
அமைதிவழிப் போராட்டங்களை நடத்தினோம். வர்க்க, சாதி
வேறுபாடற்ற ரீதியில் முழுத் தமிழீழ சமூகமுமே இந்த
தேசியப் போராட்டத்தில் எழுச்சி கொண்டது. சகலவித
மான சமாதான, சனநாயக மார்க்கங்களிலும் மக்கள் தமது
விடுதலையுணர்வுக்கு வெளிப்பாடு கண்டனர். தமிழ்த்
தேசாபிமான எழுச்சியைக் கண்டு மிரண்ட சிங்கள
இனவாத அரசு தனது பாசிச அடக்குமுறை இயந்திரத்தை
முடுக்கிவிட்டது. அகிம்சை வழி மென்முறைக்கு எதிராக
ஆயுத வன்முறை விஸ்வரூபம் எடுத்தது. அடக்குமுறை
யாளனின் ஆயுத பலத்திற்கு அகிம்சைப் போரின் தார்மீக
பலத்தால் ஈடுகொடுக்கமுடியவில்லை. தமிழீழ சுதந்திரப்
போராட்ட வரலாற்றின் ஒரு சகாப்தம் முடிவுற்றது.
அகிம்சைப் போராட்டத்திலும் அப்போராட்ட யுக்தியைக்
கையாண்ட தலைமையிலும் தமிழ் பேசும் மக்கள் நம்பிக்
கையை இழந்தனர். எழுபதின் ஆரம்பத்தில் ஒரு புதிய யுகம்
பிறக்கிறது. இது புதிய பரம்பரையின் புரட்சிகரமான
சகாப்தம். புரட்சிகர ஆயுத வன்முறைப் போராட்டம்
வரலாற்று ரீதியாக பிறப்பெடுத்த காலகட்டம்.

சட்ட ரீதியான, சனநாயக போராட்ட வடிவங்கள்
படுதோல்விகண்ட சூழ்நிலையில், இனஅழிப்பு அட்டூழியங்
களிலிருந்து எமது மக்களைப் பாதுகாக்க வேறெந்த வழியு
மற்ற சூழ்நிலையில்தான் புரட்சிகர ஆயுத எதிர்ப்பு இயக்கம்
தமிழீழத்தில் தலைதூக்கியது. இந்த ஆயுதப் புரட்சி இயக்
கத்திற்கு அன்று முன்னோடியாக விளங்கியதும், இன்று
முன்னணி வகித்துவருவதும் விடுதலைப் புலி இயக்கம்
என்பதை யாராலும் மறுக்கமுடியாது. ஆயுதப் போராட்
டத்தை ஒரு புரட்சிகர இலட்சியத்தின் அடிப்படையில்
வரித்து, ஒரு கட்டுப்பாடான இரகசிய இயக்க அமைப்பை
உருவாக்கி, கொரில்லாப்போர்முறையை மக்கள் போராட்ட
வடிவமாக தமிழீழத்தில் அறிமுகம்செய்த பெருமை எமது
இயக்கத் தலைவரான பிரபாகரனையே சாரும். இவர் கட்டி
வளர்த்த புலி இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும்
தமிழீழ சுதந்திரப் போராட்டத்தை ஒரு புரட்சிகரமான
புதிய சகாப்தத்தில் பிரவேசிக்கச் செய்தது. திசைதெரியாது
தடுமாறிய தமிழரின் அரசியல் போராட்டம் ஆயுதப் போர்

வடிவ பரிணாமம்பெற்று ஒரு உயர்ந்த நிலைக்கு முன்னேற்றம் கண்டது.

உலகெங்கும் கொரில்லாப் போர்முறையானது ஒரு விடுதலைப் போராட்ட வடிவமாக வலுப்பெற்று வருகிறது. இரண்டாவது உலக யுத்தத்தை அடுத்து, இன்றுவரை, கிட்டத்தட்ட 50 நாடுகளில் கொரில்லாப் பாணியிலான ஆயுதப் புரட்சிப் போராட்டங்கள் தலைதூக்கியிருக்கிறது. காலனிய, ஏகாதிபத்திய சக்திகளின் அடக்குமுறையை உடைத்தெறிய கொரில்லாப் போர்முறையைக் கையாண்டு எத்தனையோ நாடுகள் விரசுதந்திரம் பெற்றுள்ளன. சீனு வியட்னும், கியூபா, அல்ஜீரியா, அங்கோலா, மொசாம்பீக் கினி, சிம்பாவே, நிகராக்குவா போன்ற நாடுகள் கொரில்லாப் போர்முறைத் திட்டத்தைக் கையாண்டே வெற்றிகள் ஈட்டின. இன்னும் எத்தனையோ நாடுகளில் கொரில்லாப் போர்முறை தழுவிய விடுதலைப் போராட்டங்கள் வெற்றிப் பாதையில் வீறுநடைபோடுகின்றன. புரட்சிகர ஆயுதப் போராட்ட யுக்திகளில் கொரில்லாப் போர்முறையானது ஒரு தலைசிறந்த போர்க்கலை. ஒரு பலம்வாய்ந்த அடக்குமுறை அமைப்புக்கு எதிராக, பலம்குன்றிய மக்களால் தொடுக்கப்படும் மிக சக்திவாய்ந்த போராயுதம். எந்தவொரு பிரமாண்டமான இராணுவ இயந்திரத்தையும் நிலைகுலைந்து நடுங்கவைக்கும் போர்த் தந்திரோபாயம், இந்தக் கொரில்லாப் போர்முறையானது உலகளாவிய ரீதியில் ஒடுக்கப்படும் மக்களினத்தில் பிரபல்யம் பெற்றிருப்பினும் இப்போர் முறையை அதன் திட்ப நுட்பங்களுடன் தமிழீழ அரசியல் போர் அரங்கில் அறிமுகம் செய்து, அதனை முன்னெடுத்துச் செல்வது எமது விடுதலை இயக்கமாகும்.

கொரில்லாப் போராட்டம் பற்றியோ அல்லது உலக விடுதலை இயக்கங்களின் போர் முறைகள் பற்றியோ எவ்விதமான விளக்கத் தெளிவற்ற அரசியல் வாதிகளும், பழைய மரபு மார்க்சீயவாதிகளும் ரொட்சியவாதிகளும் எமதுபுரட்சிகர ஆயுதப் போராட்டத்தை 'தனிநபர் பயங்கரவாதம்' என்னும் கோட்பாட்டில் இன்னும் விமர்சித்து வருகிறார்கள். கொரில்லாப் போர் முறையைக் கண்டிக்கும் வேறுசிலர் தாம் மக்கள் போராட்டம் நடத்தப் போவதாக பிதற்றி வருகிறார்கள். இவர்கள் எல்லோரினதும் குழப்பத்திற்கு பிரதான காரணம் கொரில்லாப் போராட்டம்பற்றிய விளக்கக் குறைவாகும். இவர்கள் இன்னும் பழைய மரபு மார்க்சீய கோட்பாடுகளில் சிறையுண்டு கிடப்பதால் நவயுகப் புரட்சிப் போராட்ட வரலாறுகளையும், அப்போராட்ட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட புதிய மார்க்சீய புரட்சிச் சிந்தனைகளையும் கிரகித்துக்கொண்டதாகத் தெரியவில்லை.

ஒவ்வொரு தேசிய விடுதலைப் போராட்டமும் தனக்கே உரித்தான வரலாற்று வளர்ச்சியையும், தனித்துவமான எதார்த்த சூழ்நிலைகளையும், இவற்றை எல்லாம் அனுசரித்து

வரிக்கப்பட்ட போராட்ட வடிவத்தினையும் கொண்டிருக்கிறது. எமது விடுதலைப் போராட்டமும் அதற்குரிய தனித்துவமான புறநிலைகளையும் வரலாற்றினையும் கொண்டது. இந்த சூழ்நிலைகளின் நிதர்சனத்திற்கு ஏற்பவே எமது போராட்ட வடிவமும் நெறிப்படுத்தப்பட்டிருக்கிறது. எமது பூகோள சூழ்நிலைகள், எமது எதிரியின் நிலைப்பாடு, சதா புதிய திருப்பங்களை அடைந்துவரும் அரசியல் சூழ்நிலை, இவற்றையெல்லாம் ஆய்வுசெய்தே எமது போர்முறை முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. இதன் காரணமாகவே எமது ஆயுதப் போராட்டமானது வெற்றிப் பாதையில் விரிவடைந்து முன்னேறியிருக்கிறது. இதன் காரணமாகவே மக்கள் எமக்கு பக்கபலமாக நிற்கிறார்கள். மக்களின் ஆதரவின்றி, மக்களின் நேரடிப் பங்களிப்பின்றி ஆயுதப் போராட்டம் நிலைத்து நிற்காது என்பது எமக்கு நன்கு தெரியும். கொரில்லாப்போர் என்பதே ஒரு வெகுசனப் போராட்டம். தேசிய விடுதலைப் பரிணாமம்பெற்ற எமது ஆயுதப் போராட்டத்தில் மக்களை அணிதிரட்டி ஒரு வெகுசன ஆயுதப் புரட்சிப் போர்மூலம் விடுதலையை வென்றெடுப்பதே எமது அரசியல் — இராணுவத் திட்டமாகும்.

புரட்சிகர ஆயுதப் போரின் ஒரு வடிவமான கொரில்லாப் போராட்டம்பற்றி சோசலிச தத்துவார்த்த விளக்கங்களைக் கொண்டபடைப்புகள் நிறையவுண்டு. கொரில்லாப் போரின் தன்மை, போர் முறைத் திட்டம், போராட்ட யுக்திகள், பொதுமக்களுக்கும் போராளிகளுக்கும் மத்தியில் நிலவ வேண்டிய உறவுகள், இராணுவப் போரின் அரசியல் முக்கியத்துவம் ஆகியனபற்றி புரட்சித் தலைவர்கள் தமது போராட்ட அனுபவங்களின் அடிப்படையில் ஆழமான கருத்துகளை முன்வைத்திருக்கிறார்கள். இக் கருத்துகளும் கோட்பாடுகளும் அந்தந்த நாடுகளின் வரலாற்று சூழ்நிலைக்கு பொருந்துவன. ஆயினும் உலகப் புரட்சி அனுபவங்களைப் படித்தறிவதன் மூலம் தமிழீழப் போராளிகளின் பார்வைகள் கூர்மையடையும். கொரில்லாப் போர்பற்றி புரியாது குழம்புவர்களுக்கும் ஒரு அறிமுக விளக்கமாகவும் அமையும்.

கொரில்லாப் போராட்டத்தை அறிமுகம் செய்யும் நோக்காகக்கொண்ட இவ் வெளியீட்டில் சே குவாரா, ரெஜி டெப்ரே, மாவோ ஆகியோரின் தத்துவார்த்த எழுத்துக்களிலிருந்து சில முக்கிய பகுதிகளை மொழிபெயர்த்து வெளியிடுகிறோம். அடுத்தடுத்து வரும் பிரசுரங்களில் ஆயுதப் போராட்டம் பற்றிய மற்றைய தத்துவ நூல்களிலிருந்து மொழி பெயர்ப்புகளை வெளியிடுவோம்.

**புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்**

அரசியற் குழு
தமிழீழ விடுதலைப் புலிகள்.

(செகுவாராவின், **கொரில்லாப் போராட்டம்** என்ற நூலிலிருந்து சில பகுதிகள். **கொரில்லா போராட்டத்தின் சாராம்சம்** என்ற அத்தியாயத்திலிருந்து.)

பட்டிஸ்டாவின் சர்வாதிகாரத்தைத் தோற்கடித்த கியூபா மக்களின் ஆயுத போராட்ட வெற்றியானது உலகப் பத்திரிகைகள் விமர்சித்ததுபோல ஒரு வீரகாவியம் மட்டுமல்ல; இவ்வெற்றியானது லத்தீன் அமெரிக்க வெகுசன போராட்டம் பற்றிய பழைய சித்தாந்தத்தில் புரட்சிகரமான சிந்தனையைத் தூண்டிவிட்டது. கொரில்லாப் போராட்டத்தின் மூலம், ஒரு அடக்குமுறை ஆட்சியிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளும் மாபெரும் சக்தி மக்களுக்குண்டு என்பதை கியூபா புரட்சி தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டியது.

லத்தீன் அமெரிக்க புரட்சிகர இயக்கங்களின் போராட்ட நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட மட்டில் கியூபா புரட்சியானது மூன்று முக்கிய பாடங்களைப் பகர்கிறது என நாம் கருதுகிறோம்.

1. ஒரு இராணுவத்திற்கு எதிரான யுத்தத்தில் வெகுசன சக்திகள் வெற்றியடைவது என்பது திண்ணம்.

2. ஒரு புரட்சியை மேற்கொள்வதற்கான சகல சூழ்நிலைகளும் பரிணமம் பெறும்வரை காத்திருப்பது அவசியமில்லை. ஆயுதக் கிளர்ச்சியானது அந்தப் புரட்சிகர சூழ்நிலையைப் பிறப்பிக்கும்.

3. பின்தங்கிய லத்தீன் அமெரிக்க நாடுகளில் கிராமப்புற சூழ்நிலையே ஆயுதப் போராட்டத்திற்கு சிறந்த அரங்காகும்.

இம்மூன்று கோட்பாடுகளில், முதல் இரண்டும் போலிப் புரட்சிவாதிகளின் தோல்விகர மனப்பான்மைக்குச் சவாலாக அமைகிறது. ஒரு பயிற்சி பெற்ற இராணுவத்திற்கு எதிராக ஒன்றுமே செய்ய முடியாது என்ற போலிச் சாக்கில் இப்புரட்சிவாதிகள் செயலற்று இருப்பது மட்டுமன்றி—ஒரு

புரட்சிக்கான அகப்புற, வெளிப்புற சூழ்நிலைகளைத் துரிதப் படுத்துவதை விட்டுவிட்டு, அவை தாமாக, தன்னிச்சையாக உருவாகும் என்ற கற்பனையில் சும்மா கைகட்டிக் காத் திருப்பர்.

முதலில் இந்தக் கேள்வியை எடுத்துக் கொள்வோம். ஒரு கொரில்லாப் போராட்ட களத்தில் போராடுவோர் யார்? ஒரு புறத்தில் ஒடுக்கு முறையாளன்; அவனது கூலிப் படையான இராணுவப் பயிற்சி பெற்ற கட்டுப்பாடுடைய பலமாக ஆயுதம் தரிக்கப்பட்ட, பெரும்பாலும் வெளிநாட்டு உதவிபெறும் இராணுவம்; இந்த இராணுவத்திற்கு முண்டு கொடுப்பதும் ஒடுக்குவோரின் சேவையிலுள்ளதுமான பணித் துறை ஆட்சி அமைப்புகள். மறுபுறத்தில் ஒரு தேசத்தின் அல்லது பிராந்தியத்தின் மக்கள் கூட்டம். இங்கு முக்கிய மாகக் குறிப்பிடவேண்டியது என்னவென்றால், கொரில் லாப் போராட்டம் என்பது ஒரு மக்கள் யுத்தம். ஒரு வெகு சனப்போர். கொரில்லா அணியானது மக்களின் போராட்ட முன்னணிப் படை, மக்களின் ஆயுத மையக்கரு. இந்தக் கொரில்லா அணி தனது பெரும்பலத்தை மக்களிடமிருந்தே பெறுகிறது. ஆட்பலம், ஆயுத பலத்தில் பின் தங்கிய நிலை யில் இருந்தாற்போல ஒரு கொரில்லா அணி இராணுவத்தை விட பலம்குன்றியது எனக் கருதிவிடக் கூடாது. ஒரு சில ஆயுதங்களை மட்டும் வைத்திருப்பினும் கொரில்லா யுத்தத் தில் ஈடுபட்டிருப்போருக்கு பக்கபலமாக பெரும்பான்மை மக்களின் ஆதரவு இருந்து வரும்.

ஒரு கொரில்லா வீரனுக்கு தனது பகுதியில் வாழும் மக் களின் முழு உதவியும் தேவைப்படுகிறது, இது ஒரு இன்றி யமையாத வரையறை. ஒரு பிரதேசத்தில் இயங்கும் கொள்ளைக் கோஷ்டிகளின் நிலையை எடுத்துப் பார்த்தால் இது புலனாகும். ஒரு கொரில்லா அணியின் சகல தன்மை களையும் இவர்களிடம் காணலாம், கட்டுப்பாடு, வீரதீரம் தலைவனுக்கு மதிப்பளித்தல், சுற்றுடல் பற்றிய அறிவு, போராட்ட யுத்திகள் பற்றிய தெளிந்த விளக்கம், இப்படி யாக. மக்கள் ஆதரவு என்ற ஒரேயொரு அம்சம்மட்டும் இவர் களுக்கு கிடையாது. ஆனதினால் இக்கோஷ்டிகள் இறுதியில் பிடிபட்டு மக்கள் சக்தியால் அழிக்கப்படுவது திண்ணம்,

ஒரு கொரில்லாப் போராளி எதற்காகப் போராடு கிறான்? ஒரு கொரில்லா அணியின் இயங்குமுறையை ஆய்வு செய்ததிலிருந்து. அதன் போராட்ட வடிவங்களை அவதா னித்ததிலிருந்து அதன் வெகுசனத் தளத்தைப் புரிந்து கொண்டதிலிருந்து, இந்தக் கேள்விக்கு நாம் பதிலளிக்க முடியும். கொரில்லாப் போராளி என்பவன் ஒருசமூக சீர் திருத்தவாதி. இதுதான் எமது தவிர்க்க முடியாத முடிவு. அடக்குமுறைக்கு எதிராக ஆவேசம் கொள்ளும் மக்கள் எழுச் சியால் உந்தப்பட்டே ஒரு கொரில்லாப் போராளி ஆயுதம்

ஏந்துகிறுன். நிராயுதபாணிகளாக நிற்கும் தனது சகோத ரர்களே இழிவுநிலேக்கும் அவல நிலேக்கும் ஆளாக்கி வைத் திருக்கும் சமுதாய அமைப்பை மாற்றுவதற்காகவே ஒரு கொரில்லாப் போராளி போராடுகிறுன். ஒரு காலகட்டத் தில், மக்களே நசுக்கிவைத்திருக்கும் ஆட்சியமைப்புகளுக்கு எதிராக ஆயுதமேந்தும் அவன், இவ்வமைப்புகளே அடி யோடு மாற்றும் இலட்சியத்தில் ஆற்றல் விசையுடன் தன்னே அர்ப்பணிக்கிறுன்.

போட்டியிடும் இரு தரப்பினர் ஒருவரை ஒருவர் ஒழித் துக்கட்ட முயலும் போராட்டமே யுத்தம் எனப்படும். வன் முறையைப் பிரயோகிப்பது மட்டுமன்றி, தமது இலக்கை அடைய இவர்கள் சகல விதமான சூழ்ச்சிகள், தந்தி ரோபாயங்களேயும் பாவிக்கத் தயங்க மாட்டார்கள். போராடுவோரின் இலக்குகள் பற்றிய ஆய்வு, அவ்வில க்குகளே அடைவதற்கு அவர்கள் கையாளும் வழிவகைகள் ஆகிய வைபற்றி விளக்கம் அளிக்கும்கோட்பாடுகளே, போர் முறைத்திட்டம் (STRATEGY) போர் யுக்திகள் (TACTICS) எனக் குறிப்பிடுவதுண்டு. இந்த வழிமுறைத் திட்டங்கள் எதிரியின் சகல பலவீனமான அம்சங் களேயும் படித்தறிந்து, அவற்றை எவ்வழியில் சாதகமாகப் பயன்படுத்தலாம் என்ப தனே விளக்குகின்றன.

## கொரில்லாப் போர்முறைத் திட்டம் (GUERRILLA STRATEGY)

ஒட்டுமொத்தமான யுத்த சூழ்நிலேயில் போர் இலக்குகள் பற்றி ஆய்வு செய்தலேயும், அவ் இலக்குகளே அடைய கை யாளும் சகல வழிமுறைகளேயும் போர்முறைத் திட்டம் எனக் கொரில்லாப் போர் அகராதி கூறுகிறது. கொரில்லா அணியின் கண்ணேட்டத்திலிருந்து சரியான போர் முறைத் திட்டத்தை வரித்துக் கொள்வதாயின் எதிரியின் யுத்த நோக் கம், செயற் திட்டம் என்ன என்பதை ஆழமாக அலசிக் கொள்வது அவசியமாகிறது. எதிர் சக்தியை முற்றுக ஒழித்துக் கட்டுவதுதான் எதிரியின் இலக்காக இருக்குமாயின் கொரில்லா அணியின் சகல அங்கங்களேயும் சர்வநாசம் செய் யும் நோக்கில் அவர்கள் செயல்படுவர். தமது இலக்கை அடைவதற்கு எதிரியிடமுள்ள மூல வளங்கள் என்ன— அதா வது. ஆட்பலம், ஆயுத பலம், அசைவு ஆற்றல், வெகுசன ஆதரவு. தலேமைப்பீட செயற்திறன்— என்பன பற்றி கொரில்லா போர்வீரன் படித்தறிவது அவசியம். எதிரியின் இராணுவத்தைத் தோற்கடிப்பதே எமது இறுதி இலக்கு என் பதை மனதில் சதா நினைவு கொண்டு, இந்த ஆய்வுகளின் அடிப்படையில் எமது போர்முறைத் திட்டத்தை நாம் நெறிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

சில அடிப்படையான விசயங்களைப் படித்தறிவது அவசியமாகிறது. உதாரணமாக, ஆயுதங்களையும், அவற்றைப் பாவிக்கும் முறையையும் எடுத்துக் கொள்வோம். எதிரியின் ஆயுதங்கள், வெடிகுண்டு, ரவைகள் (ammunition) எதிரியின் நடவடிக்கைகள் போன்றவற்றை நாம் படித்தறிய வேண்டும். ஏனென்றால் கொரில்லா படைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பிரதான வளமாக அமைவது எதிரியின் ஆயுதங்களே. எதிரியால் பாவிக்கப்படும் ஆயுதங்களையே நாமும் தேர்ந்தெடுப்பது முக்கியம் ஏனெனில் கொரில்லா அணிக்கு மிகவும் தேவைக்குரியதான, பிரச்னைக்குரியதான வெடிகுண்டு, ரவைகள் போன்ற ஆயுத தளவாடங்களை எதிரியிடமிருந்தே நாம் பெற்றெடுக்க முடியும்.

ஆரம்பத்திலிருந்தே, அழிவிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வது ஒரு கொரில்லாப் போர்வீரனின் முக்கிய கடமையாகிறது. காலப் போக்கில் கொரில்லா அணி அங்கத்தவர்கள் இந்தப் போராட்ட வாழ்க்கை முறையை இலகுவில் தழுவிக் கொள்வர். எதிரியைத் தாக்குவதும், தப்பித்துக் கொள்வதும் நாளாந்த நடவடிக்கைகளாக மாறும் பட்சத்தில் போராட்டம் இலகுவான கைங்கரியமாகிவிடும். போராட்டம் இக்கட்டத்தை அடையும்போது அதாவது எதிரி அணுகமுடியாத நிலையில் போராளிகள் தம்மை நிலைப்படுத்திக் கொண்டபின் அல்லது எதிரி எதிர்கொண்டு தாக்கத் தயங்கும் அளவுக்கு போர் சக்திகளை அணி திரட்டிக் கொண்ட பின், கொரில்லா வீரர்கள் எதிரியைப் படிப்படியாகப் பலவீனப்படுத்தும் போர்முறையைக் கையாள வேண்டும்.

இந்தத் தாக்குதல்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட வேண்டும். போராட்டப் பிரதேசத்திலுள்ள எதிரி இராணுவத்தினரை தூங்கவிடக்கூடாது. அவர்களது தளங்கள் தொடர்பாகத் தாக்கப்பட்டு அழிக்கப்பட வேண்டும். வட்டவடிவில் சதா சூழப்பட்டிருப்பதாக எண்ணி அவர்கள் பீதியடையும் நிலையை உருவாக்க வேண்டும்.

இதை எல்லாம் சாதிப்பதற்கு மக்களின் பரிபூரண ஒத்துழைப்பும் பிராந்தியத்தின் பூரணமான பூகோள அறிவும் அத்தியாவசியம். இந்த இரண்டு தேவைகளும் கொரில்லாப் போர் வீரனின் வாழ்க்கையில் ஒவ்வொரு நிமிடத்தையும் பாதிக்கச் செய்கிறது. ஆகவே, நிகழ்கால, எதிர்கால போர் நடவடிக்கைகளைத் திட்டமிடும் அதேவேளை, வெகுசன பிரச்சார வேலைகளையும் தீவிரப்படுத்தல் அவசியம். புரட்சியின் நோக்குகள் இறுதி இலக்குகள் என்ன என்பதை விளக்குவதுடன் மக்களை எதிரி வெற்றி கொள்வது என்பது ஒரு போதும் முடியாத காரியம் என்ற மறுக்கமுடியாத உண்மையையும் மக்களுக்குப் புகட்டிவர வேண்டும். இந்த உண்

மையை உணரமுடியாத எவனும் ஒரு கொரில்லா யுத்த வீரனுக முடியாது.

இந்த பொதுசன அரசியல் வேலைகள், முதலில் இரகசியத்தைக் காபந்து செய்வதையே நோக்காகக் கொண்டிருக்க வேண்டும். காண்பதையோ, கேட்பதையோ எவருக்கும் வெளியிடக்கூடாதென போராட்டம் நிகழும் சமூக சூழலிலுள்ள ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு விவசாயிக்கும் எடுத்துரைக்க வேண்டும். பின்னர், புரட்சியில் முழு விசுவாசமும் இரகசிய காப்புறுதிக்கு பாத்திரமானவர்களிடமிருந்து உதவியைக் கோரலாம். காலப் போக்கில் இப்படியான நபர்களிடமிருந்து தகவல் தொடர்புகளை ஸ்தாபித்தல், ஆயுதங்கள் பொருட்களைக் கொண்டு செல்லுதல், வழிகாண்பித்தல்—போன்றவற்றில் உதவியைப் பெறலாம். இதற்கப்புறம், தொழில் நிலையங்களில் வெகுசன எதிர்ப்பு நடவடிக்கைகளை ஒழுங்கு செய்யலாம். இந்நடவடிக்கைகள் இறுதியில் பொது வேலை நிறுத்தமாக பரிணமம் பெறும்.

ஒரு கொரில்லாப் படையானது. ஆயுதத்தில் குறிப்பிடத்தக்க அளவுபலம் பெற்று, போராளிகளையும் பெருக்கிக்கொண்டதும், புதிய போர் அணிகளை உருவாக்குவது அவசியம். இதனைத் தேனீக்களின் வாழ்க்கை முறையுடன் ஒப்பிடலாம். இனப்பெருக்க சூழலில், தாய்த் தேன் கூட்டிலிருந்து பிரசவமாகும் ஒரு புதிய இராணித் தேனீ எவ்விதம் தனது தேனீப் பட்டாளத்துடன் வெளிக்கிளம்பி, ஒரு புதிய பிரதேசத்தில் பிரவேசிக்கிறதோ, அதே போலவே நாம் இந் நடவடிக்கையையும் நோக்க வேண்டும். தாய்க்கூட்டில் முக்கிய கொரில்லாத் தளபதியை ஆபத்துக்குறைந்த, பாதுகாப்பான சூழலில் வைத்துக்கொண்டு புதிய கொரில்லா அணிகள் எதிரியின் புதிய பிரதேசங்களை ஊடுருவ வேண்டும்.

## கொரில்லா போர் யுக்திகள்

## (GUERRILLA TACTICS)

பாரிய போர்த்திட்ட இலக்குகளை அடைவதற்கு கையாளப்படும் நடைமுறை வழிவகைகளையே போர் யுக்திகள் என இராணுவ பாசையில் சொல்லப்படுகிறது.

போர் யுக்திகளானது, ஒரு புறத்தில், போர்முறைத் திட்டத்திற்கு வலுவேற்றுவதாக இருப்பதுடன். மறுபுறத்தில் அவை போர்த்திட்டத்தின் உள்ளீடான ஒழுங்கு விதிகளாகவும் அமைந்து விடுகின்றன. ஒரு இலக்கை அடையும் வழிமுறைகள் என்ற ரீதியில், போர் யுக்திகளானது இறுதி இலட்சியத்தைவிட நெகிழ்வானதாக, மாற்றியமைக்கக் கூடியாதாக இருக்கும். ஆகவே போராட்டத்தின்போது நிலை

மைக்கு ஏற்றவாறு போர் யுக்திகளை சதா மாற்றியமைத்துக் கொள்ளலாம். ஆயினும் சில போர் யுக்திகள் போராட்டம் பூராவும் நிலையானதாகவும் மற்றவை மாற்றக்கூடியதாகவும் அமையலாம். நாம் முதலில் கவனத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டியது என்னவென்றால் எதிரியின் இராணுவ நடவடிக்கைகளுக்கு ஏற்றவாறே கொரில்லாப் போர் யுக்திகள் நெறிப்படுத்திக் கொள்ளப்பட வேண்டும் என்பதுதான்.

அசையும் ஆற்றல்தான் (mobility) ஒரு கொரில்லா அணியின் அடிப்படையான அம்சம் எனலாம். அதாவது துரித கதியில் இடம்விட்டு இடம் பெயரும் ஆற்றல் இந்தப் போர் உபாயத்தின் காரணமாக கொரில்லா வீரர்கள் போராட்ட களத்திலிருந்து ஒரு சில நிமிடங்களில் வெகு தூரத்திற்கு இடம் பெயர்ந்துவிடலாம். சில மணி நேரத்தில் ஒரு பிராந்தியத்திலிருந்தே வெளியேறிவிடலாம் இப் போர் யுக்தி காரணமாக போர் அரங்குகளை சதா மாற்றிக் கொள்ளவும், எதிரி சுற்றிவளைத்துக் கொள்வதைத் தவிர்க்கவும் முடிகிறது. போராட்ட சூழலில் சில சந்தர்ப்பங்களில் கொரில்லா அணியை வளைத்துப் பிடித்து அவர்களை வலுவந்தமாக ஒரு சண்டைக்கு இழுத்து அழிப்பதையே கடைசி மார்க்கமாக எதிரி கடைப்பிடிக்க முனையலாம். அநுகூலமற்றதும் ஆபத்தானதுமான இந்தப் பொறியில் சிக்காமல் இருப்பதற்கு ஓடித் தப்புவதே ஒரே வழியாகும்.

சதா அசைவிலுள்ள போரின் நுணுக்கத்தை இருவர்—நடனத்துடன் ஒப்புவமைப்படுத்தலாம். எதிரியின் நிலையை அல்லது முன்னேறிவரும் படைகளை கொரில்லா அணிகள் நான்கு முனைகளிலிருந்தும் சுற்றி வளைத்துக் கொள்கின்றன. ஒவ்வொரு முனையிலும் ஐந்து அல்லது ஆறு பேர்களாக, எதிரியால் சூழப்படாத தொலைவிலிருந்து கொரில்லா அணிகள் எதிரியை முற்றாகச் சுற்றுவளைத்துக் கொள்கின்றன. பின் ஒரு முனையிலிருந்து சண்டை ஆரம்பிக்கப்படுகிறது. எதிரி இராணுவம் அந்த இடத்தை நோக்கி நகரும். உடனே கொரில்லா வீரர்கள் அந்த இடத்திலிருந்து பின்வாங்கிச் செல்லர். பின் மற்றொரு முனையிலிருந்து கொரில்லாக்கள் சண்டையை ஆரம்பிக்கின்றனர். இராணுவம் அந்த இடத்தை நோக்கிச் செல்லும் அங்கிருந்தும் கொரில்லாக்கள் பின் வாங்கிச் செல்வர். இப்படியே எதிரிப் படைகளைச் சளைக்கச் செய்யலாம். பெரிய ஆபத்தை எதிர் நோக்காது எதிரியின் படைக்கலக் குண்டு சக்தியை பெருமளவு விரயமாக்கி, எதிரிப் படைகளின் மனவுறுதியையும் தளர்த்தி விடலாம். இந்தப் போர் உபாயத்தை இரவு வேளைகளிலும் கடைப்பிடிக்கலாம். எதிரியின் நிலைக்கு அருகாமையில் சென்று ஆவேசத்துடன் தாக்குதலை நடத்தலாம். ஏனெனில் இரவில் எதிரி சுற்றிவளைத்துக் கொள்வது கடின

மானதாக இருக்கும். இரவு வேளைகளில் நடமாடுவது கொரில்லாப் படைகளின் முக்கிய போரம்சமாகும். காட்டிக் கொடுபடும் அபாயத்தைத் தவிர்த்து எதிரியின் தளங்களை முன்சென்று தாக்குவதற்கும், புதிய பிராந்தியத்தில் நிலை கொள்வதற்கும் இரவு சூழ்நிலை பொருத்தமானதாக இருக்கும். ஆட்பலம் குறைந்திருப்பதால், எதிர்பாராத திடீர்த் தாக்குதலை மேற்கொள்ளும் அவசியம் கொரில்லாக்களுக்கு ஏற்படுகிறது. இந்த உபாயத்தின் பெரும் அநுகூலம் என்னவென்றால், தமக்கு உயிர்ச்சேதம் ஏற்படாத முறையில் எதிரிக்குப் பெரும் உயிர்ச்சேதத்தை விளைவிக்கும் வாய்ப்பு கொரில்லா வீரர்களுக்குக் கிட்டுகிறது. ஒரு புறத்தில் நூறு பேரும் மறுபுறத்தில் பத்துப் பேருமாக நிகழும் கைகலப்பில், இருதரப்பிலும் பரஸ்பரம் ஒரு உயிர்ச்சேதம் ஏற்படுமாயின் இந்த உயிரிழப்புகள் சமநிலையானதல்ல. எதிரியின் உயிரிழப்போ ஈடுசெய்யத்தக்கது, நூற்றில் ஒரு விகிதமான பலமிழப்பு. ஆனால் கொரில்லா அணியின் இழப்பை ஈடுசெய்ய நீண்டகாலம் பிடிக்கும். தலைசிறந்த பண்புகளையும் ஆற்றலையுமுடைய ஒரு வீரனைப் பறிகொடுப்பதுடன், கொரில்லாப்படைக்குப் பத்து விகிதமான பலமிழப்பு ஏற்படுகிறது.

ஒரு கொரில்லா வீரனின் மற்றொரு இயல்பு என்னவென்றால் எதற்கும் இசைவாக, சகல சூழ்நிலைகளையும் சமாளிக்கும். திறனாற்றலாகும். போராட்டத்தில் ஏற்படக்கூடிய எதிர்பாராத நிகழ்வுகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தக்கூடிய திறனாற்றல். பழமை சார்ந்த இராணுவப் போர் முறைக்கு மாறாக, ஒரு கொரில்லா வீரன் போரின் ஒவ்வொரு நிமிடத்திலும் புதிய யுக்திகளை, உபாயங்களைத் தானாகக் கண்டுபிடித்து எதிரியை சதா வியப்படையச் செய்கிறான்.

## ரெஜி டெப்ரேயின் 'புரட்சியில் புரட்சி' என்ற நூலிலிருந்து சில பகுதிகள்

நாம் ஒருபொழுதுமே நிகழ்காலத்தின் நிதர்சனத்தை முழுமையாகத் தரிசித்துக் கொள்வதில்லை வரலாறு என்பது மாறுவேடம் தரித்து முன்னேக்கிச் செல்கிறது. முன் னிகழ்ந்த காட்சியின் முகமுடியை அணிந்து கொண்டு, வரலாறுனது நாடக மேடையில் தோன்றும்போது நாடகத்தின் அர்த்தம் எமக்கு நழுவிவிடப் பார்க்கிறது. ஒவ்வொரு தடவையும் திரைகள் விலகிக் கொள்ளும்பொழுது, தொடர்ச்சியை நாம் மீண்டும் தொடர்பு படுத்திப் பார்க்க வேண்டியிருக்கிறது. இந்தத் தவறிற்கு வரலாற்றிலல்ல, எமது பார்வையில்தான் குறைகாண வேண்டும். கடந்தகால அநுபவத்திரட்சியில் நிலைபெற்ற நினைவுகள், படிவங்கள் எமது பார்வையை மழுக்கச் செய்கிறது. நிகழ்காலம் புரட்சியாக மலர்ந்தபோதும். நிகழ்காலத்தில் இறந்தகால நிழல்களையே நாம் காண்கிறோம்.

வரலாற்றல் வரையறுக்கப்பட்டு, புனிதமாக்கப்பட்ட கோட்பாடுகள் கொள்கைத் திட்டங்களின் அடிப்படையில் கியூபா புரட்சியின் தாக்கம் பற்றி ஏற்கெனவே லத்தீன் அமெரிக்காவில் அலசி ஆராயப்பட்டிருக்கிறது. இதன் காரணமாகத்தான் இப்புரட்சி பெரும் குழுறலை ஏற்படுத்திய போதும். அது விளைவித்த அதிர்வு இப்போது தணிந்து போய் இருக்கிறது. கொந்தளிப்பு இன்று அடங்கியபோதும் கியூபா புரட்சியில் புறக்கணிக்கப்பட்டிருந்த அதன் உண்மையான தனிச்சிறப்பு, அது புகட்டும் பாடத்தின் ஆழம், ஆகியனபற்றி இப்போது புதிதாகக் கண்டுணரப்படுகிறது. இதனுல் கொரில்லாப் போராட்டம் பற்றி ஒரு புதிய பார்வை இப்போது பரிணமிக்கத் தொடங்கியுள்ளது,

முதலாளித்துவ அரசின் ஆயுத பலத்திற்கு எதிராக நடாத்தப்படும் ஆயுதப் போராட்டத்தின் பலாபலனுகவே சோசலிசப் புரட்சி சாத்தியமாகிறது எனக் கியூபா ஆரம்பத்திலிருந்தே எண்ணியது. இந்த பழைய சரித்திர விதிக்கு (போர் முறை நியதி என்றும் கொள்ளலாம்) போர் உபாயம் மூலம் நிறைவளிக்கப்பட்டது கியூபாவில்தான் எனவும் கருதப்பட்டது. சிலர் கொரில்லாப் போராட்டத்தை வெகுசன ஆயுதக் கிளர்ச்சியுடன் (insurrection) இனம்காண முனைந்தனர். ஏனென்றல் 1917 (ருஷ்யப் புரட்சியின்)

மூலவடிவம் வெகுசன ஆயுத கிளர்ச்சியாக அமைந்தது, இந்த ஆயுதக் கிளர்ச்சியை அடிப்படையாக வைத்தே லெனின், ஸ்டாலின் போன்றோர் சித்தாந்தக் கோட்பாடுகளை நெறிப்படுத்தினர். மத்திய அரசுமீது உடனடியான தாக்குதலைக் குறிக்கும் வெகுசன ஆயுதக் கிளர்ச்சி, அது தோற்றம் கொள்ளும் நிலைமைகள் பற்றி விளக்கும் இக் கோட்பாடுகளுக்கும் இன்றைய சூழ்நிலைக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. இவைபற்றிக் காலத்துக்குக் காலம் வீணான விவாதங்கள் நடைபெற்றதுதான், மிச்சம். ஆனால் இந்த வேறுபாடு காலகதியில் புலனாகத் தொடங்கியது.

அடுத்ததாக, லத்தீன் அமெரிக்கக் கொரில்லாப் போராட்டத்துடன் இனம் காணப்பட்டது. நாட்டுப் புறங்களிலிருந்து நகரங்களைச் சுற்றிவளைக்கும் உபாயங்களைக் கொண்ட ஒழுங்குமுறை சாராத போராட்டமாதலால் இவ்விரு போர்முறைகளும் ஒன்று படுத்திப் பார்க்கப் பட்டது. இந்தக் குழப்பம் முன்னதைவிட மிகவும் ஆபத்தானதாகும்.

ஆயுதப் புரட்சிப் போராட்டமானது ஒவ்வொரு கண்டத்திலும் ஒவ்வொரு நாட்டிலும், தனக்கே உரித்தான தனித்துவமான யதார்த்த சூழ்நிலைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது இவை இயற்கையாக எழுவதில்லை. அன்றி தெளிவானதாகத் தென்படுவதில்லை. ஒவ்வொரு போராட்டத்தை எடுத்துக் கொண்டாலும் நீண்ட காலத் தியாகத்தின் பின்னரே ஆயுதப் போர்முறை பற்றிய விழிப்புணர்வும் விளக்கமும் ஏற்பட்டிருக்கிறது.

சோவியத் மாதிரியான வெகுசன ஆயுதக் கிளர்ச்சி காலனித்துவத்திற்கு உட்படுத்தப்பட்ட ஆசிய கண்டத்தில் வெற்றிபெறாது என்பது இன்று தெட்டத்தெளிவாகியுள்ளது. இதனை உணர்ந்து கொள்வதில்தான் உண்மையான பொதுவுடைமைப் போராளிகள் வெற்றிக்கான தமது ஆரம்பப் பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

பீடல் காஸ்ரோ ஒறியென்ரே (கியூபா) கரையில் இறங்கு முன் மா—சே—துங்கின் ராணுவ எழுத்துக்களை வாசிக்காமல் இருந்தது அதிர்ஷ்டவசமானது என்றே சொல்ல வேண்டும். அதனால் தனது சொந்த அநுபவத்தைக் கொண்டு, அந்த சூழ்நிலைக்கு ஏற்ப. அந்தப் பிராந்தியத்திற்கு அமைய, தனது போர்முறைத் திட்டத்தை அவனால் நெறிப்படுத்த முடிந்தது. போராட்டம் முடிவடையும் கட்டத்தில் போர் யுக்திகள் வரிக்கப்பட்ட பின்னர்தான் மாவோவின் எழுத்துக்கள் புரட்சிப் போராளிகளுக்குக் கிட்டியது.

லத்தீன் அமெரிக்கப் புரட்சி இயக்கங்கள் எதிர்கொள்ளும் பின் வாங்கல்கள். இடையூறுகளை மிகவும் அற்பமானவை என்றே சொல்ல வேண்டும். நாளைய மகத்தான போராட்ட காவியங்களின் முன்னுரைகளாக அவற்றை அந்தக் குறுகிய காலக்கட்டத்தில் மதிப்பிடும்போது அவை மிகவும் சில்லறையானவை. எல்லாப் புரட்சிகளும் ஆரம்ப காலகட்டத்தில் இந்தச் சோதனைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. இதில் ஆச்சரியம் என்னவென்றால். இந்த ஆரம்ப தவறுகள், தடங்கல் எல்லாவற்றையும் கொரில்லா இயக்கங்கள் எப்படியோ சமாளித்துப் பிழைத்துக் கொள்கின்றன. பிடல் காஸ்ரோவைப் பொறுத்தவரை இது ஆச்சரியத்துக்குரியதுதான். வரலாற்றின் ஓட்டத்திற்கு ஒத்திசைவாக, அதன் ஈர்ப்புக்கு எந்த அளவில் இந்த புரட்சி இயக்கங்கள் இசைந்து செல்கின்றன என்பதனை இது நிரூபித்துக்காட்டுகிறது என்பது அவரது கருத்து; சர்வதேச போராட்ட அநுபவங்கள் போலியான பொதுப்பண்புகளைக் காட்டியபோதும் இந்த ஆரம்பகால பரிசோதனைகளில் புதுமையான புரட்சிக் கோட்பாடுகளை; போராட்ட வடிவங்களை நெறிப்படுத்த வேண்டும் என்பதால் பிழைகளும் தவறுகளும் எழுவது தவிர்க்க முடியாதது; ஆகையால் ஒரு புரட்சி இயக்கத்தின் மந்த நிலைக்கு அல்லது துரித வளர்ச்சி காணாத நிலைக்கு தோல்வி என்ற பதத்தை நாம் பாவிக்கக்கூடாது, எல்லாப் புரட்சிகர படிமுறைகளும், வழிமுறைகளும், நாம் ஏற்கெனவே குறிப்பிட்டது போல, ஆரம்பத்தில் தவறுகளை இழைத்தே தொடங்குகின்றன.

இன்று லத்தீன் அமெரிக்காவைப் பொறுத்தவரை ஒரு நிலையான, தெளிவான இராணுவப் பாதையுடன் ஒத்திசைவில்லாத அரசியற் பாதையைப் புரட்சிகரமானது என்று சொல்லவே முடியாது. புரட்சிப்பாதை எனக் கொள்ளப்படும் எந்த அரசியல் இலக்கும் இந்தக் கேள்விக்கு ஒரு திண்ணயமான பதில் அளித்துத்தான் ஆகவேண்டும். அதாவது, ஒரு முதலாளிய அரசின் அதிகார அமைப்பை தகர்த்தெறிவது எப்படி? அமெரிக்க ஆயுத உதவியால் சதா வலூவூட்டப்படும் இராணுவம் எனப்படும் அதன் முதுகெலும்பை முறிப்பது எப்படி? இந்தக் கேள்விக்கு கியூபா புரட்சியானது தனது சகோதர லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு ஒரு தகுந்த விடையைப் பகர்கிறது. நாட்டுப்புற சூழலில், நனகு தெரிவு செய்யப்பட்ட பிராந்தியங்களில் அமைந்த கொரில்லாப் போராட்டத்தின் வாயிலாக, படிப்படியாக கட்டி எழுப்பப்பட்ட ஒரு கொரில்லாப் படை மூலமே இது சாத்தியமாகும். போர்க் கலைத் திறனும், அசைந்து இயங்கும் ஆற்றலும் கொண்ட இந்தப் படை, மக்கள் இராணுவத்தின் கருவூலமாக, எதிர்காலத்தில் உருவாகப் போகும் சோசலிச அரசின் மையக் கருவாக அமைந்திருத்தல் அவசியம்

எந்த ஒரு இராணுவப் பாதையும் அரசியற் பாதையி லேயே தங்கியிருக்கிறது; அரசியற் பாதையையே வெளிப் பாடு செய்கிறது. கடந்த சில ஆண்டுகளாக அந்நியமான இராணுவக் கோட்பாடுகள் ஆயுதப் போராட்டம் என்ற ரீதியில் பரீட்சார்த்தம் செய்யப்பட்டு கொரில்லாப் போராட்டத்திற்கு முற்றிலும் மாறுபட்ட அர்த்தத்தைக் கொடுக்க விழைந்தன. இராணுவத் திட்டம் என்ற மாறு வேடத்தைப் பூண்டிருந்த இவை இறக்குமதி செய்யப்பட்ட அரசியல் சித்தாந்தங்களாகும். வேறு எங்கோ வேரூன்றிய இச் சித்தாந்தங்கள் முற்றிலும் மாறுபட்ட வரலாற்று சூழல் களில் பரிசோதனை செய்யப்பட்டன.

எத்தனையோ நாடுகளில் இன்று வழிகாட்டும் கொள் கைத் திட்டங்களாக வழிபாடுபட்டுவரும் இந்தக் கோட்பாடு கள் வெகுசன ஆயுதப் போராட்டத்தின் சாராம்சத்தையே கொன்றுவிடுவதாக அமைகின்றன. லத்தீன் அமெரிக்க சூழ் நிலைக்கும் அதன் நிதர்சன நிலைகளுக்கும் அந்நியமான புரட்சி அநுபவங்களிலிருந்து பெறப்பட்ட இந்த அரசியல் சித்தாந் தங்களை ஆய்வு செய்வது அவசியமானது.

## ரொட்சிசவாதமும் ஆயுதப் போராட்டமும்

ரொட்சிச வாதமானது புரட்சிகளின் சோசலிசத் தன் மைக்கு அதிமுக்கியம் கொடுக்கிறது. வெறும் சொற்சுலோகங் களை மட்டும் எழுப்பி புரட்சிகள் எல்லாம் சோசலிச மயமாக அமைய வேண்டுமென்று ஆயிரம் தடவைகள் குரல் எழுப்பி னுல்போல சோசலிசம் பிறந்துவிடப் போவதில்லை. இந்தப் பிரச்சனையின் மூலம் வெறும் சித்தாந்த ரீதியானதல்ல. எந்த வகையான அமைப்பு வடிவங்களால் சோசலிசப் புரட்சி சாத்தியமாகும் என்பதுதான் இங்கு முக்கியப் பிரச்சனை. இங்குதான் இவர்கள் கூறும் புரட்சி வெறும் கற் பனுவாதம் என்பதைக் கண்டுகொள்ள முடியும். இவர்களது பாதை புரட்சிக்கு இட்டுச் செல்லாது என்பது ஒரு புறமிருக்க ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கும் வெகுசன இயக்கங் களையுமே ஒழித்துக்கட்ட வழிவகுக்கும்.

ரொட்சிச இயக்கம்பற்றி குவாட்டமாலா கொரில்லா இயக்கமான ' எட்கார் இபாரா '' கீழ்க்கண்டவாறு குறிப் பிடுகிறது.

''ரொட்சிசவாதத்தின் முழு நிலைப்பாடுமே கொரில்லா இயக்கங்களின் புரட்சிகரசாரத்தைக் கொன்றுவிடுகிறது. கொரில்லா இயக்கம் ஒரு மக்கள் இராணுவமாக மலரும் என்

பதை மறுக்கிறது; எமது நாடுகளில் நிகழும் புரட்சிகரப் போர்களில் விவசாயப் பாட்டாளிகளின் பங்கை மறுக்கிறது. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு முன் நிபந்தனையாக ஏகாதிபத்தியத்தையும் அதன் அடிவருடிகளையும் இராணுவ ரீதியாக தோற்கடிக்கும் தேவையை மறுக்கிறது. ஆயுதப் போராட்டம் என்பது ஒரு நீண்டகாலக் கைங்கரியம் என்பதை மறைக்கிறது: வெகுசன ஆயுதக் கிளர்ச்சியானது குறுகிய கால விசயம் எனப் போலி நம்பிக்கை புகட்டுகிறது. தொழிற்சங்கம் வெகுசன நிறுவனங்கள் போன்ற அமைதி வழி அமைப்புகளை உருவாக்குவதில் புரட்சிகர முயற்சிகள் விரையம் செய்து, வெகுசன சக்திகளைக் கூறுபோட விழைகிறது.''

ரொட்சிசவாத கோட்பாடுகளை ஆழமாகப் பரிசீலனை செய்து பார்ப்போமாஞல் குழப்பகரமான தன்மைகளை நாம் காணக்கூடியதாக இருக்கும். முதலாவதாக. தொழிலாளர் வர்க்க மாதிரிப் படிவங்களான தொழிற்சாலை மையநிலையங்களையும் (factory cells) தொழிற்சங்க அமைப்புகளையும் விவசாய சூழலில் திணித்தல் (முதலாளித்துவ தலைநகரிலோ அல்லது ஒரு தொழிற்சாலையிலோ செயல்படக்கூடியது எதுவும் பழமையில் ஊறிப்போன (செவ்விந்திய) விவசாய சமூகத்தில் செல்லுபடியாகும் என எண்ணுவது போல ; இப்படியான திணிப்பின் பின்பு, முரண்பாடான முறையில், புரட்சியில் தொழிலாள வர்க்கத்தின் பங்கை குறைவாக மதிப்பிடுதல்; ஆயுதப் போராட்டத்தில் குழம்பிய நிலை, அதாவது ஆயுதப் போராட்டம் என்ருல் மத்திய அரசை நேரடியாக எதிர்கொண்டு தாக்கக்கூடிய ஒரு இராணுவத்தை நீண்டகால ரீதியில் உருவாக்குதல் என்றும் அல்லது பொல்சேவீக் புரட்சியின் பாணியில் நகரப்புற வெகுசன ஆயுதக் கிளர்ச்சிக்குத் திட்டமிடுதல் எனனும் குழம்பிய நிலை—அடுத்ததாக, விவசாய வர்க்கத்திற்கும், ஆளும் வர்க்கத்திற்கும் இடையிலான உற்பத்தி உறவுகள் பற்றி மிகவும் தெளிவற்ற நிலைமை. இப்படியாக சித்தாந்த குளறுபடிகள் பல. ஆஞல் ஒன்றைமட்டும் தெளிவாகக் கூறலாம். இவர்களது அலங்காரமான சித்தாந்தக் கருவியானது உண்மையில் ஒரு பொறியமைப்பாகும். விவசாயப் பாட்டாளிகளை நெறித்து விடும் பொறி- கிராமிய மக்களை பொது அரங்குகளில் பங்குபற்ற அழைத்தலும், பகிரங்க தொழிற்சங்கக் கூட்டங்களை நடாத்தக் கோருதலுமான இந்நடவடிக்கைகள் பொது மக்களை அடக்குமுறை சக்திகளின் ஒடுக்குமுறைக்கு ஆளாக்குவதாக முடியும். அதோடு அரசியல் முன்னணித் தொண்டர்களை காவல்துறையினருக்குக் காட்டிக் கொடுப்பதாக முடியும். இந் நடவடிக்கைகள் இறுதியில் மக்களை சிறைகளில் அல்லது புதை குழிகளில் தள்ளிவிடும்.

## ஆயுதப் போராட்டமும் பிரச்சாரமும்

'கொரில்லாப் போராட்டமானது அரசியல் நோக்கங்களையும் இலட்சியங்களையும் கொண்டது. இதனால் இப்போராட்டத்திற்கு வெகுசன ஆதரவு அத்தியாவசியமாகிறது. நேரடியாக மக்களின் ஆதரவை அணிதிரட்டுவதற்கு முன்பாக ஆயுதப் போராட்டத்தின் அவசியத்தை தர்க்கரீதியான காரணங்களுடன் மக்களுக்கு எடுத்து விளக்க வேண்டும். இவ்விதமான அணுகல் முறையில் தான் போராட்டம் உண்மையில் ஒரு மக்கள் யுத்தமாக மலரும். போராட்டத்தில் மக்களை நம்பிக்கை கொள்ளச் செய்வதாயின் நேரடியாக மக்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும். பேச்சுகளாக, பிரகடனங்களாக, விளக்கங்களாக மக்கள் மத்தியில் அரசியல் வேலையில், வெகுசன வேலையில் இறங்க வேண்டும். ஆரம்பத்தில் கொரில்லாப் படையின் முன்னணி வீரர்கள் சிறு பிரச்சாரக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு கிராமப் புறங்களில் அரசியல் வேலையை ஆரம்பிப்பர். இவர்கள் கிராமம் கிராமமாகச் சுத்தித் திரிந்து அங்குமிங்குமாக கூட்டங்களை நடாத்தி சமுதாயப் புரட்சியின் இலட்சியங்களை மக்களுக்கு எடுத்து விளக்குவர். கிராமங்கள் தோறும் இரகசிய மையநிலையங்களை அமைத்தல், தொழிற்சங்க போராட்டங்களுக்கு ஆதரவளித்தல் அல்லது ஆரம்பித்துவைத்தல்- புரட்சியின் கொள்கைத் திட்டத்தை மீண்டும் மீண்டும் மக்களுக்கு எடுத்து விளக்குதல்—இப்படியாக இவர்களது வெகுசன வேலை அமைந்திருக்கும்.'

மேற்கூறியபடி தான் ஆயுதப் போராட்டம் பிரச்சாரம் அமைய வேண்டும் என்பது பொதுவான கருத்தாக இருக்கிறது. சர்வதேச அநுபவமும் இந்த நடைமுறைக்கே சான்று பகர்கின்றது.

ஆனால் இந்த அணுகல் முறை லத்தீன் அமெரிக்க நாடுகளில் செயற்படக் கூடியதா?

இன்று லத்தீன் அமெரிக்க நாடுகளில் நிலவும் யதார்த்த நிலை தான் என்ன?

1. அடர்த்தியற்று, அருகலாக, மக்கள் சிதறிவாழும் பிரதேசங்களிலேயே கொரில்லா மூல அணி தனது ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இப்படியான ஒரு கிராமிய சூழலில், எவராவது எந்தப் புது முகமாவது மக்களின் கண்ணோட்டத்திலிருந்து தப்பவே முடியாது. ஒரு அந்நியன் எப்பொழுதுமே ஐயுறவை எழுப்புகிறான். அவனது அழகான வார்த்தைகளைத் தின்று பசியாற முடியாது என்பது மக்களுக்கு நன்கு தெரியும். எவனிடமாவது ஏதாவது வல்லமை உண்டென்றால், அவன்

சொல்வதைச் செயலில் செய்து காட்ட வேண்டும் என்பதே இந்த ஏழை விவசாயிகளின் நம்பிக்கையாகும். இந்த மக்கள் எதிர்கொள்ளும் ஒடுக்குமுறையோ மிகவும் நுண்ணியமானது, நிலையானது, திட்பமானது. நினைவுக்கெட்டா காலத்திலிருந்து நிலவிவருவது. இராணுவத்திற்கும் இரகசிய பொலீசாருக்கும் மக்களிடையே ஒரு மதிப்பும் செல்வாக்குமுண்டு. இது அவர்களது அடிமனத்திலிருந்து பிறப்பது. இந்த மதிப்புத்தான் அடக்கு முறையின் மூல வடிவமாக உள்ளது. இது விரக்தியடைந்தவர்களைக்கூடச் செயலிழக்கச் செய்கிறது; வாயடைக்கச் செய்கிறது. சீருடையைக் கண்டதும்தான் தமது சீரழிந்த நிலையைக்கூட இவர்கள் மறந்து விடுகிறார்கள்.

இராணுவத்தினதும், பொலீசாரினதும் ஆட்பல சக்தியை ஆயுதசக்தியை அசைக்கமுடியாது. வென்றுகொள்ளமுடியாது என்பதே பொதுவாக இம்மக்களது நம்பிக்கையாகும். இந்த சக்தியை எதிர்கொண்டு முறியடிக்க முடியுமென்றால் வெறும் வார்த்தைகளால் அல்ல, செயலில் செய்து காட்ட வேண்டும். இராணுவத்தினரும் காவற்படையினரும் துப்பாக்கிக் குண்டுகளிலிருந்து காப்புறுதி பெற்றவர்கள் அல்ல என்பதை மக்களுக்குச் செயல் மூலம் நிருபித்துக்காட்ட வேண்டும். ஆகவே கொரில்லா வீரர்கள் நமது வளம் குறைந்த பலத்தைப் பிரயோகித்து தமது உறுதிப்பாட்டையும் செயற்திறனையும் கையாண்டு இதைச் செயலில் காட்ட வேண்டும். எதிரியின் பலம் என்பது வெறும் பகட்டு, வெறும் இறுமாப்பு என்பதை முதலில் நிரூபித்துக் காட்ட வேண்டும். ஆயுதப் படையை அசைக்க முடியாத சத்தி என்று கருதும் இந்த மூடநம்பிக்கையை, பயத்தினால் அடிமைத்தனத்தினால் எழுந்த இந்த சிந்தனையை உடைத்தெறிவதாயின் எதிரியுடன் சமரிட்டுக் காட்டுவதைத் தவிர வேறு வழியேதுமில்லை. இப்படிச் சமரிடும்போது, பழக்கத்தால் ஏற்பட்ட பயமும், எதிரி மீதான மதிப்பும் காலப்போக்கில் ஒரு கேலிக்கூத்தாகவே மாறிவிடும் என்கிறார் பிடல் காஸ்ரோ.

2 உள்ளூர் இராணுவ ஆட்சியினதும், ஏகாதிபத்தியத்தினதும் கட்டுப்பாடும் விழிப்பும் இன்று கிராமப் புறங்களில் மிகவும் தீவிரமாக நிலைகொண்டு வருகிறது. இந்தச் சூழ்நிலையில் ஆயுதப் போராட்ட பிரச்சாரக் குழுக்கள் வெளிப்படையாக இயங்குவது என்பது இலகுவான காரியமல்ல. இங்கு நிலைகொண்டிருப்பது வெளிநாட்டு கூலிப் பட்டாளம் அல்ல. மிகவும் நுணுக்கமாக நிறுவப்பட்டுள்ள ஒரு உள்ளூராட்சி அடக்குமுறை அமைப்பையே இங்கு கொரில்லா வீரர்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. கொரில்லா வீரர்கள்கூட இந்த சூழலில் அந்நியர்கள்போல, அந்தஸ்து எதுவுமின்றியே நடமாட வேண்டியிருக்கிறது.

ஆகவே ஆரம்பத்தில் கொரில்லாக்கள் மக்களுக்கு அளிக்கக் கூடியது இரத்தமும் கண்ணீருமன்றி வேறென்றுமல்ல.

அமெரிக்க ஏகாதிபத்தியமும் தனது ஆதிக்கத்தை நிலை பெறச் செய்வதில் தவறவில்லை. ஆயுதப் படைகளாக அடக்குமுறை அமைப்பை விஸ்தரிக்காதபோதும், மாறு வேடத்தில், சமூக, தொழில்நுட்ப உதவி என்ற போர்வை யில் இந்த ஆக்கிரமிப்பு ஆழமாக ஊடுருவல்செய்திருக்கிறது. சமூகவியல் திட்டங்கள் என்ற சாக்கில் சர்வதேச நிபுணர் கள் மேற்கொள்ளும் வேலைகள் என்னவென்பது எமக்குத் தெரியாததல்ல. 'ஆபத்தான பிரதேசங்கள்' என வர் ணிக்கப்படும் இடங்களில் வதியும் மக்களின் சமூக, பொரு ளாதாரப் பிரச்சனைகளை 'படம் பிடிப்பதுதான்' இவர் களது சமூகவியல் ஆராய்ச்சியாகும். சமாதானப் படை என்ற போர்வையிலும் ஆயிரக்கணக்கானோர் லத்தீன் அமெ ரிக்கக் கிராமப் புறங்களில் ஊடுருவல் செய்துள்ளனர்.

3. முறையாக அமைக்கப்பட்ட புரட்சிப்படைகள் இல் லாதகுறை. பிரச்சாரம் என்பதே ஆயுதப் போராட்டத்தை இலக்காகக் கொண்டிருப்பதால், பிரச்சாரமானது 'அரசி யல் ஆள்சேர்ப்பு' மூலம் கொரில்லா அணிகளை மேலும் விஸ் தரிப்பதும் அல்லது முறையமர்வு படை அணிகளை (Regular units) உருவாக்குவதிலும் ஈடுபடுவது அவசியம். கிராமங் களில் திடீரெனப் புகுந்து கிராமவாசிகளை அழைத்து கூட் டங்களை நடத்தலாம். ஆனால் இந்தக் கிராம மக்கள் தங்க ளது வர்க்க எதிரிகளை தீர்த்துக் கட்டுவதற்கு எவ்விதத்தில் கொரில்லாக்கள் அவர்களுக்கு உதவ முடியும்? இப்படியான நடவடிக்கைகளின் போது ஒரு சில ஆயுதங்கள் தான் பெறப்பட்டிருக்கிறது. அப்படிதான் இளம் விவசாயிகள் உணர்ச்சியால் உந்தப்பட்டு கொரில்லா அமைப்பில் அணி திரள முன் வந்தால் அவர்களை ஆயுதம் தரிப்பது எதைக் கொண்டு?

மேற்குறிப்பிட்ட அநுபவங்களிலிருந்து கொரில்லா வீரர்கள் ஒரு உண்மையை உணர்ந்து கொண்டனர். அதா வது, எதிரி இராணுவத்திற்கு திடீரென ஒரு பலமான அடி கொடுக்கும்போது அது வெகுசனத்தின் கவனத்தையும் ஆர் வத்தையும் ஈர்க்கிறது என்பதுதான். எதிரிப் படை யணியை ஒளித்திருந்து தாக்கிச் சிதறடிக்கும் ஒரு சம்பவ மானது அப்பகுதிக் கிராம மக்களுக்கு என்றுமில்லாத கிளர்ச்சியார்வத்ததை உண்டுபண்ணி விடுகிறது. இப்படி யான ஒரு இராணுவ நடவடிக்கை புதிய அங்கத்தவர்களைக் கவர்வது ஒரு புறமிருக்க கிராம வாசிகளுக்கும் ஒரு ஆழ மான அரசியல் பாடத்தையும் புகட்டிவிடுகிறது, துருப்பு களை ஏற்றிச் செல்லும் ஒரு இராணுவ வாகனத்தை அழிப் பது அல்லது சித்திரவதையில் பெயர்பெற்ற ஒரு பொலீஸ்

அதிகாரிக்கு மரண தண்டனை அளிப்பது போன்ற ஒரு நடவடிக்கையானது ஆயிரம் சொற்பொழிவுகளை விட அதிக வலிமை வாய்ந்த பிரச்சாரமாக அமைந்து விடுகிறது. இத்தகைய நடவடிக்கை மக்களுக்கு அடிப்படையான ஒரு உறுதிப்பாட்டை கொடுத்து விடுகிறது. அதாவது, புரட்சி வீர நடை போடத் தொடங்கியுள்ளது; எதிரியை வெற்றி கொள்வது முடியாத காரியமல்ல என்பதில் அவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டிவிடுகிறது. இதற்குப் பின்னர் சொற்பொழிவுகளை நிகழ்த்தினால் மக்கள் செவிமடுப்பார்கள் என்பது திண்ணம். கொரில்லா வீரர்களும் தொடர்ந்து எதிரி மீது தாக்குதல்களை நடத்திவந்தால் ஆயுதங்களைச் சேர்ப்பதோடு, அநுபவத்தையும் சேகரித்து, எதிரியின் இராணுவ பலத்தைப் படிப்படியாகக் குன்றச் செய்து, இராணுவத்தினரின் ஒழுங்கையும் உறுதிப்பாட்டையும் சீர்குலைத்து, நாடெங்கிலும் உள்ள தீவிரவாதிகளுக்கு ஒரு புதிய நம்பிக்கையைப் பிறப்பிக்க முடியும். இப்படியாக முதலில் இராணுவ நடவடிக்கையைத் தீவிரப்படுத்துவதிலேயே அரசியற் பிரச்சாரதின் தாக்கம் தங்கியிருக்கிறது.

இதிலிருந்து ஆயுதப் புரட்சி பற்றிய பிரச்சாரமோ அன்றி அரசியல் வேலைகளோ அவசியமில்லை என்று கொள்ளக்கூடாது.

ஆயுதப்போராட்ட நடவடிக்கைகளை அடுத்தே அரசியற் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட வேண்டுமே தவிர அவற்றிற்கு முன்பாக அல்ல, இங்கு முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது என்னவென்றால் இன்றைய சூழ்நிலையில், வலிமை வாய்ந்த பிரச்சார வடிவம் என்றால் அது வெற்றிகரமான ஒரு இராணுவ நடவடிக்கைதான்.

ஆயுதப்போராட்ட நடவடிக்கைகளுக்குப் புறம்பான ஒரு கட்டமாக அல்லது அவற்றிற்கு முன்னோடியாக அரசியற் பிரசாரத்தை மேற்கொள்வதென்பது எதிரியை விழிப்படையச் செய்வதுடன், பிரச்சாரத்தில் ஈடுபடும் தோழர்களை அழிவுப் பாதையில் இட்டுச்சென்று கொரில்லா நடவடிக்கைகளுக்குச் சாதகமான பகுதிகளையும் அம்பலப்படுத்துவதாக முடியும். லத்தீன் அமெரிக்க நாடுகளில் வதியும் இன்றைய விவசாயப் பாட்டாளிகளின் சமூக, சித்தாந்த, மானசீக நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, அதே வேளை எதிரியின் வசமுள்ள பரந்த உளவு அமைப்புகளின் நாசகார வேலைகளையும் பார்க்குமிடத்து அரசியற் பிரச்சார தொண்டர்கள் சதா கண்காணிப்புக்கு ஆளாக்கப்படுவர் என்பதும், ஈற்றில் கண்டுபிடிக்கப்பட்டு நாசமாக்கப்படுவர் என்பது சாத்தியமான தொண்டுக்கும் தொண்டர்களுடன் தொடர்புடையவர்களுக்கும், இரகசிய அரசியற் தளங்களுக்கும் இதே கதியே நேரலாம்.

சீன கம்யூனிஸ்ட் கட்சி 1921ம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது.

தோற்றம் கொண்ட காலத்திருந்தே சீன கட்சியானது சோவியத் யூனியனிடமிருந்து இராணுவ ஆலோசகர்கள் உட்பட நேரடி உதவிகளைப் பெற்றுவந்தது. இந்த இராணுவ ஆலோசகர்கள் சீன கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்கு வம்போவா இராணுவக் கல்லூரியில் பயிற்சியளித்தனர். இதன் காரணமாக, மாவோ குறிப்பிட்டிருப்பதைப் போல, "சீன கம்யூனிஸ்ட் கட்சியானது, இராணுவ விவகாரங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்தது." கட்சி அமைக்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர், முதலாவது உள்நாட்டு யுத்தம் (1924-27), நகரப்புற வெகுசனக் கிளர்ச்சி, கன்டனில் நடைபெற்ற வேலை நிறுத்தம், ஆகியனவற்றில் பங்குகொண்டு கட்சியானது, பெரும் அழிவுகள் எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஆயினும் இந்தத் தோல்விகளிலிருந்து புதிய பாடங்களைப் பெற்று, மாவோவின் தலைமையில் உருவான கட்சி அவற்றை எல்லாம் சுய-விமர்சன விளக்கங்களாக தழுவிக்கொண்டது. இந்த விழிப்புணர்வால் சீனக் கட்சியானது மூன்றுவது அகிலத்தின் ஆலோசனைக்கு முற்றிலும் மாருக, பழைய போக்கைக் கைவிட்டு புதிய பாதையைத் தழுவிக்கொண்டது.

வியட்னுமிய கம்யூனிஸ்ட் கட்சி 1930ம் ஆண்டு தோன்றியது. ஆரம்பிக்கப்பட்ட காலத்திலேயே வியட்னுமிய கட்சியானது விவசாயிகள் கிளர்ச்சிகளை ஒழுங்கு செய்தது. இந்தக் கிளர்ச்சிகள் உடனுக்குடன் நசுக்கப்பட்டன. இரண்டு வருடங்களுங்குப் பின்னர் ஹோ-சி-மின்னைத் தலைவராகக் கொண்ட கட்சி, தமது முதலாவது வேலைத்திட்டத்தில் பிரகடனப் படுத்திய தாவது : "ஆயுதம் தரித்த வெகுசனப் போராட்டமே விடுதலைக்கான ஒரே வழி".

ஜெனரல் ஜியாப் பின்வருமாறு எழுதியிருக்கிருர் : "வியட்னுமிய புரட்சிகர இயக்கம் உச்சகட்டத்தில் இருக்கும் பொழுதுதான் எமதுகட்சி தோற்றம் கொண்டது. ஆரம்பத்திலிருந்தே எமது கட்சி விவசாயப் பாட்டாளிகளுக்கு தலைமைதாங்கி வழி நடத்தியது. கிளர்ந்தெழுந்து வெகுசன அதிகாரத்தை நிறுவும்படி அவர்களைத் தூண்டிவிட்டது. ஆகவே, ஆரம்பத்திலிருந்தே ஆயுதப் போராட்டம் பற்றியும், புரட்சிகர அதிகாரம் பற்றியும் எமது கட்சிக்குதெளிவு இருந்தது.

சுருங்கச் சொல்லப்போனால், சீன, வியட்னமிய கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆரம்ப காலத்திலிருந்தே புரட்சித் தலைமையைக் கொண்ட கட்சிகளாக உருவகம் கொண்டன. சர்வதேச சோசலிச சக்திகளுக்கு புறம்பாக, சுயேட்சையான முறையில், தமது சொந்த அரசியற் பாதையை நெறிப்படுத்திக்கொண்ட இக்கட்சிகள் மக்களோடு இறுக்கமாக இணைந்திருந்தன.

2. இந்தக் கட்சிகள் வளர்ச்சிபெற்று வந்த கால கட்டத்தில், சர்வதேச முரண்பாடுகள் காரணமாக, அவை அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான வெகுசன ஆயுதப் போராட்டங்களுக்கு தலைமைதாங்க நேர்ந்தது. ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிராக சீனவும், ஜப்பானிய ஆதிபத்தியத்திற்கும், பின்பு பிரஞ்சு காலனித்துவத்திற்கும் எதிராக வியட்னமும் போராட வேண்டியிருந்தது. இங்கு வர்க்கப் போரட்டங்கள் தேசாபிமான யுத்தங்களாக உருவகம் பெற்றன. சோசலிசப் புணரமைப்பானது தேசிய விடுதலையுடன் இணைக்கப்பட்டிருந்தது. அந்நிய ஆதிபத்தியத்திற்கு எதிரான வெகுசன யுத்தத்தை முன்னின்று நடத்திய இக்கட்சிகள், தாய்நாட்டு சுதந்திரற்கான போர்க் கொடியையும் தாங்குபவையாக தம்மை நிலை நாட்டிக் கொண்டன.

3. ஆரம்பத்தில் மாணவர்களையும், தொழிலாளர்களையும் அங்கத்தவர்களாகக் கொண்டிருந்த இக்கட்சிகள், தேசிய விடுதலைப் போராட்டச் சூழ்நிலைகள் காரணமாக நாட்டுப் புறங்களுக்குப் பின்வாங்கிச் சென்று ஆக்கிரமிப்பு படைகளுக்கு எதிராக கொரில்லாப் போரில் ஈடுபடவும் செய்தன. இக்கட்டத்தில், இக்கட்சிகள் விவசாயப் பாட்டாளிகளுடன் சங்கமமாக நேர்ந்தது. விடுதலைப் படைகள் இறுதியில் விவசாயிகள் இராணுவமாக மாற்றம் கொண்டு, தொழிலாளர் வர்க்கக் கட்சியின் தலைமையில் இயங்கியது. இவ்விதமாக இக்கட்சிகள் நடைமுறையில் தொழிலாளர்—விவசாயிகள் கூட்டணியை, அதாவது பெரும்பான்மை வர்க்கத்தை, புரட்சியை முன்னெடுத்துச் செல்லும் வர்க்கத்தை உருவாக்கின. கம்யூனிஸ்ட் கட்சிகள், இந்நாடுகளில் இப்படியானதொரு பரிணும வளர்ச்சியில், வர்க்கக் கூட்டுறவில் தோற்றம் கொண்டன என்பது குறிப்பிடத்தக்கது. கட்சித்தலைவர்களும், மாநாடுகள், பேரவைகளால் செயற்

கையாக பழைய பாணியில் தெரிவு செய்யப்பட்டவர்கள் அல்லர். மிகவும் பயங்கரமான சூழலில் பழக்கப்பட்டு, வளர்க்கப்பட்டு, பரீட்சிக்கப்பட்டு உருவான தலைவர்கள் இவர்கள்.

## லத்தீன் அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சிகள் :

வரலாற்று சூழ்நிலைகள் காரணமாக லத்தீன் அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சிகள் இந்த மாதிரியாக வேரூன்றவோ, வளர்ச்சிபெறவோ முடியவில்லை. இந்தக் கட்சிகளின் தோற்றம், வளர்ச்சி, சுரண்டப்பட்ட வர்க்கங்களோடு அவை கொண்டிருந்த தொடர்பு எல்லாமே முற்றிலும் மாறுபட்டவை, ஒவ்வொரு கட்சியும் தனக்கே உரித்தான வரலாற்றைக் கொண்டிருக்கலாம். ஆனல் பொதுப்படையாகப் பார்க்கப்போனல் சீன—வியட்னமிய கட்சிகள் போல ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய அநுபவத்தை இவை பெறமுடியவில்லை. அரசியல் சுதந்திரம் இல்லாதது ஒருபுறமிருக்க, தேசிய விடுதலைப் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கும் சந்தர்ப்பம் கிடையாததால் இக்கட்சிகள் தொழிலாளர்—விவசாயிகள் கூட்டணியை உருவாக்க முடியவில்லை. இதற்கிடையில் கியூபா புரட்சியும், லத்தீன் அமெரிக்காவில் அது ஏற்படுத்திய தாக்கமும், பழைய அரசியல் அணுகுமுறைகளுக்குச் சவாலாக அமைந்தன. ஒருபுரட்சிகர ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதாயின் சமாதான காலங்களில் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறைகளில், அடிப்படையான மாற்றங்களைக் கொண்டுவருதல் அவசியமாகிறது. யுத்தம் என்பது அரசியல் போராட்டத்தின் நீடிப்பு அல்லது விரிவாக்கம் எனலாம். ஆனல் அதற்கு விசேஷ நடைமுறைகளும், செயல் முறைகளும் உண்டு. ஒரு புரட்சிகர ஆயுதப் போராட்டத்தை தலைமை தாங்கி நடத்துவதாயின் அதற்கு ஒரு புதிய பாணியான தலைமையும், ஒரு புதிய முறையான அமைப்பும், தலைவர்கள், போராளிகளிடம் ஒரு புதிய உள—உடற் பக்குவமும் தேவையாகிறது.

மக்களை வழி நடத்திச் செல்லும் ஒரு கட்சி உருவாகுவது எப்படி ? இன்றைய லத்தீன் அமெரிக்க சூழ் நிலையில் கட்சியானது ஒரு மக்கள் இராணுவத்தை உருவாக்க முடியுமா ? அல்லது மக்கள் இராணுவம்தான் ஒரு முன்னணித் தலைமையை உருவாக்குமா ?

நமதுகட்டுப்பாட்டுக்கும் மிஞ்சிய சூழ்நிலைகள் காரணமாக, லத்தீன் அமெரிக்க கம்யூனிஸ்ட் கட்சிகள் முப்பது, நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே பிழையான முறையில் தோற்றம் கொண்டதால் இன்று மிகச்சிக்கலான சூழ்நிலையை உருவாக்கியுள்ளன. கட்சிகள் என்பது வர்க்கப் போராட்டத்தின் கருவிகளேயன்றி, வேறொன்றுமல்ல, இந்தக் கருவிகள் தமது கைங்கரியத்தை செய்யமுடியாது போனல் வர்க்கப் போராட்டம் என்பது ஒரு முடிவுக்கு வந்து

விடும் என எண்ணுவத ? அல்லது ஒரு புதிய கருவியை நாம் உருவாக்க வேண்டுமா ?

லத்தீன் அமெரிக்காவைப் பொறுத்தவரை வர்க்கப் போராட்டத்தைத் தடுத்து வைக்கவோ அன்றி திசை திருப்பவோ முயற்சிகள் எடுக்கப்படலாமே தவிர அதனை முற்றாக நிறுத்திவிட முடியாது. பொதுமக்கள் எப்படியோ தமது வசதிக்கேற்ற முறையில் ஒரு போராட்ட முன்னணித் தலைமையை உருவாக்கத்தான் செய்வார்கள். ஆனால் போராட்ட வளர்ச்சியை துரிதப்படுத்துவது புரட்சிவாதிகளின் கடமையாகும்.

இன்று லத்தீன் அமெரிக்காவில் இங்கும் அங்குமாக போராட்டங்களில் பின்வாங்கல்கள் ஏற்படுவதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. கொரில்லா இயக்கங்கள் பல்வேறு அரசியல் காரணங்களுக்காகப் பாவிக்கப்பட்டு வருகின்றன. முதலாளிய ஆட்சிக்கு ஒரு அழுத்தத்தைக் கொடுப்பதற்காகவும், ஒரு அரசியல் சதுரங்கக் காயாக ஆடுவதற்காகவும் மட்டுமே கொரில்லா அணியை சில அரசியற் தலைவர்கள் பாவிக்க விழைவதுண்டு. இப்படியாக வெளியிலிருந்து திணிக்கப்படும் நோக்குகளை கொரில்லா வீரர்கள் காலப்போக்கில் நிராகரித்து, தமது சொந்த அரசியல் தலைமைப்பீடத்தை உருவாக்கிக் கொள்கிறார்கள். முரண்பாடுகளைத் தீர்த்து, இராணுவ ரீதியில் வளர்ச்சி காண்பதாயின் கொரில்லா இயக்கமானது, தனது அமைப்பிலிருந்தே ஒரு அரசியல் தலைமைப்பீடத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும். கொரில்லா இயக்கமானது தனது அணியிலிருந்து ஒரு கட்சியை ஒருபோதும் உருவாக்குவதில்லை. அதற்கு மாறாக, போராளிகள் மத்தியில் கட்சி ரீதியான, சித்தாந்த ரீதியான வேறுபாடுகளைக் களைந்தெறியவே இயக்கம் முயற்சிக்கும். ஆயுதப் போரும், அதன் உடனடியான அரசியல் இலக்குகளுமே போராளிகளை ஐக்கியப்படுத்தும் அம்சமாக அமைகிறது. அரசியல் நோக்குகளாக ஏற்கனவே மாற்றம் கொண்டுள்ள, உடனடியான இராணுவ நடவடிக்கைகளைச் சுற்றியே கொரில்லா இயக்கமானது ஒற்றுமையைக் கட்டி எழுப்ப முனையும். கொரில்லாப் படையில், அதாவது விடுதலை இராணுவத்தில் அங்கத்துவம் பெறுவதே விடுதலை வீரர்களின் முதலாவது முக்கிய அரசியற் தீர்மானமாகிறது. அந்தச் சிறிய இராணுவம் படிப்படியாக வளர்ச்சி கண்டு தனது ஆரம்ப சாதனைகளை நிலைநாட்டும்போது சாதாரண உறுப்பினர்களிடையே ஒருமைப்பாடு பிறக்கிறது. இறுதியில் இந்த விடுதலைப் படையானது மக்கள் இராணுவமாக விரிவடையும் போது, அதிலிருந்து ஒரு கட்சி பிரசவம் எடுக்கிறது. சித்தாந்த ரீதியில் மக்கள் இராணுவமானது இந்தக் கட்சியின் கருவியாகக் கொள்ளப்படினும், சாராம்சத்தில் கட்சிதான் இராணுவமாகும்.

## கொரில்லா அணியும் கட்சியும்

இன்றைய சூழ்நிலையில் நாம் பலப்படுத்தவேண்டியது எதனை - ஒரு கட்சியையா அல்லது மக்கள் இராணுவத்தின் மையக்கருவான கொரில்லா அணியையா? இவற்றிற்கு இடையிலான முக்கிய தொடர்புதான் என்ன? எந்த அமைப்பைக் கட்டி எழுப்புவதில் நாம் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்?

கொரில்லா இயக்கங்கள் தோன்றியுள்ள லத்தீன் அமெரிக்க நாடுகளில் இந்தக் கேள்விகள் இன்று தீவிரவாதிகளிடையே பிளவையும் குழப்பத்தையும் ஏற்படுத்திவருகின்றன. ஏனைய நாடுகளிலுள்ள தீவிரவாதிகளும் நாளைக்கு இந்தக் கேள்விகளை எதிர்கொள்ளத்தான் போகிறார்கள்.

மார்க்சீய சித்தாந்த மரபிலும், மார்க்சீய வரலாற்றிலும் இந்தக் கேள்விகளுக்கு வழக்கமான, படிநிலையான பதிலே அளிக்கப்படுகிறது. இந்தப் பதிலானது மாற்றமுடியாத உண்மையாகக் கொள்ளப்படுவதால், இப்படியான முறையில் இந்தக் கேள்விகளை எழுப்புவதும் மார்க்சீய சிந்தனைக்கு முற்றிலும் முரணானது எனப் பலர் எண்ணலாம். இவர்களது பதில் இதுதான். அதாவது, ஒரு கட்சியைத்தான் முதலில் கட்டி எழுப்பவேண்டும். கட்சியைத்தான் பலப்படுத்த வேண்டும், ஏனென்றால் கட்சிதான் மக்கள் இராணுவத்தை உருவாக்கி வழிநடத்தும் ஆற்றல்பெற்றது. விஞ்ஞான ரீதியான அரசியல் பாதையை நெறிப்படுத்தும் ஒரு தொழிலாளர் வர்க்கக் கட்சிதான் ஒரு உண்மையான மக்கள் இராணுவத்தைக் கட்டி எழுப்பி, தொழிலாளரின் நலனுக்காக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற வல்லது.

### மார்க்சீச சித்தாந்த மரபு கூறுவதாவது :

சமுதாய அமைப்பில் அடிப்படையான மாற்றத்தைக் கொண்டு வருவதாயின் அரச இராணுவத்தை அழிப்பதல்ல, அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதுதான் முக்கியம். முதலாளிய அரச அதிகாரமானது தனக்கே உரித்தான உப-அமைப்புகளைக் கொண்டிருக்கிறது. உதாரணமாக, அரசியல், நீதிபரிபாலனம், அரசியற் சட்ட அமைப்பு போன்றன. இவற்றுடன் ஒடுக்குமுறை இயந்திரமான இராணுவத்தை ஒன்றுபடுத்திக் குழப்பக்கூடாது, நடைமுறையிலுள்ள அரசியல் அதிகாரத்தை தகர்த்தெறிந்து, அதனை ஒடுக்கப்படும் மக்களின் சனநாயக சர்வாதிகாரமாக மாற்ற வேண்டும். இதற்கான அரசியற் போராட்டத்தை, அதன் இறுதி ஆயுதப்போராட்ட வடிவமான உள்நாட்டுக் கிளர்ச்சிவரை கொண்டு நடத்தும் பொறுப்பு தொழிலாளர் வர்க்கத்தின் பிரதிநிதிகளையே சார்ந்தது. ஒரு வர்க்கமானது

ஒரு அரசியல் கட்சியால் மட்டுமே பிரதிநிதித்துவம் பெறுகிறதே தவிர ஒரு இராணுவ அமைப்பால் அல்ல. பாட்டாளி வர்க்கமானது, அப்படியான ஒரு கட்சியால்தான் பிரதிநிதித்துவம் பெற முடியும். மார்க்சீச-லெனினியமே இவ்வர்க்கத்தின் அபிலாசைகளை வெளிப்பாடு செய்யும் சித்தாந்தமாகும். இப்படியான ஒரு கட்சியின் தலைமைப் பீடமே விஞ்ஞான ரீதியில் இவ்வர்க்கத்தின் அபிலாசைகளை பாதுகாக்க முடியும்.

**மார்க்சீச வரலாற்று மரபு கூறுவதாவது :**

மேற்கூறிய கொள்கை விதிகள் எல்லாம் இந்த யுகத்தில் வெற்றிகரமாக முடிவடைந்த புரட்சிகரப் போராட்டங்களில் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. அரசியல் முன்னணிப் படையான கட்சிக்கும், இராணுவ அமைப்புக்குமான பிரிவில் அரசியலே இராணுவத்திற்கு மேலான உயர்வதிகாரம் பெற்றிருக்கிறது. 1917 அக்டோபர் புரட்சியில் ருஷ்ய செம்படைகளானது கட்சியின் இராணுவக் குழுவினது அதிகாரத்தின்கீழ் செயற்பட்டன. இராணுவக் குழுவானது மத்திய குழுவின் கட்டுப்பாட்டின்கீழ் செயற்பட்டது. இந்த உதாரணத்தை முடிவானதாக எடுக்க சிலர் மறுக்கலாம். ஏனெனில் ருஷ்யப் புரட்சியானது நகரப்புறத் தொழிலாளரின் ஆயுதக் கிளர்ச்சியைக் குறிப்பிடுகிறதே தவிர ஒரு மக்கள் யுத்தத்தின் தளமாக அமையவில்லை. அப்படியாயின் ஏனைய நாடுகளில் நடைபெற்ற சோசலிசப் புரட்சிகளை, அதாவது, கிராமப் புறங்களில் தொடங்கி நீண்டகால மக்கள் யுத்தமாக உருப்பெற்ற புரட்சிகளை உதாரணத்திற்கு எடுக்கலாம். அரசியல் அமைப்பே மேலாதிக்கம் பெற்றிருக்கிறது என்பதை சுட்டிக் காட்ட சீனாவும், வியட்னாமும் சிறந்த உதாரணங்களாக முன்வைக்கப்படுகின்றன.

சீனாவில், கட்சியின் கண்காணிப்பான தலைமைப்பீடத்தின்கீழ் இராணுவம் செயற்பட்டிருக்கிறது. " அரசியலே துப்பாக்கியை வழிநடத்தவேண்டும் ", என்ற மாவோவின் கூற்று நிதர்சனத்தில் நிறைவெய்தியிருக்கிறது.

வியட்னமில் ஜெனரல் ஜியாப் கீழ்க்கண்டவாறு எழுதியிருக்கிறார். " ஒரு இராணுவத்தைக் கட்டி எழுப்புவதன் அடிப்படையான நியதி என்னவென்றால் இராணுவத்தை கட்சியின் தலைமைப் பீடத்தின்கீழ் அமைப்பதன் அவசியம் தான் ... ஒரு இராணுவத்தை தோற்றுவிப்பதும், அதனை அமைப்பதும், அதற்கு கல்வியளிப்பதும் கட்சிதான் "...

அரசியல் அமைப்பிற்கும், இராணுவ அமைப்பிற்கும் வேறுபாடு காண்பிக்கும் வகையில் சில புரட்சித் தலைவர்களின் பெயர்களை குறியீடுகளாகவும் குறிப்பிட்டுக் காட்ட

லாம். சீன புரட்சிகர மக்கள் யுத்தத்தில் மாவோ, சூ ரே; பிரான்சுக்கு எதிரான வியட்னுமிய யுத்தத்தில் ஹோ-சி-மின், ஜெனரல் ஜியாப்; ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ரூஷ்ய யுத்தங்களில் லெனின், டிராட்ஸ்க்கி போன்ருேரை குறிப்பிடலாம்.

## லத்தீன் அமெரிக்கா : கட்சியில்லாப் புரட்சி

கியூபாவை எடுத்துக்கொண்டால் இராணுவ-அரசியல் தலைமைப்பீடமானது, ஒரு தனி மனிதரிடமே, பீடல் காஸ்ரோவிடமே ஒன்றியமாகி இருந்தது. இது எவ்வித அர்த்தமுமின்றி தற்செயலாக நிகழ்ந்ததா? அன்றி, மாறு பட்ட ஒரு சரித்திர நிகழ்வைக் குறிக்கிறதா? அல்லது இதனை ஒரு விதிவிலக்கான சம்பவம் எனக் கொள்வதா? அன்றி இந்நிகழ்வு அடிப்படையானதொன்றை முன்குறித்துக் காட்டுகிறதா? இன்றைய லத்தீன் அமெரிக்க புரட்சி அநுபவத்தைப் பொறுத்தவரை இது புகட்டும் பாடம்தான் என்ன?

இந்த அநுபவத்தை நாம் ஆய்வுசெய்து பார்க்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட நியதிகளுக்கு ஒத்திசைவாக அமையவில்லை, என்பதற்காக புதிதாக உருவாகும் வரலாற்றை நாம் அவசரப்பட்டு கண்டிக்க விழையக்கூடாது.

பீடல் காஸ்ட்ரோ சமீபத்தில் கீழ்க் கண்டவாறு கூறியிருக்கிருர். "மார்க்சீய-லெனினிய குடும்பத்தில் நான் ஒரு கொள்கை பேதக்காரன் என்று என்மீது குற்றம் சுமத்தப் படுகிறது. புரட்சிகர உண்மைகளை உடைமையாக்கிக் கொள்வதில் தமக்கு மத்தியில் பூனையும் நாயும் போல சண்டையிடும் மார்க்சீய இயக்கங்கள் கியூபா புரட்சி வடிவத்தை நான் குருட்டுத்தனமாக பிரயோகிக்க முனைவதாக என்மீது குற்றம் சுமத்த விழைவது எனக்கு விந்தையைக் கொடுக்கிறது. கட்சியின் முக்கியத்துவத்தை நாம் புரிந்துகொள்ளவில்லை என எம்மைக் கண்டிக்கிருர்கள். மார்க்சீய-லெனினிய உலகில் முரண்பாடான கொள்கைக் காரர்கள் எனக் குற்றம் சுமத்துகிருர்கள்,"

உண்மை என்னவென்ருல் லத்தீன் அமெரிக்க யதார்த்த சூழலில் குருட்டுத்தனமாக கொள்கைத்திட்டங்களை அமுலாக்க முனைபவர்கள் இந்த மார்க்சீயவாதிகளே தான். கொள்கை முரண்பாட்டுக்காரன், குட்டி முதலாளிப் போக்குடையவன் என்றெல்லாம் பீடல் காஸ்ரோவை குற்றம் சாட்டுவதற்கு அப்படி என்னதான் அவர் சொல்லியிருக்கிருர்? லத்தீன் அமெரிக்காவிலும், ஆசிய, ஐரோப்பிய சோசலிச நாடுகளின் தலைநகர்களிலும் இருந்துகொண்டு, சித்தாந்த மந்திரத்தால் புரட்சிப் போர்களை நடத்தி விடலாம் எனக் கற்பனைபண்ணும் இந்த மார்க்சீய வாதிகள்

கியூபா புரட்சிக்கு எதிராக பல்லவி பாடுவதற்கு காஸ்ரோ அப்படி என்னதான் அதிரவைக்கும் செய்தியை அறிவித்திருக்கிருர் ?

பீடல் காஸ்ரோ சொன்னது இதைத்தான் : "லத்தீன் அமெரிக்காவில் புரட்சியை முன்னின்று நடத்தக் கூடியவர்கள் யார் ? கட்சி இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, பொது மக்களும் புரட்சிவாதிகளுமே புரட்சியைச் செய்யும் வல்லமை பெற்றவர்கள் ".

பீடல் காஸ்ரோ கூறுவது என்னவென்ருல் :

ஒரு முன்னணித் தலைமையின்றி புரட்சி என்பது சாத்தியமாகாதுதான். ஆனல் இந்த முன்னணித் தலைமையானது மார்க்சீய—லெனினீய கட்சியாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. புரட்சியை ஏற்படுத்த விரும்பும் எவருக்கும் இந்த முன்னணித் தலைமையை உருவாக்கும் உரிமையும் கடமையும் உண்டு. கட்சிகளுக்குப் புறம்பாக நின்றும் அவர்கள் இதனை சாதிக்கலாம்.

இந்தப் பிரச்னையை இனி ஒழுங்கான முறையில் ஆராய்ந்து பார்ப்போம்.

கட்சி இருந்தாலும், இல்லாவிட்டாலும் ஒரு புரட்சி ஏற்பட முடியும் என்று நாம் இன்றைய சூழ்நிலையில் சிந்திப்பதற்குக் காரணமென்ன ... ?

வரலாறு படைக்கும் முன்னணித் தலைமை, அல்லது முன்னணிப் படை எந்த வடிவத்தில் தோன்றுகிறது.

இன்றுள்ள நிலைமையில் கட்சிகளின் பிரச்னையானது ஒரு வரலாற்றுப் பிரச்னை. இதற்குப் பதிலளிப்பதாயின் கடந்த காலத்தை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

பிறக்கும்போது நிலவிய புறநிலைகள், அதன் வளர்ச்சி, அது பிரதிநிதித்துவப் படுத்தும் வர்க்கம், அது பரிணமம்பெறும் சமூக சூழ்நிலை ஆகியன ஒரு கட்சி அமைப்பை நிர்ணயிக்கின்றன. இதன் அடிப்படையில் சீனவிலும், வியட்னமிலும் கட்சிக்கும், கொரில்லா அமைப்பிற்கும் இடையிலான தொடர்புகள் பற்றியும், அவை தோற்றம் கொண்ட வரலாற்று சூழ்நிலைகள் பற்றியும் இனிப் பார்ப்போம்.

1. சீன, வியட்னமிய கட்சிகள் ஆரம்பத்திலிருந்தே புரட்சிகரமான அதிகாரத்தை நிறுவும் பிரச்னைகளில் ஈடுபட்டிருந்தன.

முன்னதில் ஒரு தேசத்தின் சகல மக்களும் வர்க்க, கட்சி வேறுபாடின்றி தேசிய விடுதலைச் செயல் திட்டத்தின் அங்கமாகிய கொரில்லாப் போரை முன்னின்று நடாத்துவர். எனவே வர்க்கரீதிப் போராட்டத்துடன் ஒப்பு நோக்கின் இதன் அடித்தளம் மிகவும் பரந்தது. இவ்விடத்தில் கீழ்க் கண்ட கூற்றைச் சுட்டிக்காட்டுவது பொருந்தும். "ஒரு தேசம் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும்போது சகல மக்களும் ஒருவர்மேல் ஒருவர் அநுதாபம் கொண்டு, கொரில்லா அணிகளை உருவாக்குவதில் முன்னின்று ஒத்துழைப்பர். ஓர் உள்நாட்டுப் போரில் கோரில்லாக்கள் எவ்வளவு முன்னேற்றம் அடைந்தாலும் அதன் விளைவுகள், அந்நிய ஆதிக்கத்தை எதிர்ப்பதற்கு உருவாகும் கொரில்லா அணியினர் ஈட்டித்தரும் விளைவுகள் போல் அமைவதில்லை". உள்நாட்டுக் கிளர்ச்சியில் உருவாகும் கொரில்லாப் போரின் ஆணித்தரமான அம்சம் அதன் உள்ளீட்டான தூய்மையாகும். ஒரு வர்க்கமானது ஒன்றுபட்டு வலிமையுடன் போராடுவது நியதி. ஆனல் ஒரு புரட்சிகர தேசிய விடுதலைப் போரில் வேறுபட்ட வர்க்கங்களை உள்ளீட்டாக ஒன்றுபடுத்தும் சிக்கலான பணியினை கொரில்லா அணியினர் எதிர்கொள்கிறுர்கள். இதிலிருந்து நாம் பிரச்சாரத்தின் அவசியத்தை புரிந்து கொள்ளலாம். ஒரே இராணுவ உத்திகளைக் கையாழ்வதால் மேற்குறிப்பிட்ட இருவகைக் கொரில்லாப் போராட்ங்களும் ஒற்றுமையுள்ளவையே.

## 2. வரலாற்றில் கொரில்லாப் போராட்டம்

கொரில்லாப் போர்முறை சீனுவில் உதயமானதோ அல்லது நவீன காலத்துக்கு உரியதோ அல்ல. வரலாற்றின் ஆரம்பத்திலிருந்தே அந்நிய படையெடுப்புக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிராகப் பல்வேறு மக்கள் நடத்திய போராட்டங்களின் அம்சமாக இப்போர்முறை அமைந்திருந்தது. சாதக சூழ்நிலையில் இதன் சாத்தியக்கூறுகள் பாரியமானவை. வரலாற்றில் உதித்த பல்வேறு கொரில்லாப் போர்கள் தம்முள் வேறுபட்டவை. தமக்கேயுரிய சில தனித்தன்மைகளை உள்ளடக்கியவை. விதம்விதமான வழிமுறைகளையும், முடிவுகளையும் கொண்டவை. இப் போர்களில் உதிரம் உதிர்த்தோரைக் கௌரவித்து அவர்களின் அநுபவங்களில் இருந்து நாம் பயன் பெறுதல் அவசியம். பலநூறு போராட்டங்களில் ஈடுபட்ட சீன விவசாயிகளின் விலைமதிபெற்ற அநுபவங்களை இன்று எம்மை வழிநடாத்த முற்கொள்ள இயலாதிருப்பது எமது துரதிஷ்டமே. அந்நிய ஏகாதிபத்தியத்துக்கு எதிரான பல்வேறு கிளர்ச்சிகளில் நாம் பெற்ற அநுபவங்கள் மட்டுமே எமது கொரில்லாப் போர்முறை அநுபவங்கள் ஆகும்.

ஒரு புரட்சிப் போரில் கொரில்லாப் போர் முறையானது சாத்தியமானது, அது இயல்பானது, அது அத்தியாவசிய மானது என்ற பேருண்மையை சீனுவினதும் மற்றும் நாடுகளினதும் கொரில்லா அநுபவங்கள் நிலைநிறுத்துகின்றன. மேலும் இன்று யப்பானுக்கு எதிராக நடத்தப்படும் மக்கள் விடுதலைப் போரில் சீன மக்களின் இறுதிவெற்றியை உறுதிப் படுத்த, கொரில்லாப் போராட்டம் பெருமளவில் விரிவாக்கப் பட வேண்டும், என்ற உண்மையையும் இந்த அநுபவங்கள் நிருபிக்கின்றன.

வரலாற்று அநுபவங்கள் இரத்தத்தாலும், இரும்பாலும் எழுதப்படுபவை. சீனுவில் இன்று கிளர்ந்துள்ள கொரில்லாப் போராட்டமானது வரலாற்றில் ஒரு அத்தியாயம். இதற்கு முன்னுதாரணங்கள் இல்லை என்பதை நாம் குறிப்பிட்டாக வேண்டும். கொரில்லாப் போரின் விளைபயன்கள் ஜப்பானுடன் போராடும் சீனுவுடன் மட்டும் வரையறுக்கப் பட்டதல்ல. இதன் செல்வாக்கு உலகளாவியது.

## 3. கொரில்லா நடவடிக்கைகள் மூலம் வெற்றியீட்ட முடியுமா ?

### சாதக காரணிகள்

குடியேற்ற ஆதிக்கத்துக்கும், நிலப்பிரபுத்துவ அதிகாரத்துக்கும் உட்பட்ட ஒரு பிரதேசம்தான் சீனு. அதாவது அரசியல். இராணுவ, பொருளாதார ரீதியில் பின்னடைந்த தேசம், இது ஒரு தவிர்க்கமுடியாத முடிவு. பாரிய மூல வளங்களையும், பேராற்றல் மிக்க மக்களையும் கொண்ட பரந்த நாடு. சிக்கலான நில அமைப்புக் கொண்ட நாடானமையால் செய்தித்தொடர்பு வசதிகள் குறைவு. இக்காரணிகள் எல்லாம் நீடிக்கப்பட்ட போராட்டத்திற்குச் சாதகமானவை. இடம்விட்டு இடம் பெயரும் போர்முறைத் திட்டத்துக்கும், கொரில்லா நடவடிக்கைகளுக்கும் இக் காரணிகள் பெருமளவு சாதகமானவை. எதிரி இடங் கொண்ட பிரதேசத்துள் எண்ணற்ற கொரில்லாத் தளங்களை நிறுவுவோமாயின், தனது வியூகத்தின் முன்னரங்கிலும், பின்னரங்கிலும் பல்வேறு முனைகளில் ஒரே நேரத்தில் தொடர்ச்சியாகப் போராட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு எதிரி உள்ளாகிறுன். இவ்வகையில் எதிரியின் சக்தி தொடர்ச்சியாக விரயமாகிறது.

மக்கள் சக்தியையும் இராணுவ பலத்தையும் நாம் ஒன்றிணைக்க வேண்டும். எதிரியின் பலவீன நிலைகளை பல முனைகளில் இருந்தும் தாக்குதல் வேண்டும். எல்லா இடங்களிலும் போரை உருவாக்கி எதிரியைச் சிதறச் செய்து

அவனைப் பலமிழக்கச் செய்தல் வேண்டும். இதன் விளைவாக எதிரியுடன் ஒப்பு நோக்கும் போதுஎமது நிலைகளில் மாற்றங்கள் தோன்றும். அந்த நாளே நாம் அடையப்போகும் இறுதி வெற்றியின் ஆரம்பம்.

## தேசிய விடுதலைப் போரில் மக்களை அணிதிரட்டல்

சீனுவின் மேன்மை மிக்க மக்கள் இன்னும் ஒன்று திரட்டப்படவில்லை. இக்குறைபாட்டை நாம் கருத்திற் கொள்ளல் வேண்டும். எமது நிலப்பிரதேசங்களை கைப்பற்றுவதற்காக மட்டுமே ஜப்பானிய கொள்ளைக்காரர்கள் ஊடுருவல் செய்யவில்லை. தமது அரசின் பலாத்காரமான, உயிர்ப்பலி வாங்கும், கொலைகாரக் கொள்கைகளை நிறைவேற்றுவதே இவ்வூடுருவலின் நோக்காகும். இதன் அர்த்தம் என்னவென்றால் சீன இனத்தைப் பூண்டோடு அழிப்பதுதான். இத்தவிர்க்க முடியாத காரணத்தின் நிமித்தம் எமது தேசத்தைக் கட்சி, வர்க்க சார்புநிலைகளுக்கு அப்பால் ஒருங்கிணைத்து, இறுதிவரை எதிர்ப்பு என்ற கொள்கையின் பாதையில் நாம் செல்லல் அவசியம். புதிய சீனு பழைய சீனுவிலும் வேறுபட்டது. அபிசீனியா போன்றதல்ல இன்றைய சீனு. தனது பெருமைமிக்க வரலாற்று முன்னேற்றப் பாதையில் நிற்பதுதான் இன்றைய சீனு. மக்களின் கல்வித்தரம் உயர்த்தப் பட்டுள்ளது. பொதுவுடமைவாதிகளுக்கும், தேசியவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாடு காரணமாக ஜப்பானியருக்கு எதிரான போராட்டத்துக்கு ஒரு அடித்தளமான முன்னணி அமைக்கப்பட்டது. இந்த முன்னணியானது தொடர்ச்சியாகப் பலப்படுத்தப்பட்டு விரிவாக்கப்பட்டுள்ளது பெரும் ஆக்கத்துடனும், ஊக்கத்துடனும் அரசும் இராணுவமும் மக்களும் ஒன்றுபட்டுச் செயலாற்றுகின்றனர். நாட்டின் பொருள் வளமும் மூலவளமும் உபயோகிப்பதற்குத் தயார்நிலையில் உள்ளன. ஒன்று திரட்டப்படாத மக்கள் அணிதிரண்ட ஒரு தேசமாக உருவாகி வருகின்றனர்.

## இறுதி வெற்றி எமதே

நீண்ட எமது போராட்ட இலக்கில் இம்மாபெரும் மக்கள் சக்தியானது ஒருமுகப்படல் வேண்டும். ஜப்பானியர் எமது நாட்டின் பெரும்பகுதியை அல்லது முழுவதையுமே ஆக்கிரமித்துக் கொண்டாலும் இறுதி வெற்றி எமதே. ஜப்பானியர்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்ட பிரதேசத்தில் வாழுபவர்களும், எமது ஆதிக்கத்தின்கீழ் உள்ள பகுதிகளில் வாழுபவர்களும் ஆயுத எதிர்ப்புப் போராட்டத்துக்குத் தம்மைத் தயார் செய்து கொள்ளல் வேண்டும் ஜப்பானியர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும் இனத்துரோகிகள் சிலரே. ஆனால் இழிமையான அடிமைத்தனத்துக்கு ஆட்படு

வதைவிட உயிரை இழப்பது மேல் என உறுதிபூண்டவர்களே பலர். இந்த ஆத்ம பலத்துடன் நாம் எதிர்த்துப் போராடுவோமாயின், எந்த எதிரியைத்தான் நாம் வெற்றி கொள்ள முடியாது? இறுதிவெற்றி எம்முடையதல்ல என்று யார்தான் கூறுவார்கள்?

காட்டுமிராண்டித்தனமான, நாகரிகமற்ற போராட்டத்தில் ஜப்பானியர் ஈடுபட்டுள்ளனர். இந்த ஒரே காரணத்தின் நிமித்தமே சர்வதேச இயக்கங்கள் மட்டுமன்றி ஜப்பானில் உள்ள சகல வர்க்க மக்களும் தமது அரசின் கொள்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். மறுபுறத்தைப் பார்ப்போமாயின் எமது போராட்டம் நியாயபூர்வமானதாகையால் எமது நாட்டின் சகல வர்க்கங்களும், கட்சிகளும் அணிதிரண்டு ஆக்கிரமிப்பாளரை எதிர்க்கின்றனர். ஜப்பான் உட்பட மற்றும் வெளிநாட்டு மக்களின் தார்மீக ஆதரவும், அநுதாபமும் எம்பக்கமுண்டு, இந்த முக்கிய காரணத்தின் நிமித்தமே ஜப்பானியர் தோல்வி காண்பதும் சீன மக்கள் வெற்றியீட்டுவதும் தவிர்க்க முடியாதது.

## 4. கொரில்லா போர்முறைக்கான ஒழுங்கமைப்பு

### மக்களில் இருந்து உருவாகும் கொரில்லா குழுக்கள்

கொரில்லா அணிக்களுள் அடிப்படை உருவமைப்பைக் கொண்டது மக்களில் இருந்து உருவாக்கப்படும் கொரில்லா குழுவாகும். மக்களை ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கி அவர்களை நரவேட்டையாடும் நோக்குடன் பிரவேசிக்கும் எதிரியின் இராணுவத்தை எதிர்த்துப் போராடுவதற்குத் தலைவர்கள் தம்மக்களுக்கு அழைப்பு விடுவார்கள். ஆயுதம் தரித்த அஞ்சா நெஞ்சம் கொண்டோரை ஒன்று திரட்டுவதன் மூலம் ஒரு கொரில்லாக்குழு உதயமாகிறது. தற்பாதுகாப்பு நடவடிக்கைகளிலும், எதிர்த்தாக்குதல்களிலும் ஈடுபடுவதற்கு கொரில்லாக் குழுக்களை உருவாக்குங்கள் எனத் தேசமெங்கும் மக்கள் கோரப்பட்டுள்ளனர். உள்ளூர் நிர்வாக நிறுவனங்களின் அநுசரணை இருக்குமாயின் கொரில்லாக் குழுக்கள் வளம் பெறுவது திண்ணம். சில உள்ளூர் நிர்வாக நிறுவனங்கள் உறுதியற்றவையாகவோ, அல்லது அதன் தலைவர்கள் ஊரைவிட்டு ஓடியிருந்தால், மக்களில் சில தலைவர்கள் (ஜப்பானின் ஆட்சியில் சிக்கி அல்லலுறும் தம் நாட்டைக் காக்கவேண்டும் என்ற மக்களின் வேண்டுதலும், அநுதாபத்திலும் நம்பிக்கை கொண்டு) எதிர்த்துப் போராட விடும் கோரிக்கைக்கு மக்கள் செவிமடுப்பர், இவ்வகையில்தான் பல கொரில்லாக் குழுக்கள் ஒருங்கு திரட்டப்படுகின்றன. இச்சூழ்நிலையில் தலைமை தாங்கும் பொறுப்பு நமது இறுதித்துளி இரத்தம் உள்ளவரை முயலத் துணியும் இளம் மாணவர்கள், ஆசிரியர்கள், விரிவுரை

இம்மாதிரியான புதிரான அநுபவத்தை கியூபா புரட்சி எதிர்கொள்ள நேர்ந்ததா ? கியூபாவில் அரசியல் அதிகாரம் கைப்பற்றப்பட்ட பின்னரே கட்சி உருவாக்கப்பட்டது எனச் சிலர் புலம்புகிருர்கள். ஆனுல் இது தவருனதாகும். கட்சியானது ஏற்கெனவே ஒரு கருவூலமாக, புரட்சி இராணுவ வடிவமாக உருப்பெற்றிருந்தது. இராணுவத் தளபதியாகவிருந்த பிடல் காஸ்ரோ, 1959ம் ஆண்டிலிருந்தே உத்தியோகபூர்வமற்ற ரீதியில் கட்சித் தலைவராகவும் இயங்கி வந்தார் .

## கொரில்லா இயக்கமும் அரசியலும்

லத்தீன் அமெரிக்கப் புரட்சிப் போராட்டங்களும், அதன் முன்னணித் தலைமை வகிக்கும் கியூபா புரட்சியும், உலகப் புரட்சி அநுபவத்திற்கும், மார்க்சீய — லெனினிய தத்துவத்திற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்தே இருக்கிறது.

சில சூழ்நிலைகளில் அரசியலும், இராணுவமும் வேறுபட்டவையாக இல்லாமல், ஒரு முழுமையான கூட்டமைப்பாக வடிவம் கொள்கிறது. இதில் மக்கள் இராணுவமும், அதன் மையக்கருவான கொரில்லாப்படையும் அங்கம் வகிக்கும். கொரில்லா அணியின் வடிவத்தில் முன்னணிக்கட்சி அதில் அமையப்பெற்றிருக்கும். இந்த அமைப்பில் கொரில்லாப் படையே கட்சியின் கருவூலமாகும்.

கியூபா புரட்சி படைத்த புதுமை இதுதான்.

ஒரு அரசியல் முன்னணிப் படையாக உருவாகாது போனுல் கொரில்லா இயக்கமானது இராணுவ ரீதியில் வளர்ச்சிகாண முடியாது. தனது அரசியற் பாதையைத் தானுக நெறிப்படுத்திக் கொள்ளாமல், வெறும் அரசியல் பகடைக்காயாக, அழுத்தம் பிரயோகிக்கும் ஒரு ஆட்சேப குழுவாக மட்டும் கொரில்லா இயக்கம் இயங்கிவருமானுல், காலத்தை வீணுக்குவது தான் மிச்சம்... வெகுசனப்போராட்ட அரங்கில் எல்லோரையும் விட மிகப் புரட்சிகர சக்தியாக விளங்கும் கொரில்லா இயக்கமானது இராணுவ ரீதியில் வெற்றியை நிலை நாட்டுவதாயின், சுரண்டப்படும் வர்க்கங்களை அணி சேர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒடுக்கப்பட்ட இவ்வர்க்கங்களின் அணிதிரண்ட பங்களிப்பு இல்லாது போனால், வெற்றியானது ஒருபோதும் சாத்தியமாகாது.

ஒரு முன்னணிக் கட்சிக்கும், வெகுசன ஆயுதப்படையான கொரில்லா இயக்கத்திற்கும் மத்தியில் எதனைத் தேர்ந்தெடுப்பது என்ற பிரச்னை இருக்கப்போவதில்லை. இயங்கியல் ரீதியான காரணங்களுக்காக நீண்ட காலத்திற்கு லத்தீன் அமெரிக்காவின் பல பகுதிகளில் இந்தப் பிரச்னை எழப் போவதில்லை. வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகள் இப்போது எம்முன் உள்ளன. வெகுசன ஆயுதப்படையே கட்சியின் கருவூலமாக இருக்கிறது. கொரில்லா இயக்கமானது ஒரு அரசியல் முன்னணித் தலைமையை மூலக்கருவாகக் கொண்டிருக்கிறது. அதன் பரிணாம வளர்ச்சியில் ஒரு உண்மையான கட்சி உருவாகும்.

ஆகவேதான், அரசியல் முன்னணித் தலைமையை வளர்ப்பதாயின் கொரில்லா இயக்கத்தைக் கட்டி வளர்க்க வேண்டும்.

ஆகவேதான், இன்றைய சூழ்நிலையில், இயக்கத்திலுள்ள கட்சிகளைப் பலப்படுத்துவதையோ அன்றி புதிய கட்சிகளைத் தோற்றுவிப்பதையோ விட்டு விட்டு, கொரில்லாப் போராட்டத்தை வளர்ச்சிபெறச் செய்வதற்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

ஆகவேதான், ஆயுதப்புரட்சி நடவடிக்கையானது இன்றைய அதிமுக்கிய அரசியல் நடவடிக்கையாக உள்ளது.

(மாவோவின் " கொரில்லாப் போர்முறை " என்ற நூலிலிருந்து சில பகுதிகளின் தமிழாக்கம்.)

" ...... அரசியல் என்பது இரத்தம் சிந்தாப் போர் ; போர் என்பதோ இரத்தம் சிந்தும் அரசியல் ".

—மாவோ, "நீடிக்கப்பட்ட போராட்டம்" என்ற நூலில்.

## 1. கொரில்லாப் போர்முறை என்றால் என்ன ?

### வலிமை குறைந்தோரின் ஆயுதம்

கொரில்லாப் போராட்டம் தனித்துவமான தன்மைகளையும், நோக்குகளையும் தன்னகத்தே கொண்டது. வலிமை குறைந்த ஒரு தேசம் ஆயுதபலத்தால் வலிமை கூடிய ஒரு தேசத்துக்கு எதிராகப் பிரயோகிக்கும் ஆயுதம்தான் இப் போர்முறை. பலங்குன்றிய தேசத்துள் ஊடுருவும் படையெடுப்பாளன் அந்நாட்டின் நிலப்பரப்பைக் கொடூர அடக்குமுறையால் ஆட்சி செய்யும்போது சில தடைகளை எதிர் கொள்கிறான். அந்நாட்டின் நில அமைப்பு, காலநிலை மற்றும் பொதுவாக ஆக்கிரமிப்புக்கு உள்ளாகிய சமுதாயம் போன்ற காரணிகள் அவனது முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக அமைகின்றன. ஆக்கிரமிப்பாளனை முற்கொள்ளும் பிரதிகூலங்கள், அவனை எதிர்த்துப் போராடுவோருக்கு அநுகூலங்களாக அமையும். கொரில்லாப் போர்முறையில் நாம் இவ்வநுகூலங்களை எதிரிக்கு எதிராகத் திருப்பி அவனை எதிர்த்து முறியடிப்போம்.

### புரட்சிகரப் போராட்டம்

கொரில்லாப் போர்முறைக்கும் மக்களுக்கும் இடையில் உள்ள தொடர்புதான் என்ன ? அரசியல் இலக்கற்ற கொரில்லாப் போராட்டம் தோல்வியையே தழுவும், போராட்டத்தின் அரசியல் குறிக்கோள்கள் மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிக்காவிடின் அவர்களின் அநுதாபத்தையும், ஒத்துழைப்பையும், உதவிகளையும் ஒருபோதும் பெறமுடியாது, எனவே கொரில்லாப் போராட்டத்தின்

உயிர்த்துடிப்பு புரட்சித்தன்மை வாய்ந்தது. ஆனல் எதிர்ப் புரட்சி அம்சம் கொண்ட போராட்டத்திலோ கொரில்லாப் போர்முறைக்கு இடமே இல்லை. மக்கள் சக்தியிலிருந்து ஊற்றெடுத்து அவர்களின் ஏகோபித்த ஆதரவை அடித்தள யாகக் கொண்டது கொரில்லாப் போர்முறை. மக்களின் அநுதாபத்தையும், ஒத்துழைப்பையும் அந்நியப்படுத்தி ஒரு கொரில்லாப் போராட்டத்தை ஒரு போதும் முன்னெடுத்துச் செல்ல முடியாது.

## கொரில்லாப் போர்முறையை மதிப்பிடல்

கட்டுக்கோப்பற்ற கொரில்லாப் போராட்டம் வெற்றி யீட்டாது. மேலும் எமது இயக்கத்தை கொள்ளைக்காரர் கள், அராஜகர்சள் என இகழ்வோர் கொரில்லா நடைமுறை அம்சங்கள் ஆழமாகப் புரிந்து கொள்ளாதவர்கள். விரக்தி யுற்ற இராணுவத்தினர், போக்கிரிகள், கொள்ளைக்காரர் கள் போன்ருேரின் புகலிடமே எமது இயக்கமென இவர்கள் கூறித்திரிவர். எமது இயக்கத்தை மானபங்கப்படுத்துவதே இவர்கள் நோக்கமாகும். சில கொரில்லாக்கள் ஊழலுக் காட்பட்டிருப்பதையோ, அல்லது கொரில்லாக்கள் என்ற போர்வையில் சில சக்திகள் சட்டவிரோத நடவடிக் கைகளில் ஈடுபடுவதையோ நாம் மறுக்கவில்லை. தற்கால சூழ்நிலையில் இயக்கத்தில் கட்டுக்கொப்பின்மையின் அறிகுறி கள் தென்படுவதையும் நாம் மறுப்பதற்கில்லை. இவ்வறி குறிகள் பாரதுரமானதாகவும் இருக்கலாம். ஆனல் மேற் குறிப்பிட்ட இத்தற்காலிக நிகழ்வுகளை மட்டுமே அடிப் படையாகக் கொண்டு கொரில்லாப் போராட்டத்தை நாம் மதிப்பீடு செய்யலாமா? ஊழல்களை உன்னிப்பாக அவ தானித்து அவற்றைக் களைவதற்கு நாம் முயலவேண்டும். இவ்வகையில்தான் கொரில்லாப் போராட்டத்தை ஊக்கு வித்து அதன் இராணுவ ஆற்றலை மேம்படுத்தலாம்.

"இது கடினமான பணி. இதற்கு வெளி உதவிகள் கிட்டப்போவதில்லை. இப்பிரச்சனைக்கு அவசரத் தீர்வு மில்லை. போராட்டப் பாதையில் மக்களே தம்மைச் சீர் திருத்திக் கொள்ள வேண்டும். எமது கடந்தகால அநுபவங் களைக் கொண்டு, நாம் மக்களின் அறிவை மேம்படுத்தி அவர்களைச் சீரிய நெறியில் வழிநடாத்த வேண்டும். கொரில்லாப் போர் முறையில் தீமைகள் ஒருபோதும் இல்லை. கட்டுக்கோப்பற்ற, ஒழுங்கு முறையற்ற செயல்கள் தான் அராஜகமானவை" என்கிருர் லெனின், "கொரில்லாப் போராட்டம் பற்றி" என்ற நூலில்.

## புரட்சிகர தேசிய விடுதலைப் போர்

பொதுப்படையான ஒரு புரட்சிப் போருக்கும், வர்க்க ரீதியான போராட்டத்துக்கும் இடையில் வேறுபாடுண்டு.

யாளர்கள், மற்றும் கல்விமான்கள், உள்ளூர் இராணுவத்தினர், கலைஞர்கள் மற்றும் நிலையான தொழில்களை மேற்கொண்டிராதோர் போன்றவர்களின் தோள்களில் சுமத்தப்படுகிறது. சமீபகாலத்தில் பல்வேறு மாகாணங்களில் பெருமளவிலான கொரில்லா நடவடிக்கைகள் தலைதூக்கி உள்ளன. இவை யாவும் தேசாபிமானிகளின் தலைமையில் ஒழுங்கு செய்யப்பட்டவை. பெருமளவிலான இந்நடவடிக்கைகள் யாவும் எமது மேற்கூறிய கூற்றுக்கும் சான்று பகரும். கொரில்லாக் குழுக்களின் எண்ணிக்கை அதிகரிக்குமாயின் மேம்பட்ட சூழ்நிலை உருவாகும். ஒவ்வொரு குறிச்சியும் ஒவ்வொரு பிராந்தியமும் பெருமளவில் கொரில்லா வீரர்கள் குழுக்களை அமைக்குமாயின், இக்குழுக்களை ஒன்று திரட்டுவதன் மூலம் ஒரு கொரில்லா அணி பரிணமிக்கும்.

"நான் ஒரு விவசாயி" அல்லது "ஒரு நான் ஒரு மாணவன்" "நான் இலக்கிய உரையாடலில் கலந்து கொள்வது பொருந்தும். ஆனால் போர்க்கலை எனக்கு ஒத்திசைவானதல்ல" என்று கூறுவோர் உளர். இக்கூற்றில் உண்மையில்லை. ஒரு விவசாயிக்கும் ஒரு போர் வீரனுக்கும் இடையில் குறிப்பிடக்கூடிய வேறுபாடு கிடையாது. நீங்கள் வீரம்மிக்கோராக இருத்தல் அவசியம். உங்கள் கமங்களைக் கைவிட்டு போர் வீரர்கள் ஆகுங்கள். நீங்கள் விவசாயிகளாக இருப்பது வேறுபட்டதொன்றதல்ல. நீங்கள் கல்வியறிவுள்ளவர்களாயின் அதுவும் மிக நல்லது. ஆயுதத்தைக் கையில் ஏந்துவீர்கள் ஆயின் நீங்கள் போர் வீரர்கள்; ஒழுங்கமைப்புக்கு உள்ளாவீர்கள் ஆயின், நீங்கள் ஒரு இராணுவ வீரர் குழுவாகப்பரிணமிப்பீர்கள்.

## போர்முறைப் பல்கலைக் கழகம்

கொரில்லாப் போராட்டம் ஒரு போர்முறைப் பல்கலைக் கழகமாகும், நீங்கள் பலதடவைகள் வீரத்துடனும் ஆவேசத்துடனும் போர் புரிந்தபின் ஒரு இராணுவ அணியின் தலைவனாவதற்கு வாய்ப்புண்டு. பிரபலமான போர்வீரர்கள் எல்லாம் உங்களிலும் மேம்பட்டவர்களாக இருக்கப் போவதில்லை. கேள்விக்கே இடமின்றித் தம்மில் இருந்து கொரில்லாக் குழுக்களை ஒழுங்கமைக்கும் மக்கள் தான் ஒரு கொரில்லா போர்முறையின் உற்பத்தி ஊற்றாகும்.

## கொரில்லா இராணுவத்தின் மூல அங்கங்கள்

கொரில்லா தலைவர்களையும் கொரில்லா வீரர்களையும் ஒரு கொரில்லா இராணுவத்தின் மூல அங்கங்கள் எனலாம். கொரில்லாப் போராட்டமானது தொடர்ச்சியான ஒரு போராட்டமாகும். ஆகையால் கொரில்லாத் தலைவர்கள் வீரம்மிக்கோராயும், தன்னம்பிக்கை உள்ளோராயும்,

மக்களின் விடுதலை என்ற உயரிய இலட்சியத்துக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டோராயும் இருத்தல் அவசியம். ஒரு கொரில்லாத்தலைவன் கீழ்க்கண்ட அம்சங்களைத் தன்வசம் கொண்டவன்; பலவிதமான அவல நிலைகளுக்கு உள்ளாகினும் மிகவும் சகிப்புத் தன்மையைக் கொண்டிருப்பதால் தனது போர்வீரர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக அமைவான். மக்களுடன் இலகுவில் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்பவன், தலைவனதும் அவனது போர் வீரர்களினதும் ஆத்ம பலம் ஒன்றிணைவதால் ஜப்பானிய இராணுவத்துக்கு எதிரான போராட்டம் உரம் பெறுகிறது. ஒரு தலைவன் போர் முனையில் வெற்றியீட்ட வேண்டுமாயின் போர் உத்திகளைக் கற்றறிதல் அவசியம். இவ்வகை அம்சங்களைக் கொண்ட ஒரு தலைவனின் கொரில்லா அணியானது ஒரு போதும் தோல்வி காணாது. ஆரம்ப கால கட்டத்தில் ஒவ்வொரு கொரில்லா அணியும் இவ்வகைத் தலைவனைக் கொண்டிருக்கும் என்று நான் கூறவில்லை. கொரில்லாத் தலைவர்கள் இயல்பாகவே சில நல்ல அம்சங்களைக் கொண்டிருத்தல் அவசியம். போராட்டம் வளர்ச்சியுறும் போது இத்தன்மைகள் விருத்தி செய்யப்படலாம். ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கு உழைக்கும் உன்னத இலட்சியத்தை மேற்கொள்வதே அதிமுக்கிய இயல்பு அம்சமாகும். இது ஒருவரிடம் இருக்குமாயின் மற்றவை தாமாகவே வளர்ச்சியடையும். இந்த அம்சம் இல்லாவிடின் எம்மால் ஒன்றுமே சாதிக்க முடியாது. ஒரு குழுவிலிருந்து தலைவர்களைத் தெரிவு செய்யும் போது இப்பண்பைக் குறிப்பாக அவதானிக்க வேண்டும். ஒரு குழுவின் தலைவர்கள் உள்ளூர்வாசிகளாக இருத்தல் அவசியம். இவ்வகையில்தான் கொரில்லாக் குழுக்களுக்கும் உள்ளூர் வாசிகளுக்கும் இடையில் நல்லுறவு வளர்வது சாத்தியமாகும். இவ்வகையில் தெரிவு செய்யப்படும் கொரில்லா தலைவர்கள் சூழ்நிலைகளுக்கு பரிச்சயமானவர்களாக இருப்பர். கொரில்லா தலைவர்களாவதற்குரிய தகைமைகள் கொண்ட உள்ளூர் வாசிகளின் எண்ணிக்கை குறைவாக இருக்குமிடத்து, அவர்களுக்கும் பயிற்சியும் கல்வியறிவும் புகட்டுவதற்கு எல்லாவித முயற்சிகளையும் நாம் மேற்கொள்ளுதல் அவசியம். இவ்வாறு தலைமைக்குரிய பண்புகளை நாம் உள்ளூர் வாசிகளிடம் வளர்க்க முடியும். உள்ளூர் கொரில்லா தலைவர்களுக்கும் வெளியூர் கொரில்லா தலைவர்களுக்கும் இடையில் எவ்வித கருத்து வேறுபாடும் இருக்கக்கூடாது.

தொண்டர்கள் மட்டுமே சேவைக்கு ஏற்றுக்கொள்ளப் படுவர் என்ற கொள்கையுடன் ஒரு கொரில்லாக்குழு இயங்க வேண்டும். மக்களைச் சேவைக்கு வற்புறுத்துவது தவருகும். போராட விரும்பும் ஒருவரின் சமுதாய நிலமையோ, அல்லது பதவியோ ஒரு பொருட்டல்ல. ஆனுல் துணிவும் மன உறுதியும் உள்ளவர்கள்தான் நீடிக்கப்பட்ட ஒரு கொரில்லாப் போராட்டத்தின் இன்னல்களைத் தாங்கிக் கொள்ளக் கூடியவர்கள்.

தொடர்ந்து கட்டுப்பாடுகளை மீறும் ஒரு போராளி இராணுவத்தில் இருந்து வெளியேற்றப்படல் வேண்டும். கேடு விளைவிப்போர், போக்கிரிகள் முதலியோரை சேவைக்கு ஏற்றுக் கொள்ளக்கூடாது. கஞ்சாப் பழக்கம் தடை செய்யப்படல் வேண்டும். இப்பழக்கத்தை விடமுடியாதோர் வெளியேற்றப்படல் வேண்டும், ஒரு கொரில்லாப் போரின் வெற்றியானது கொரில்லாப் போராளிகளின் பரிசுத்தத்திலும் தூய்மையிலும் பெருமளவு தங்கியுள்ளது.

கொரில்லாப் போரின் போது எதிரி மனச்சாட்சியும் தேசபற்றும் அற்ற சிலரை, கொரில்லா அணியில் சேர்வதற்குத் தூண்டி விடுவது நியதி. இவர்கள் சேர்வதன் நோக்கம் கொரில்லா அணியை எதிரிக்குக் காட்டிக் கொடுப்பதே. எனவே அணித்தலைவர்கள் நமது வீரர்களுக்குத் தொடர்ந்து கல்வி போதித்து, தேசப்பற்றை அவர்கள் மனதின் ஆழத்தில் பதிந்து விடல்வேண்டும். இது துரோகிகளை முறியடிக்கும், அணியில் உள்ள துரோகிகள் கண்டு பிடிக்கப்பட்டு வெளியேற்றப்படல் வேண்டும், துரோகிகளின் வலைக்குள் சிக்கியோர் தண்டிக்கப்பட்டு வெளியேற்றப் படல் வேண்டும். இப்படியான சந்தர்ப்பங்கள் எழும் பொழுதெல்லாம் அணித்தலைவர்கள் தமது வீரர்களை அழைத்து உண்மை நிலையை விளக்கி துரோகிகளை அறவே வெறுக்கச்செய்தல் வேண்டும், இந்த நடைமுறை மற்றப் போர் வீரர்களுக்கு ஒரு எச்சரிக்கையாகவும் அமையும். ஒரு அணித்தலைவன் துரோகியெனக் கண்டு பிடிக்கப்பட்டால், அவனுக்கு அளிக்கப்படும் தண்டனை அறிவுபூர்வமாக நிர்ணயிக்கப்பட வேண்டும். எவ்வாருயினும் இராணுவத்திலிருந்து துரோகிகளை நீக்கும்பணி மக்களுள் துரோகிகளை நீக்குவதுடன் ஆரம்பமாகிறது.

## 5. கொரில்லா போர்முறையின் அரசியல் சிக்கல்கள்

### உயிர் நாடி

ஒரு கொரில்லா அணி தனது போராட்டத்தின் அரசியல் இலக்கையும், அவ்விலக்கை அடைவதற்கான அரசியல் இயக்க அமைப்பையும் துல்லியமாகக் கிரகித்துக் கொள்ளல் வேண்டும், என நான் முன்னர் குறிப்பிட்டிருந்தேன். கொரில்லாப் படைகளினதும் புரட்சிகர போர்முறையினதும் உயிர்நாடியான அரசியல் செயல் திட்டங்கள் நிறைவேறுவதற்கு கொரில்லா அணியின் அமைப்பும் ஒழுக்கமும் மிகவும் உயர்தரமானதாக அமைய வேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும்.

### அரசியல் போதனைகள்

எல்லாவற்றுக்கும் மேலாக இராணுவத்தினதும். அரசியல் அமைப்பினதும் தலைவர்களுக்கு ஜப்பானை எதிர்க்கும் கொள்கைத் திட்டத்தைப் போதனை செய்வதில்தான் அரசியல் நடவடிக்கைகள் தங்கியுள்ளன. இக்கொள்கையானது தலைவர்கள் மூலமாகப் படைவீரர்களைச் சென்றடையும் கொரில்லாக் குழுவின் அங்கத்தவராக இருப்பதனுல். மட்டுமே தான் ஜப்பான் எதிர்ப்பதாக ஒருவர் உணரக் கூடாது. ஜப்பான் எதிர்ப்புக் கொள்கையானது என்றும் பிரசன்னமாயுள்ள ஒரு வைராக்கியமாக இருத்தல் வேண்டும். இதை நாம் மறப்போமாயின், ஒன்றில் எதிரியின் மருட்டல்களுக்குச் சரணடைவோம் ; அல்லது மனச் சோர்வுற்றுப் பிணவாங்குவோம். ஒரு நீண்டகால போராட்டத்தில், மக்களின் அடிமைத்தளை அறுத்தெறியப்பட வேண்டும் என்ற வைராக்கியம் ஆழப்பதியாவிடின், எமது நம்பிக்கையில் நாம் சலனமுற்று உண்மையில் எதிர்மனப்பாங்கு கொண்டோராக மாறி விடுவோம். நல்வாழ்வு கொண்ட ஒரு சுதந்திர சீனுவை அமைப்பதற்கு ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை விரட்டியடிக்க வேண்டும் என்ற எமது இலக்கை ஒவ்வொருவரும் விளங்கிக் கொள்ளும் வகையில் பொதுவான கல்விப் போதனை அமையாவிடின் எமது போராளிகள் வைராக்கியம் இல்லாமல் போராடித் தமது மன உறுதியை இழப்பர்.

### மக்களின் விழிப்புணர்வு

கொரில்லாப் பிராந்தியங்களில் வாழும் மக்களுக்கு அரசியல் இலக்கைத் தெளிவாகவும் துல்லியமாகவும் சுட்டிக் காட்டி அவர்களின் தேசிய விழிப்புணர்வைத் தட்டி எழுப்ப வேண்டும். கொரில்லாக்கள் மட்டுமின்றி, எமது அரசியல் இலக்கை அடைவதில் அக்கறை கொண்டோர் யாவருமே இயக்கத்தின் அரசியல் கொள்கைத்திட்டத்தை அடிப்படை

யில் விளங்கிக் கொள்ளுதல் மிகவும் முக்கியம். "தேசிய இயக்கத்தின் போராட்ட கொள்கைத்திட்டம்" என்ற நூல் அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் கொரில்லாப் பிராந்தியங்களில் பரவலாக விநியோகிக்கப்படல் வேண்டும். எமது தேசிய இயக்க அமைப்பு குறைபாடிருப்பின், கொரில்லா வீரர்களுக்கும், மக்களுக்கும் மத்தியில் அதிமுக்கியமாக நிலவவேண்டிய ஐக்கியம் நிறைவானதாக இருக்காது.

## அரசியல் நோக்கங்களைப் புரிந்து கொள்ள வேண்டும்

எமது இந்தப் போராட்டத்தினதும், ஜப்பான் எதிர்ப்பு முன்னணியினதும் அரசியல் நோக்கங்களைக் கொரில்லாப் படைகளின் தலைவர்கள் குறிப்பாக ஆராய்ந்து புரிந்து கொள்ள வேண்டும். "எமது கவனம் எல்லாம் ஆயுதத்தைக் கையாளும் வித்தையில்தான், எமக்கு அரசியலில் அக்கறை இல்லை" என்று கூறும் இராணுவவாதிகள் உளர். இராணுவ நடவடிக்கைகட்கும், அரசியலுக்குமிடையில் உள்ள தொடர்புகளைப் போர்க்களையில் மட்டுமே தனியான அக்கறை கொண்ட இந்த இராணுவ வாதிகட்குத் தெளிவாக விளக்குதல் இன்றியமையாததது. அரசியல், இராணுவ நடவடிக்கைகள் ஒத்த தன்மை அற்றவை ஆயினும். ஒன்றில் இருந்து ஒன்றை வேறுபிரித்தல் இயலாது.

## சர்வதேசிய போராட்டம்

உலகமானது அல்லல்களின் இறுதிக் கால கட்டத்தில் உள்ளது. எனக் கருதிக்கொள்ள வேண்டும். மனித இனத்தின் பெரும்பகுதி' ஒடுக்கப்படும் உலக மக்களுக்கு நீதி வழங்கும் ஒரு போராட்டத்தில் ஈடுபடுவதற்கு ஏற்கெனவே தாயராகி விட்டது, அல்லது தன்னைத் தயாரித்துக் கொண்டிருக்கிறது. இப்போராட்டமானது எவ்வளவுதான் நீண்டதாக இருந்தாலும், இதன்பின் முன்னர் ஒருபோதும் இல்லாதவாறு உலக அமைதியின் சகாப்தம் தொடரும். சீன மக்களின் விடுதலைக்காக நாம் ஈடுபட்டுள்ள இன்றைய போராட்டமானது, மனித விடுதலைக்கான போராட்டமாகும். எமது போராட்டத்தின் மூலம் நிறுவப்படும் நல்வாழ்வு கொண்ட சுதந்திர சீனுவானது புதியதோர் உலகத்தின் அங்கமாக அமையும். இவ்வகை ஆழ்ந்த பார்வைகளைப் போர்க்களையில் மட்டுமே அக்கறை கொண்ட இராணுவவாதிகள் கிரகித்துக் கொள்வது கடினம். எனவே இவற்றை மிகவும் அவதானத்துடன் அவர்களுக்கு விளக்க வேண்டும்.

## புரட்சிகர இராணுவத்தின் ஒழுக்கம்

ஒரு புரட்சிகர இராணுவம் வரையறுக்கப்பட்ட ஜனநாயக ரீதியில் நிலை நாட்டப்பட்ட ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தல் அவசியம். எல்லா இராணுவங்களிலும் துணை

யாளர்கள் தலைவர்களின் ஆணைக்கு அடங்கி நடத்தல் கட்டாயமாகக் கைக்கொள்ளப்பட வேண்டிய ஒழுக்கமாகும். கொரில்லா ஒழுக்க முறைக்கும் இது பொருந்தும், ஆனால் கொரில்லா அணியின் ஒழுக்கத்தின் அடிப்படை ஒவ்வொரு கொரில்லா வீரனதும் மனச்சாட்சியாகும். கொரில்லா வீரர்களைப் பொறுத்தளவில் கட்டாயப்படுத்தப்பட்ட ஒழுக்கமுறை பலனளிக்கக் கூடிய ஒன்றல்ல எந்தப் புரட்சிகர இராணுவத்திலும் வீரர்களையும் தலைவர்களையும் பொறுத்தளவில் அவர்களின் நோக்கத்தில் ஒற்றுமை உண்டு. எனவே இவ்வகை இராணுவத்தில் ஒழுக்கம் என்பது ஒவ்வொருவரும் தாமாகக் கடைப்பிடிக்கும் ஒன்றாகும், கொரில்லா வீரர்கள் கைக்கொள்ள வேண்டிய ஒழுக்கம், வழமையான இராணுவ ஒழுக்கம் போல் மிகக்கடுமையானதாக இல்லாவிடினும், அதைக் கடைப்பிடிக்க வேண்டிய தேவை ஒரு கொரில்லா அணிக்குண்டு. ஒரு கொரில்லா வீரன் ஒழுக்கத்தைத் தானாகவே கைக்கொள்ளும் போது மட்டுமே தான் எதற்காகப் போராடுகிறான், ஏன் கட்டளைக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பதைப் பூரணமாக உணர்ந்து கொள்வான். இவ்வகையில் அமைந்த ஒழுக்கமே ஒரு இராணுவத்தின் வலிமையின் சிகரமாகும். மேலும் இப்படியான ஒழுக்க முறையால் மட்டுமே வீரர்களுக்கும் அவர்களின் தலைவர்களுக்கும் இடையிலான உறவில் உண்மையான இணக்கத்தை ஏற்படுத்த முடியும்.

## கொரில்லா இராணுவ அமைப்பின் அம்சங்கள்

எந்த ஒரு அமைப்பு முறையிலும் ஒழுக்கமானது திணிக்கப்படுமாயின் தலைவர்களுக்கும் வீரர்களுக்கும் இடையில் உள்ள உறவுநிலையைப் பொறுத்தளவில் ஒருவர்மேல் ஒருவர் அக்கறையின்மை, தொனிக்கும். தலைவர்கள் தமது வீரர்களை உடலளவிலோ அல்லது நாவளவிலோ துன்புறுத்தும் எண்ணமானது பழமை வாய்ந்த நிலப்பிரபுத்துவ மனப்பான்மை கொண்டது மேலும் இது, தாமாக கடைப்பிடிக்கும் ஒழுக்கம் என்ற கோட்பாட்டுக்கு புறம்பானதும் கூட. நிலப்பிரபுத்துவ அடிப்படையில் அமைந்த ஒழுக்கமானது கொரில்லா அணியின் உள்ளார்ந்த ஒற்றுமையைக் குலைத்து, அணிகள் போராடும் வல்லமையை ஒழித்துவிடும். தாமாகவே கடைப்பிடிக்கும் ஒழுக்கம், ஒரு இராணுவத்தின் ஜனநாயக அமைப்புமுறையின் அடிப்படை அம்சமாகும்.

இரண்டாவது அம்சத்தைத் தலைவர்களும் இராணுவ வீரர்களும் அநுபவிக்கும் உரிமைகளின் தரத்தில் நாம் கண்டு கொள்ளலாம். ஒரு புரட்சிகர இராணுவத்தில் எல்லோருக்கும் அரசியல் உரிமை உண்டு. மக்களின் விடுதலை என்ற கேள்விக்கு இடம் கொடுக்கப்பட்டு இவ்விடயத்தைவிவாதிக்க வேண்டும். அத்துடன் பிரச்சார நடவடிக்கைகளும் ஊக்குவிக்கப்படல் வேண்டும். இவ்வகை இராணுவத்தில், முக்கிய

மாக கொரில்லா இராணுவம் ஒன்றில் தலைவர்களதும், வீரர்களினதும் வாழ்க்கைமுறை பெருமளவில் வேறுபடுதல் கூடாது. வீரர்கள் எவ்வகை சூழல்களில் வாழ்கிறார்களோ அவ்வண்ணமே தலைவர்களும் வாழவேண்டும். தலைவர்களின் இவ்வித வாழ்வுதான் வீரர்களின் அபிமானத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதற்கான ஒரே வழியாகும். இந்த அபிமானமும் நம்பிக்கையும்தான் ஒரு போராட்டத்தின் உயிர்நாடி ஆகும். எல்லா விதத்திலும் சம உரிமை என்பது சரியான நோக்கல்ல. ஆனால் ஒரு போராட்டத்தின் இன்னல்களையும் அபாயங்களையும் எதிர்கொள்வதில் சக வாழ்வு வேண்டும். இந்த ரீதியில்தான் நாம் தலைவர்களினதும் வீரர்களினதும் ஒருங்கிணைப்பை ஏற்படுத்த முடியும். இவ்வகை ஒற்றுமையானது, சகாக்களுக்குள்ளும் ; தலைவர்கள், உதவியாளர்கள் மத்தியிலும் நிலவும் ஒருங்கிணைப்பின் முழுமையாகும்.

உள்ளூர்வாசிகளுக்குள்ளும், கொரில்லாக்களுக்கு மிடையில் ஆத்மீக ஒற்றுமை நிலவுதலும் அவசியமாகும். எதிர்ப்படைகள் ஆதிக்கம் செலுத்தும் பிரதேசத்துள் கொரில்லாக்கள் நீண்ட காலம் நிலைகொள்ள முடியாது என்று பலர் எண்ணுவர். இவர்கள், மக்களுக்கும் கொரில்லா இராணுவத்துக்கும் மத்தியில் நிலவ வேண்டிய உறவுமுறையை ஆழமாகக் கிரகித்துக் கொள்ளவில்லை என்பது புலனாகும். இங்கு நாம் மக்களை நீருக்கும் கொரில்லாக்களை அதில் வாழும் மீனுக்கும் ஒப்பிடலாம். நீரும் மீனும் ஒருமித்து இருக்க முடியாதென எப்படிக் கூறலாம்? ஒழுக்கமற்ற இராணுவம்தான் மக்களை பகைத்துக் கொள்ளும், இவ்வகை இராணுவம் நிலத்தில் விழுந்த மீன் துடித்து மாள்வதுபோல் மடிந்துவிடும்.

கைப்பற்றப்பட்ட எதிரி சிப்பாய்களையும், அவர்களுள் காயமடைந்தோரையும் மனிதாபிமானத்துடன் நடத்துவோமாயின், இச்செயல், எதிரி படைகள் மத்தியில் எமக்கும் பிரச்சாரமாக அமையும். இவ்வகையில் எதிரியை அழிக்கும் பணியினை நாம் முன் எடுத்துச் செல்லலாம். இப்பணியில் நாம் தவறுவோமாயின், எதிரியின் ஒருமைப்பாட்டைப் பலப்படுத்தியோர் ஆவோம்.

## 6. ஜப்பானுக்கு எதிரான கொரில்லா போர்முறைத் திட்டம்

### நீடிக்கப்பட்ட போராட்டம்

ஜப்பானுக்கெதிரான எமது போர்முறைத்திட்டத்தில், கொரில்லாப் போர்முறைத்திட்டமானது அடிப்படையான மரபுவழி போர்முறைகளுக்கு துணையானதாக அமைய வேண்டும் என்பது உறுதியான தீர்மானமாகும். இது ஒரு சிறு நாடாக இருக்குமேயானால் கொரில்லா நடவடிக்கைகள் வழமையான இராணுவத்தின் செயல்பாட்டுக்கு அண்மித்திருப்பதுடன் மட்டுமல்லாமல் அவற்றுடன் நேரடியாக இணைந்து அவற்றைப் பூரணமாக்கும். இவ்வகைச் சூழல்களில் கொரில்லாப் போர்முறைத் திட்டம் என்ற கேள்விக்கு இடமில்லை ; அல்லது உதாரணமாக, விரைவில் ஒரு படையெடுப்பாளனை விரட்டுவதற்கு ரஷ்யாவைப் போல் வலிமை மிக்க நாடாக எம்நாடு இருக்குமேயானால். இக்கேள்வி எழப்போவதுமில்லை சீனா பாரிய நிலப்பரப்புடைய வலிமை குறைந்த தேசமாக இருப்பதன் காரணமாகவே இக்கேள்வி எழுகிறது. கொரில்லாத் தாக்குதல்களை அம்சமாகக் கொண்ட ஒரு தொடர்ச்சியான போர்த்திட்டத்தை மேற்கொள்ள முடியும் என்ற நிலைக்கு சீனா இன்று முன்னேறியுள்ளது முதற்பார்வைக்கு இவை நெறிதவறியவையாகவும் புறம்போக்கானவையாகவும் தென்படினும், உண்மையில் கொரில்லாத் தாக்குதல்கள் அவ்வகையில் அமைந்தவை அல்ல.

ஜப்பானது இராணுவ ஆற்றலின் பற்றுக்குறை காரணமாக அந்நாடு படையெடுத்தும் பாழ்படுத்தும் பிரதேசங்களில் போதியளவு பாதுகாப்புப் படைகள் நிலை கொள்ளவில்லை. இவ்வகை சூழல்களின் கீழ் கொரில்லாக்களின் முதன்மைப் பணிகள் மூன்று. முதலாவதாக புறநிலைப் பகுதிகளில் போராடுதல் ; அதாவது எதிரி நிலை கொண்டுள்ள பிரதேசத்தினுள் கொரில்லாத் தாக்குதல்களில் ஈடுபடுதல். இரண்டாவதாக தளங்களை நிறுவுதல், இறுதியாக போராட்டப் பிரதேசத்தை விரிவாக்கல். எனவே போராட்டத்தில் கொரில்லாக்களின் ஈடுபாடு வெறும் உள்ளூர் கொரில்லா யுக்திகள் மட்டும் சம்பந்தப்பட்ட விடயம் அல்ல முழுமையான போர்முறைத் திட்டத்தின் முக்கியத்துவத்துடன் தொடர்புள்ள விடயமாகும்.

இத்தகைய போராட்டமானது தனது பரந்த காலம், இடம் போன்ற காரணிகளுடன் ஒரு புதிய இராணுவ வழிமுறையை நிலை நாட்டுகிறது. இதன் மையத்தில்தான் சீனா இன்று நிலைகொண்டுள்ளது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யம்

இந்தியாவுக்கும், வட அமெரிக்காவுக்கும் தன்னை விரிவுபடுத்திக் கொண்டது. ஐரோப்பியர்கள் மத்திய, தென் அமெரிக்காவுக்கும் படையெடுத்துச் சென்று ஆட்சி செலுத்தியது போன்ற கடந்த காலங்களை ஜப்பான் இன்று நினைவு கூர்வது போல் தோன்றுகிறது. இன்றைய சீனவைப் பொறுத்தளவில், ஜப்ப னின் வெற்றிவாகை சூடும் கனவானது, கற்பனையானது ; அத்துடன் யதார்த்தமற்றது, இன்றைய சீன நேற்றைய சீனவைப் போலல்லாமல் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்ட ஒரு தேசம். புதுமையான கொரில்லாப் பாணித் தாக்குதல்கள் இன்றைய சீனவின் ஆயுதங்களில் ஒன்று. எமது எதிரி இக்காரணிகளை கருத்திற் கொள்ளாது நிலைமைகளை தனக்குச் சாதகமாக மதிப்பீடு செய்வானாயின், பேரழிவை எதிர்நோக்குகிருன்.

## கொரில்லா தாக்குதல்கள்

கொரில்லா போர்த்திட்டம், முழுமையான போர் முறைத் திட்டத்துடன் ஒன்றிணைந்து இருந்தாலும் கொரில்லா தாக்குதல்கள் மரபுவழி இயங்கு முறையிலிருந்து வேறுபட்டவை. ஒவ்வொரு போர் முறையும் தனக்கேயுரிய சில விசேட தன்மைகளைக் கொண்டது கொரில்லாக்கள் எதிர் கொள்ளும் சூழ்நிலைகளில் மரபுவழிப் போராட்ட வழி முறைகளை, பயன் தரும் வகையில் கையாள முடியாது.

கொரில்லாப் போரின் செயல் நுட்பங்களை ஆராயுமுன் எல்லா இராணுவ நடவடிக்கைகளுக்கும் அடிப்படையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட போர் நியதியை நினைவு கூருதல் நல்லது. " தனது பலத்தைப் பேணுதல் : எதிரியின் பலத்தை அழித்தல் " என்பதே அந்நியதியாகும். இந்த நியதியை அடிப்படையாகக் கொண்ட இராணுவ கொள்கைத் திட்டம், ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை ஒழித்து, ஒரு சுபிட்சம் உள்ள சுதந்திர சீனவைக் கட்டியெழுப்பும் நோக்கங்கொண்ட ஒரு தேசிய கொள்கைத்திட்டத்துடன் ஒருங்கிசைவானதே. இக்கொள்கைத் திட்டத்தை விரிவாக்கும் நோக்கிலேயே நாம் எமது இராணுவ பலத்தைப் பிரயோகிக்கிறோம். ஒரு போராட்டம் நிர்ப்பந்திக்கும் தியாகமானது தற்பாதுகாப்பு என்ற கொள்கைக்கு முரண்பட்டதொன்ரு ? இல்லவே இல்லை. இத்தியாகமானது எதிரியை ஒழிப்பதற்கும், தன்னைப் பாதுகாப்பதற்கும் வேண்டிய ஒன்று. ஒரு பகுதி மக்களின் தியாகத்தில்தான் முழுமையின் பாதுகாப்பு தங்கியுள்ளது. இந்த அடிப்படை நியதியின் மூலமே எல்லா இராணுவ நடவடிக்கைகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒரு போர்வீரன் மறைவான இடத்தில் இருந்து எதிரியைத் தாக்குவது போன்ற சாதாரண நிகழ்ச்சியில் இருந்து, போர்முறைத் திட்டங்களையும் யுக்திகளையும் வகுத்துக் கொள்வது வரை எல்லாவற்றிலும் இந்த அடிப்படை விதி பிரயோகிக்கப்படுவதை நாம் கண்டு கொள்ளலாம்,

ஒருவித ஆயத்தமும் இல்லாமல், ஆரம்பமாகி வளர்பவைதான் கொரில்லாக் குழுக்கள். எமது பலத்தைப் பாதுகாத்து வளர்ப்பதற்கும், எதிரியின் பலத்தை ஒழிப்பதற்கும் எவ்வித வழி முறைகளை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும்? இதற்கான முக்கிய ஆறு தேவைகள் பின் வருமாறு ;

1. செயற்பாட்டை முன்னெடுக்கும் திறனைப் பேணுதல்; இடையறுவிழிப்பு ; தற்காப்புப் போர்முறைத் திட்டத்தைக் கொண்ட ஒரு போரில் கவனிப்புடன் திட்டமிடப்பட்ட தாக்குதல் யுக்திகள் ; நீடிக்கப்பட்ட போர்முறைத் திட்டத்தைக் கொண்ட போரில், தாக்குதல் யுக்திகளின் வேகம் ; சுய பிரதேசத்துள் நடாத்துவதற்கான போர் முறைத் திட்டத்தைக் கொண்ட போரில் எதிரி ஆக்கிரமித்துள்ள நிலப்பரப்பினுள் இராணுவ செயற்பாடுகள்.

2. வழமையான இராணுவத்தின் செயற்பாடுகளுக்கு இணையான செயற்பாடுகள்.

3. தளங்களை நிறுவுதல்

4. தாக்குதலுக்கும் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கும் உள்ள தொடர்பைத் தெளிவாக விளக்கிக் கொள்ளல்.

5. இடம்விட்டு இடம் நகரும் செயற்பாடுகளை விருத்தி செய்தல்.

6. நேர்த்தியான அதிகார பீடம்

எதிரி எண்ணிக்கையில் குறைவாக இருப்பினும், அவனது படைகளினதும் உபகரணங்களினதும் இயல்பைப் பொறுத்தளவில் பலம் மிக்கவன். நாமோ எண்ணிக்கையில் பலம் மிக்கவராக இருப்பினும் இராணுவதரத்தை எடுத்துக் கொண்டால் பலம் குறைந்தவர்கள். போர்முறைத் திட்டத்தைப் பொறுத்தளவில். தற்பாதுகாப்புத் தன்மைகளைக் கொண்டதும், தொடர்ச்சியானதும், சுய பிரதேசத்துள் நடாத்தப்படுவதுமான ஒரு போரில், தாக்குதல் உத்திகள், அவற்றின் வேகம், எதிரி இடங்கொண்ட பிரதேசத்தினுள் செயற்பாட்டு உத்திகள் முதலிய செயற்திட்டங்களை விருத்தி செய்வதற்கு நாம் மேற்கூறிய காரணிகளைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும், இக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டது தான் எமது போர்முறைத் திட்டமாகும். எமது செயற்பாடுகள் யாவற்றிலும் இவற்றை நாம் கருத்திற் கொள்ளல் வேண்டும் மரபு வழிப் போர்முறையில் திகைக்க வைக்கும் அம்சம் இல்லை என்று கூறமுடியாது. ஆனல் கொரில்லாப் போருடன் ஒப்பு நோக்கின் இப்போர் முறையில் திகைக்க வைக்கும் தாக்குதல்களைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் மிகக்குறைவு. கொரில்லாப் போரில் வேகம் இன்றியமையாதது. கொரில்லா அணியினரின் நடமாட்டம் இரகசிய

மானதாகவும் வியக்கத்தக்களவு துரிதகதி உடையதாகவும் அமைதல் வேண்டும். எதிரியை அவன் எதிர்பாரா வண்ணம் எதிர்கொண்டு, தாக்குதலை அசுரகதியில் தொடங்குதல் வேண்டும். தாக்குதல் திட்டத்தை ஈடேற்றுவதில் தயங்கவே கூடாது. தன்னம்பிக்கை அற்றதும், விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு கொண்டதுமான தற்காப்பு நடவடிக்கைகளை கருத்திற் கொள்ளல் கூடாது. ஒரு தாக்குதலின் போது பல குறிப்பிட்ட கைகலப்புகளில் ஈடுபட்டுப் பாரிய அளவில் கலந்து செல்லக்கூடாது. எதிர்பாரா வண்ணம் ஆவேச மாகத் தாக்குவதே, அடிப்படையான வழிமுறையாகும்.

பல நாட்கள் நீடிக்கும் தாக்குதலில் ஈடுபடவேண்டிய சந்தர்ப்பங்கள் எழக்கூடும். (ஒரு எதிரி குழுவை முற்றாக ஒழிப்பதற்கு இக்கால நீடிப்பு அவசியமெனக் கருதுவோ மாயின்.) அதே வேளை ஒரு தாக்குதலை அதிகூடிய வேகத்தில் நிறைவேற்றுதல் மிகவும் பயன்தரும் செயலாகும் கொரில் லாப் போராட்ட அரங்கில் தற்காப்பு யுக்திகளுக்கு இடமே இல்லை. கணவாய்கள், ஆற்றுக்கடப்புகள், கிராமங்கள் போன்ற பொருத்தமான சூழல்களில் தான் காலம் தாழ்த்தும் நடவடிக்கைகளின் தேவை எழும்; ஏன் எனில் இவ்வகை இடங்களில் தான் எதிரிபடைகளின் ஒழுங்கமைப்பைக் குலைத்து அவற்றை ஒழிக்க முடியும்.

எதிரி எம்மிலும் பார்க்கப் பலசாலி. எமது படைகளை பரவலாக்கினால் தான் எதிரிக்கு இடையூறுகளை உண்டுபண்ணி, அவனது கவனத்தைக் குலைத்து, அவன் படைகளைக் கலையச் செய்து, அவனை ஒழிக்கமுடியும் என்பதில் உண்மையுண்டு. கொரில்லாப் போர் முறையானது பரம்பி இயங்கும் குழுக் களின் போராட்டமாக இருந்தாலும், சில சந்தர்ப்பங்களில் எதிரியை ஒழிப்பதற்குப் பொதுமையமொன்றில் ஒன்று சேர்தல் விரும்பத்தக்கது. ஒப்பு நோக்கும் போது பலம் குறைந்த எதிரியை இவ்வகையில் படைகளை 'ஒன்று சேர்ப் பது கொரில்லாப் போர்முறைக்கும் பொருந்தக் கூடிய தொன்றே

நாம் மின்னல் போன்ற தாக்குதல் உத்திகளைத் தீர் மானித்துக்கொள்ள வேண்டும். எமது ஆள்பலத்தை நேர்த் தியான முறையில் ஒருங்கு சேர்த்தும், பரம்பச் செய்தும் கையாள வேண்டும். எதிரி இடங்கொண்ட பிரதேசத்துள் இயங்குவதன்மூலம் அவனைச் சூழ்ந்து ஒழிக்க வேண்டும். மேற்கூறிய வழிகளால் மட்டுமே நாம் இப்போரை நீடிக்கச் செய்து தொடர்ச்சியான போராட்டமாக்கலாம். முழு இராணுவத்தையும் சூழ்ந்து கொள்ள முடியாவிடின் அதன ஒரு பகுதியையாவது நாம் ஒழிக்க முடியும். ஜப்பானியர் களைக் கொல்ல முடியாவிடின் அவர்களை கைப்பற்றிக் கொள்ளலாம். உள்ளூரில் ஈட்டப்படும் பல வெற்றிகளின்

முழுத்தாக்கமும் எதிர்க்கும் படைகளின் சார்பு நிலையான வலிமையை மாற்றியமைக்கும். ஜப்பானின் இராணுவ அதிகாரத்தின் அழிவு ; அத்துடன் சீனுவின் இலட்சியத்தின் பால் தோன்றியுள்ள உலக நாடுகளின் அநுதாபம் ; மற்றும் ஜப்பானில் தென்படும் புரட்சிகர மனப்பாங்கு ; இவை யாவும் ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை ஒழிப்பதற்குப் போதுமானவையே.

அடுத்து எமது செயற்பாட்டை முன்னெடுக்கும் திறன், இடையறுவிழிப்பு, கவனமாகத் திட்டமிடல் முதலிய விடயங்களை ஆராய்வோம். ஒரு போராட்டத்தில், செயற்பாட்டை முன்னெடுக்கும் திறன் என்ருல் என்ன ? இத்திறனை அடைவதற்கும் அதைப் பேணுவதற்கும் எல்லாப் போர்களிலும். யுத்தங்களிலும் எதிர் தரப்புப் படைகளுக்கிடையில் மல்லாட்டம் இடம் பெறும். ஏனெனில் செயற்பாட்டை முன்னெடுக்கும் திறனைக் கொண்ட தரப்பின் படைகள் தான் சுதந்திரமாக இயங்கக் கூடியவை. இத்திறனை இழக்கும் இராணுவம் தனது சுதந்திரத்தை இழக்கிறது. சுய செயற்திறனற்ற இந்த இராணுவம், தோல்வியையும், அழிவையும் தழுவிக் கொள்ளும் அபாயத்தை எதிர் நோக்கும்.

எதிரியின் பிரதேசத்துள் தாக்குதலில் ஈடுபடுவதையும், சுய பிரதேசத்தில் தற்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் ஒப்பு நோக்கில், பின்னதில் செயற்பாட்டை முன்னெடுக்கும் திறனைப் பெற்றுக் கொள்வது மிகவும் சிரமமானது. இதுதான் ஜப்பானின் செயற்பாடாகும். எவ்வாருயினும் ஜப்பானைப் பொறுத்தளவில் பல பலவீனங்கள் உள்ளன. இவற்றுள் ஒன்று, அதன் நோக்கத்தை நிறைவேற்ற ஆள்பல பற்ருக்குறை ஆகும். மற்ருென்று, தான் கைப்பற்றிய பிரதேசத்தில் வதியும் மக்கள் பால் காட்டும் கொடூரமாகும். மூன்ருவதாகச் சீனுவின் பலத்தைக் குறைவாக மதிப்பீடு செய்ததன் விளைவாக ஆக்கிரமிப்பாளனின் இராணுவ கும்பல்களுக்கிடையில் கருத்து வேறுபாடு தோன்றி உள்ளதால், இராணுவ வழிநடாத்தலில் பல தவறுகள் நேர்ந்துள்ளன. உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டால் சீனுவில் தனது ஆள்பலத்தை அதிகரிப்பதற்கு ஜப்பான் படிப்படியாக நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளது. அதே நேரத்தில் இராணுவ நடவடிக்கைகளைத் திட்டமிடுவதிலும்,

படைகளை அணிவகுப்பதிலும் பல விவாதங்கள் தோன்றி உள்ளதால், தனது கேந்திர நிலையை விருத்தி செய்யக்கூடிய பல சந்தர்ப்பங்களை ஜப்பான் கைநழுவ விட்டுள்ளது. அதன் படைகள் பெருமளவு சீனப்படைகளை அடிக்கடி சூழ்ந்து கொண்டாலும் ஒரு சிலரைத்தான் அவர்களால் கைப்பற்ற முடிவதை, மேற்கூறியவற்றில் இருந்து நாம் விளங்கிக் கொள்ளலாம் ஆள்பலக்குறைவு, வளங்களின் பற்றுக்குறை, படைகளின் காட்டுமிராண்டித்தனம், சாதுர்யமற்ற இராணுவ நடவடிக்கைகள் போன்றவற்ருல், ஜப்பானின் இராணுவ இயந்திரமானது தனது பலத்தை இழந்து கொண்டிருக்கிறது. ஜப்பானின் ஆக்கிரமிப்பு தணியாமல் தொடர்கிறது. ஆனல் நாம் சுட்டிக்காட்டிய பலவீனங்கள் காரணமாக, அதன் தாக்குதல்களின் நீடிப்பு வரையறுக்கப் பட்டுள்ளது. சீனவை ஒரு போதும் வெற்றி கொள்ள முடியாது. ஜப்பான் சுய செயலை இழக்கும் நாளும் வரும். உண்மையில் சில பகுதிகளில் ஏற்கெனவே இது நிகழ்ந்து விட்டது. தாக்குதல்கள் ஆரம்பமான போது சீன சுய செயலை இழந்த நிலையில் இருந்தது. ஆனல் போரின் இரண்டாவது கட்டத்துள் பிரவேசிக்கும் போது எமது கொரில்லாக்களும், மரபுவழி இராணுவமும் நடமாடும் போர் முறைத் தந்திரத்தைக் கையாள்வதைக் காண்கிறேம். இவ் வண்ணம் ஒவ்வொரு நாள் கழியும் போதும், செயற் பாட்டை முன்னெடுக்கும் திறனை நாம் ஜப்பானியரிடமிருந்து குறிப்பிட்டளவு கைப்பற்றிக் கொள்கிறேம்.

செயற்பாட்டை முன்னெடுக்கும் திறன் என்பது குறிப்பாக கொரில்லா அணியினருக்குப் பாரதூரமான விடயமாகும். இவர்கள் மரபுவழிப் படைகள் அறிந்திராத இக்கட்டான நிலமைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. எதிரியின் மேலாதிக்கம், எமது சாதாரண வீரர்களிடையே நிலவும் ஒற்றுமைக் குறைவு, அநுபவமின்மை என்பவற்றை நாம் கவனிப்பிற் கொள்ளலாம். எப்படி இருப்பினும் கொரில்லாக்கள் எதிரியின் பலவீனங்களைக் கவனத்திற் கொள்வாராயின் செயற்பாட்டை முன்னெடுக்கும் திறனைப் பெற முடியும். எதிரி ஆள் பலத்தில் குறைந்தவனுகையால் கொரில்லாக்கள் பரந்த பிரதேசங்களில் செயற்பட முடியும். எதிரி அந்நியனுகவும் காட்டுமிராண்டியாகவும் இருக்கும் காரணத்தால் கொரில்லாக்கள் இலட்சக்கணக்கான நம்

நாட்டு மக்களின் அநுதாபத்தைப்பெற்றுக் கொள்ளலாம். எதிரியின் படைத்தலைவர்கள் மதிகெட்டவர்களாதலால் கொரில்லாக்கள் நமது புத்திக் கூர்மையினுல் முழுப்பயன் பெறலாம். கொரில்லாக்களும் எமது மரபுவழிப் படைகளும் எதிரியின் பலவீனங்களைச் சாதகமாகப் பயன்படுத்தும் அதே வேளையில் எமது குறைபாடுகளையும் நிவர்த்தி செய்தல் வேண்டும். எமது குறைபாடுகளில் சில, தோற்றத்தில் மட்டுமே குறைப்பட்டுள்ளன. உண்மையில் அவை எமது பலத்தின் மூலாதாரமாகும். உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டால் பல கொரில்லாக் குழுக்கள் சிறியனவாக இருக்கும் காரணம், அவை எதிரியின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்துள் திடீர் எனத் தோன்றி மறைவதற்கு ஏற்றதாகவும் சாதகமாகவும் உள்ளது. இப்படியான நடவடிக்கைகளை எதிரியால் தாக்குப் பிடிக்கவே முடியாது. இப்படியான சுதந்திர இயங்குமுறையை மரபுவழிப் படைகள் பெற்றுக் கொள்வது மிகவும் அபூர்வம்.

பல அணிகளைக் கொண்டு கொரில்லாக்களை எதிரி தாக்கும்போது செயற்பாட்டை முன்னெடுக்கும் திறனை முன்னவர்கள் கைவிடாதிருத்தல் மிகவும் சிரமமான செயல். நிலமையை எடைபோடுவதில் சிறிதளவாயினும் தவறு நேரின், அதன் விளைவு கொரில்லாக்களை. சுய செயலிழந்த நிலைக்குத் தள்ளிவிடும். பின்னர் நாம் எதிரியின் தாக்குதலை முறியடிக்க முடியாத நிலைக்கு ஆட்பட்டிருப்பதை அவர்கள் கண்டு கொள்வர்.

எனவே, நிலைமைகளை முறையாக எடைபோட்டு அரசியல் இராணுவ காரணிகளை நேர்த்தியாக ஒழுங்கமைப்பதன் மூலம் மட்டுமே செயற்பாட்டை முன்னெடுக்கும் திறனை நாம் கைவிடாது வைத்துக் கொள்ள முடியும் என்பது புலனுகும். நம்பிக்கையின்மை மிகக் கொண்ட மதிப்பீடு எம்மை சுயசெயலிழக்கச் செய்யவல்லது. அதைத் தொடர்ந்து நாம் செயற்பாட்டை முன்னெடுக்கும் திறனை இழப்போம். அதீத தன்னம்பிக்கை உள்ள மதிப்பீட்டின் நிமித்தம் காரணிகளை கண்மூடித்தனமாக ஒழுங்கமைப்பதும் ஒரே விளைவையே கொடுக்கும்.

எந்த ஒரு இராணுவ தலைவனும் செயற்பாட்டை முன்னெடுக்கும் திறனை வானத்தில் இருந்து முதுசமாகப் பெற்றுக் கொள்வதில்லை. நிலமைகளைக் கவனமாக ஆராய்ந்து மதிப்பீடு செய்வதுடன், சம்பந்தப்பட்ட அரசியல் இராணுவ காரணிகளை நேர்த்தியாக ஒழுக்கமைப்பதன் மூலமே புத்திசாலியான தலைவன் இத்திறனைப் பெற்றுக்

கொள்கிறன். ஒரு கொரில்லாக் குழு அதன் தலைவனின் திறனற்ற மதிப்பீட்டாலோ அல்லது எதிரியின் அழுத்தம் காரணமாகவோ சுய செயலிழந்த நிலைக்குத் தள்ளப்படுமாயின் அக்குழுவின் முதற்கடமை தன்னைச் சிக்கலில் இருந்து விடுவித்துக் கொள்வதுதான். இதற்கான வழிவகைகளை அறுதியிட்டுக் கூறமுடியாது, ஏனென்றல் ஒவ்வொரு சம்பவத்திலும், நிலமைகளைப் பொறுத்துத்தான் கையாளப்படும் வழி முறைகள் அமையும். இப்படியான சந்தர்ப்பங்களில், தேவையாயின் ஒருவர் ஓடிவிடலாம். ஆனல் சில வேளைகளில் நிலமை மோசமாகத் தென்பட்டாலும், உண்மையில் அது அவ்வாறு இருப்பதில்லை. இப்படியான நேரங்களில்தான், இழந்த செயல்திறனை மீட்பதற்கான சந்தர்ப்பத்தை ஒரு நல்ல தலைவன் இனங்கண்டு பயன் படுத்திக் கொள்வான்.

இனி, விழிப்பு அல்லது தயார் நிலை என்பதைப்பற்றி ஆராய்வோம். தனது படைகளை இடையறு விழிப்புடன் வழி நடாத்துதல் ஒரு கொரில்லா தலைமைக்கு இன்றியமையாதது ஆகும். செயற்பாட்டை முன்னெடுக்கும் திறனைப் பெற்றுக்கொள்வதற்கு விழிப்புடன் செயலாற்றுதல் அதி முக்கிய காரணி என்பதை தலைவர்கள் உணர வேண்டும். அத்துடன் எதிரி படைகளுக்கும் எமது படைகளுக்கும் இடையிலான சார்பு நிலைகளில் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு இது ஒரு மூலாதாரக் காரணி என்பதையும் அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும். எதிரியின் நிலமைகள், பிரதேசத்தின் அமைப்பு, மற்றும் உள்ளூர் நிலமைகள், இவற்றுக்குத். தக்கவாறு கொரில்லாத் தலைவர்கள் நமது செயற்பாடுகளை வகுத்துக்கொள்கிறர்கள். மேற்கூறிய காரணிகளில் ஏற்படும் மாற்றங்களை உய்த்துணர்ந்து, அதற்கேற்றவாறு தமது படைகளின் அணிவகுப்பை மாற்றி அமைத்துக் கொள்வதற்குத் தலைவர்கள் விழிப்பு மிக்கவர்களாக இருத்தல் வேண்டும். தலைவன் ஒரு மீனவனைப் போன்றவன். ஒரு மீனவன் நீரின் ஆழம், நீரோட்டத்தின் வேகம், வலைகள் சிக்கிவிடக்கூடிய தடங்கல்கள் போன்ற காரணிகளின் உள்ளுணர்வுடன் தனது வலைகளை விரித்துப் பின் மீட்டுக் கொள்கிறன். எவ்வாறு மீனவன் தனது வலையை வலைக்கயிற்றின் மூலம் கட்டி ஆள்கிறனே அதேபோல் கொரில்லாத் தலைவனும் தன் கொரில்லாக் குழுவுடன் இணைப்பை ஏற்படுத்தி அதைக

கட்டுப்படுத்துகிருன். ஒரு மீனவன் தான் நிலைகொண்ட மையத்தை மாற்றிக் கொள்வதைப் போன்றதுதான் ஒரு கொரில்லாத் தலைவனின் நிலைமையும். பரம்பிச் செல்லல், ஒருங்கு சேர்தல், அத்துடன் தாம் நிலைகொண்ட மையத்தை இடைவிடாது மாற்றிக் கொள்ளல், இவ்வழிகளில்தான் கொரில்லாக்களும் தமது வலிமையை பிரயோகித்துக் கொள்கிருர்கள்.

பொதுவாக கொரில்லாக்கள் தாம் இயங்குவதற்குக் கீழ்க்கண்ட காரணங்களின் நிமித்தம் கலைந்து செல்கிருர்கள் ;

1. எதிரி அதிநீடித்த தற்காப்பு நிலையில் உள்ளபோது, அவனுக்கு எதிராக நமது பலத்தை ஒருமுகப்படுத்த முடியாத நிலையில், கொரில்லாக்கள் கலைந்து சென்று அவனுக்குத் தொல்லை கொடுத்து அவனை நெறிபிறழச் செய்தல் வேண்டும்.

2. எதிரியால் சூழ்ந்து கொள்ளப்படும்போது, நாம் பின் வாங்குவதற்காக கொரில்லாக்கள் கலைந்து செல்கிருர்கள்.

3. நிலப்பிரதேசத்தின் இயல்பு, நடவடிக்கைகளை வரையறுக்குமேயாளுல் கொரில்லாக்கள் பரம்பிச் செல்வார்கள்.

4. தேவைப் பொருள்களின் தட்டுப்பாடு நடவடிக்கைகளை வரையறை செய்யுமாயின் கொரில்லாக்கள் கலைந்து செல்கிருர்கள்.

5. பரந்தளவு பிரதேசத்தில் மக்கள் இயக்கத்தை வளர்க்கும் நோக்குடன் கொரில்லாக்கள் பரம்பிச் செல்கிருர்கள்.

எவ்வித சூழ்நிலைகளிலும், கலைந்து செல்லும் நேரங்களில் பின்வரும் விடயங்களில் அவதானத்துடன் நடந்து கொள்ளல் வேண்டும் :—

1. தொடர்பளவில் பெரிய குழு ஒன்று மத்திய படையாக வைத்துக் கொள்ளப்பட வேண்டும், எஞ்சிய படைகளை கச்சிதமாக சம அளவு கொண்ட குழுக்களாகப்

பிரிக்கக் கூடாது. இவ்விதத்தில் எவ்வகை சூழ்நிலை எழும் போதும், அதைச் சமாளிக்கக் கூடிய நிலையில் ஒரு தலைவன் உள்ளான்.

2 பிரிந்து செல்லும் ஒவ்வொரு குழுவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்ட பொறுப்புக்களைத் தன்பால் கொண்டது. பிரிந்து செல்லும் குழுக்களுக்கு இடப்படும் ஆணையானது, செல்லும் இடம், நேரம், மீண்டும் ஒன்று கூடும் இடம், நேரம். வழிமுறை முதலிய விளக்கமான விபரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

தம்மை நோக்கி எதிரி முன்னேறும்போது கொரில்லாக் கள் ஒருங்கு சேர்கிறார்கள். அத்துடன் அவன்மேல் பாய்ந்து அவனை முற்றாக அழிப்பதற்கும் சந்தர்ப்பமுண்டு. தற்காப் பில் ஈடுபட்டிருக்கும் எதிரியின் படைகள் குறிப்பிட்ட இடங் களில் தனிமைப்பட்டிருப்பின் அப்படைகளை அழிக்க விரும்பும் கொரில்லாக்கள் ஒருங்கு சேர்வது விரும்பத்தக்கது. '' ஒருங்கு சேர்தல் '' என்ற பதத்தின் அர்த்தம் யாதெனில் ; எம்முன் உள்ள பணிக்குத் தேவையான அளவு ஆட்பலத் தைச் சேர்ப்பதே அன்றி எம்வசமுள்ள எல்லா ஆட்பலத் தையும் திரட்டுவதல்ல. எஞ்சியுள்ள கொரில்லாக்கள் எதிரிக்கு இடையூறுகள் விளைவித்து அவனைத் தாமதிக்கச் செய்தல், தனிமைப்பட்டிருக்கும் எதிரி குழுக்களை ஒழித்தல், மக்கள் மத்தியில் பிரச்சாரத்தில் ஈடுபடுதல் போன்ற கடமை களை செய்ய வேண்டும்.

படைகள் கலைந்து செல்லல், ஒருங்கு சேர்தல் என்ப வற்றுடன் '' விழிப்புடன் இடம் பெயர்தல் '' என்ற பதத்தின் அர்த்தத்தையும் ஒரு கொரில்லாத்தலைவன் புரிந்து கொள்ளல் வேண்டும். கொரில்லாக்களால் தனக்கு அபாயம் நேரப்போவதை உணரும் எதிரி, அவர்களைத் தாக்குவதற்குத் தனது படைகளை அனுப்புவது வழமை. கொரில்லாக்கள் சூழ்நிலைகளை கருத்திற்கொண்டு எதிரியை எதிர் கொள்ளும் காலத்தையும் இடத்தையும் தாமே நிர்ணயித்துக் கொள்ளல் வேண்டும். எதிரியுடன் தம்மால் போரிட முடியாது எனக் கண்டால் கொரில்லாக்கள் உடனடியாக இடம்பெயர்தல் வேண்டும். அதன்பின் எதிரியை பகுதிபகுதியாக ஒழித்துக் கட்ட முடியும். உதாரணமாக எதிரியின் பிரிவொன்றை ஓரிடத்தில் ஒழித்துக்கட்டியபின்பு வேறோர் பகுதியில் எதிரி யின் மறு பிரிவைத் தாக்குவதற்கு கொரில்லாக்கள் இடம் பெயரலாம். சில சமயங்களில் ஒரு கொரில்லாக் குழு குறிப் பிட்ட பிராந்தியமொன்றில் தன்னை ஈடுபடுத்துவது அநுகூல மாக இருக்கப்போவதில்லை எனக் கண்டால், அக்குழு உடனடியாக இடம் பெயர்தல் வேண்டும்.

நிலமைகள் பாரதூரமாகும் போது கொரில்லாக்கள் நீரைப்போன்ற நெகிழ்வுடனும், வீசும் தென்றலைப் போன்ற அமைதியுடனும் இடம் பெயர வேண்டும். கொரில்லாக் களின் யுக்திகள் எதிரியை ஏமாற்றி, அவனுக்குச் சபலத்தை உண்டுபண்ணி, அவனைக் குழப்பத்தில் ஆழ்த்தக் கூடியவை யாக அமைதல் வேண்டும். தன்மீது தாக்குதல்கள் கிழக்கில் இருந்தும் வடக்கில் இருந்தும் நடைபெறப் போவதாக எதிரி நம்பக்கூடிய விதத்தில் அவனை இட்டுச்சென்று, பின் தெற் கிலிருந்தும் மேற்கில் இருந்தும் அவனைத் தாக்குதல் வேண்டும். தாக்குதலின்பின் அதிவிரைவில் கலைந்து செல்லல் வேண்டும். இரவு நேரங்களின் போதே கொரில்லாக்கள் இடம் பெயரல் வேண்டும். படைகள் கலைந்து செல்லல், ஒருங்கு சேர்தல், விழிப்புடன் இடம் பெயர்தல் போன்ற நடவடிக்கைகள் கொரில்லாக்களின் செயற்பாட்டை முடுக்கி விடும் திறனைப் பிரதிபலிக்கின்றன. கொரில்லாக்கள் முட்டாள்கள் ஆகவும் வளைந்து கொடுக்கும் தன்மை அற்ற வர்களாகவும் இருப்பின், இது அவர்களை சுயசெயல் இழக்கும் நிலைக்கு இட்டுச்சென்று அவர்களுக்குப் பாரதூரமான பாதிப்புகளை ஏற்படுத்தும். எவ்வாறாகிலும். கொரில்லா செயற்பாடுகளைக் கொண்டு நடாத்தும் கைவன்மை, மேற் கூறிய விடயங்களை விளக்கிக் கொள்வதோடு மட்டுமல் லாமல். போர்க்களத்தில் அவற்றைச் செவ்வனே பிரயோ கிப்பதிலும் தங்கியுள்ளது. என்றும் மாறிவரும் சூழல்களைக் கண்காணித்து தீர்க்கமான நடவடிக்கைகளுக்கு ஏற்ற தருணத்தை மதிப்பிடும் துரிதபுத்தி சாதுர்யமும், ஆர்வமும் சிந்திக்கும் திறனும் உள்ள அவதானிப்பாளர்களிடம் தான் காணப்படும்.

கொரில்லாப்போர் வெற்றிபெற வேண்டுமாயின் கவனிப் புடன் திட்டமிடுதல் அவசியம். வழி முறைகளை வகுக்காமல் போராட்டத்தில் ஈடுபடுவோர் கொரில்லாப்போரின் தன்மைகளைப் புரிந்து கொள்ளாதவர்களே. திட்டத்தின் தேவை சம்பந்தப்பட்ட கொரில்லாக்குழுவின் பருமனைப் பொறுத்ததல்ல, பெரும் அணியைப் போலவே சிறு படைக் குழுவுக்கும் சமயோசிதமான திட்டம் தேவையான ஒன்று. நிலமைகளைக் கவனமாக ஆராய்ந்தபின் கடமைகளை ஒப்பு வித்தல் வேண்டும். அரசியல், இராணுவ போதனைகள், பாவனைப் பொருள்கள் மற்றும் உபகாரணங்கள், உள்ளூர்

மக்களுடன் ஒத்துழைக்கும் விடயங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகத் திட்டங்கள் அமைய வேண்டும். இக் காரணிகளை ஆராயாது விடின், செயற்பாட்டை முடுக்கி விடும் திறனைக் கைப்பற்றிக் கொள்ளவோ அல்லது விழிப் புடன் இயங்கவோ முடியாது. கொரில்லாக்கள் வரையறுக் கப்பட்ட திட்டங்களையே வகுக்க முடியும் என்பது உண்மை யாகினும், மேற்கூறிய காரணிகளை நாம் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

ஒரு தாக்குதலில் ஈட்டப்படும் சாதகமான வெற்றியின் விளைவாகவே நாம் செயற்பாட்டை முடுக்கிவிடும் திறனைக் கைவிடாது வைத்துக் கொள்ள முடியும். கொரில்லாக்களே தாக்குதலை முடுக்கிவிட வேண்டும். அதாவது, எதிரி தம்மை செயல்பாட்டை முடுக்கிவிடும் திறனை இழக்கும் நிலைக்கு இயக்கிச் செல்வதை, கொரில்லாக்கள் ஒருபோதும் அநு மதிக்கக்கூடாது, ஏனெனில் இந்நிலையில் எதிரியைத் தாக்க வேண்டிய கட்டாயம் கொரில்லாக்கள் மேல் திணிக்கப் படுகிறது. கவனமாகத் திட்டமிடுவதன் மூலமும் விழிப் புடன் கட்டுப்படுத்தும் ஆற்றலாலும் எவ்வித வெற்றியை யும் ஈட்டிக்கொள்ள முடியும், தற்காப்பு நிலையில் உள்ள போதும் கூட, எமது முயற்சிகள் தாக்குதலை மீள ஆரம்பிக் கும் நோக்கம் கொண்டவையாக இருத்தல் வேண்டும். தாக்குதல்கள் மூலம்தான் நாம் எதிரியை அகற்றி எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். எதிரியை அகற்றும் இலக்கைப் பொறுத்தளவில் தற்காப்போ அல்லது பின் வாங்குதலோ, மொத்தத்தில் பயனற்ற செயலாகும். அத்துடன் எமது படைகளைப் பேணும் நோக்கைப் பொறுத் தளவிலும் தற்காலிக பலனையே கொடுக்கும். மேற்குறிப் பிட்ட கோட்பாடானது, கொரில்லாக்களுக்கும், மரபுவழிப் படைகளுக்கும் பொருந்தக்கூடியது. செயலை ஈடேற்றும் முறையில் தான் சிறிதளவு வேறுபாடு உண்டு

கொரில்லாக்களுக்கும், மரபுவழிப் படைகளுக்குமிடை யில் நிலவும் தொடர்புகளை உணர்ந்து கொள்ளல் அவசிய மானது. பொதுவாக கொரில்லாக்களும், மரபுவழிப் படை களும் பின்வரும் மூன்று வழி வகைகளில் ஒத்துழைப்பர் ;

1. போர்முறைத்திட்ட ஒத்துழைப்பு
2. போர்யுக்திகளில் ஒத்துழைப்பு
3. தாக்குதல்களில் ஒத்துழைப்பு

எதிரியின் நிலையங்களுள் தொல்லைகளை உண்டுபண்ணி, எதிரியின் போக்குவரத்து வசதிகளைக் குலைக்கும் கொரில்லாக்கள், ஜப்பானை எதிர்த்து நிற்கும் தேசிய எழுச்சியை ஊக்குவிக்கிறார்கள். போர்முறைத்திட்ட ரீதியில் இங்கு அவர்கள் ஒத்துழைக்கிறார்கள். உதாரணமாக சீனாவில் போர் ஆரம்பமாகும் வரையில் மஞ்சூரியாவில் உள்ள கொரில்லாக்களின் தொழில்பாடு போர் முறைத்திட்ட ரீதியில் மரபு வழிப்படைகளுடன் ஒத்துழைக்கும் வகையில் அமையவில்லை. அதன் பின்னர், போர்முறைத்திட்டத்தில் ஒத்துழைக்கும் விதத்தில் அவர்களின் தொழில்பாடு அமைந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது ஏனெனில் அவர்கள் ஒரு எதிரியைக் கொல்ல முடியுமாயின்; அல்லது ஒரு சுற்று தோட்டாவை எதிரி விரயமாக்கும்படி செய்வார்களாயின்; அல்லது தெற்கு நோக்கி முன்னேறும் எதிரி படைகளுக்கு இடையூறு விளைவிப்பார்களாயின் அதற்கு ஏற்றவாறு எமது எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். இவ்வகை கொரில்லா நடவடிக்கைகள் எதிரி தேசத்தின் மீதும் அதன் படைகளின் மீதும் தொடுக்கப்படும் ஆக்பூர்வமான நடவடிக்கைகளே. அத்துடன் அவை எமது தேசத்து மக்களையும் ஊக்குவிக்கும். சீனாவின் சில பிராந்தியங்களில் புகையிரதப் பாதைகளில் இயங்கும் கொரில்லாக்களின் நடவடிக்கைகள் போர்முறைத் திட்ட ஒத்துழைப்புக்கு இன்னோர் உதாரணமாகும். இந்த ஒத்துழைப்பு, ஆக்கிரமிப்பாளன் அப்பிரதேசங்களில் தாக்குதல் தொடுத்தபோது ஆரம்பம் ஆகியது. எதிரி படைகள் அப்பிரதேசங்களில் உள்ள நகரங்களில் நிலை கொண்ட காலத்திலும் அது தொடர்ந்தது. அத்துடன் எமது மரபு வழிப் படைகள், இழந்த பிரதேசங்களை மீட்டுக்கொள்ளும் நோக்குடன் எதிர்த்தாக்குதல் நடத்திய காலங்களிலும் இந்த ஒத்துழைப்பு தொடர்ந்தது.

யுக்தி முறை ஒத்துழைப்புக்கு உதாரணமாக "சிங்கௌ" என்ற பிரதேசத்து நடவடிக்கைகளை எடுத்துக் காட்டலாம். இங்கு அதன் சுற்றாடல்களில் இயங்கிய கொரில்லாக்கள், புகையிரதப்பாதைகள் சாலைகள் முதலியவற்றை அழித்ததன் மூலம் போக்குவரத்து வசதிகளைத் துண்டித்தார்கள். அத்துடன். எண்ணிக்கையான, சிறு இயங்கும் தளங்கள் நிறுவியதன் மூலம் கொரில்லா நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டன. இந்நடவடிக்கைகள். தாக்குதலிலும், தமது நிலைகளைப் பாதுகாக்கும் பணியிலும் ஈடுபட்ட எமது மரபுவழிப் படைகளுக்கு பக்கபலமாக அமைந்தன. இதே போலவே "சாண்டுங்" நடவடிக்கைகளின் போதும் சுற்றாடல்களில் உள்ள ஐந்து பிரதேசங்களைச் சேர்ந்த கொரில்லாக்கள் எமது மரபுவழிப் படைகளுடன் ஒத்துழைத்தார்கள்.

எதிரியின் கட்டுப்பாட்டுள் உள்ள பகுதிகளில் இயங்கும் கொரில்லாக்களின் தலைவர்களும், எமது மரபு வழிப்படைகளுடன் ஒத்துழைக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட கொரில்லாப் படைகளின் தலைவர்களும் நிலமைகளுக்கு ஏற்றவாறு ஒத்துழைப்பது அவசியம். எதிரி ஒழுங்கமைப்பின் பலவீனங்களைத் தெரிந்து கொண்டு, அவனுக்கு இடையூறுகளை விளைவித்து, அவனது போக்குவரத்துகளைச் சீர் குலைத்து. மேலும் அவனது படைகளின் கட்டுப்பாட்டு நெறிமுறைகளைச் சிதைத்தலே இக்கொரில்லாப் படைத் தலைவர்களின் செயற்பாடாகும். கொரில்லா நடவடிக்கைகள் தன்னிச்சையானதாக இருப்பின், யுக்திமுறை ஒத்துழைப்பால் பெறப்படும் பலாபலன்களை இழப்பதுடன் போர்முறைத்திட்ட ஒத்துழைப்பால் பெறப்படும் நல்விளைவுகளும் குறுகிவிடும். தமது பொறுப்புகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கும், ஒத்துழைப்பின் தரத்தை மேம்படுத்துவதற்கும் கொரில்லாக்கள் விரைவான செய்தித் தொடர்பு வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். இதற்கு இருவழி செய்தித் தொடர்பு "ரேடியோ" சாதனம் பொருத்தமானது.

மரபுவழிப் படைகளுடன் நெருக்கமாக ஒத்துழைப்பது அண்மித்த பகுதிகளில் போராடும் கொரில்லாப் படைகளின் பொறுப்பாகும். எதிரியின் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிப்பது, உளவறிதல் புறக்காவல் அரணாகவும், படைகளின் காவற்பிரிவாகவும் இயங்குதல் முதலியவையே இக் கொரில்லாக்களின் முக்கிய தொழிற்பாடாகும். மரபுவழிப் படைகளின் தலைவர்களது குறிப்பான பணிப்புரைகள் இல்லாமலேயே மேற்கூறிய பொறுப்புகளையும் மற்றும், பொதுவான வெற்றிக்கு இட்டுச் செல்லும் பணிகளையும் கொரில்லாக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

## தளங்களை நிறுவுதல்

தளங்களை நிறுவும் சிக்கலான விடயம் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தது. இதன் காரணம் யாதெனில் இப்போராட்டமானது. கொடூரமானதும், நீடிக்கப்பட்டதுமான ஒரு போராட்டமாகும். இழந்த பிரதேசங்களை போர்முறைத்திட்டத்துக்குள் அமைந்த எதிர்த் தாக்குதல்கள் மூலமே மீளமைத்துக் கொள்ள முடியும் எதிரி சேனவுக்குள் நன்றாக காலூன்றும் வரை இவ்வெதிர்த்தாக்குதல்களை நாம் தொடுக்க இயலாது. இதன் விளைவாக எமது நாட்டின் சில பகுதிகளோ அல்லது பெருமளவு பகுதிகளோ எதிரியால் கைப்பற்றப்பட்டு அவனது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பிரதேசங்களாக மாற்றப்படலாம் இப்பாரிய நிலப்பகுதிகளில் கொரில்லா நடவடிக்கைகளை விருத்தி செய்து இப்பிரதேசங்களை எமது முன்னணிப் பிரதேசங்களாக மாற்றுதல், எமது இலக்காகும். இவ்வகையில் எதிரி,

இடைவிடாது போராட வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகிறான். தான் ஆக்கிரமிக்கும் பிரதேசத்தை அடக்குவதற்கு எதிரி ஒடுக்கு முறையிலும் பாலத்காரத்திலும் ஈடுபடுவா.

கொரில்லாக்கள் தமது பயிற்சியில் ஈடுபடுதல், தம்மைப் பாதுகாத்து விருத்தி செய்தல் முதலிய கடமைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் போர்த்திட்ட ரீதியில் அமைந்த பகுதியே கொரில்லாத் தளம் எனப்படும். நமது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பிரதேசத்தைக் கொண்டிராமல், ஒரு போராட்டத்தை நடத்தும் வல்லமையே கொரில்லா நடவடிக்கைகளின் அடிப்படை அம்சமாகும். ஆனால் தளப்பகுதிகளை விருத்தி செய்யாது, நீண்ட காலத்துக்குக் கொரில்லாக்கள் நிலைத்து நின்று இயங்க முடியுமென நாம் கருதக் கூடாது. தோல்வியில் முடிந்த விவசாயிகள் கிளர்ச்சிகளின் பல எடுத்துக்காட்டுகளை வரலாறு எமக்குக் காண்பிக்கிறது. அத்துடன் செய்தித் தொடர்புகளும், இராணுவ உபகரணங்களும் முன்னேற்றமடைந்த இக்கால கட்டத்தில் சட்டத்துக்கும் புறம்பான கொள்ளைக்கார அம்சங்கள் கொண்ட இயக்கங்கள் வெற்றியை ஈட்டிக் கொள்ளும் என நம்புவது கற்பனாவாதமாகும். இன்றைய இயக்கத்தில் இந்த அம்சங்கள் உண்டு எனச் சில கொரில்லாத் தலைவர்கள் எண்ணுவது போல் தோன்றுகிறது. நீண்ட காலப்போரில் தளப்பகுதிகளின் முக்கியத்துவத்தை இத்தலைவர்கள் கிரகித்துக் கொள்வதன் முன் அவர்களின் சிந்தையில் உள்ள இத்தவறான எண்ணத்தைப் போக்குதல் வேண்டும்.

கீழ்க்கண்டவற்றை நாம் கவனத்திற் கொள்வோமாயின், தளங்கள் பற்றிய விரிவான விளக்கத்தைப் பெறலாம்.

1. வெவ்வேறு வகையான தளங்கள்.
2. கொரில்லா பகுதிகளும் தளப்பகுதிகளும்.
3. தளங்களை நிறுவுதல்.
4. தளங்களை விருத்தி செய்தல்.

கொரில்லாத் தளங்களை அவை அமைந்துள்ள இடங்களைக் கொண்டு வகைப்படுத்தலாம், அவை யாவன :

1. மலையகத் தளங்கள்
2. சமநிலைத் தளங்கள்
3. ஆற்றுப் பிரதேச, நீர்த்தேக்கப் பிரதேச, மற்றும் குடா நிலத்தளங்கள்.

மலையகத்தளங்களின் அநுகூலங்கள் கண்கூடானவை. இத்தளங்கள் பலமான பாதுகாப்பைக் கொண்டவை இவ்வகைத் தளங்களை எதிரியின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் நிறுவுதல் வேண்டும், கொரில்லாக்கள் இயங்கும் தளங்களை அமைப்பதற்கு சமநிலைப் பிரதேசங்கள் திருப்திகரமானவையல்ல. இருந்தாலும் இப்பிரதேசங்களில் கொரில்லா நடவடிக்கைகளை தழைத்தோங்க முடியாதொன்றே. அல்லது அங்கு கொரில்லாத் தளங்களை நிறுவுதல் இயலாதென்றே நாம் கருதக் கூடாது, சீனாவின் சமநிலைப் பிரதேசமொன்றில் கொரில்லா நடவடிக்கைகள் விருத்தி அடைந்துள்ளமை இதற்கோர் உதாரணமாகும். இவ்வகைத் தளங்களின் நீண்டகாலப் பாவனையில் நாம் நம்பிக்கை வைக்கலாமா என்பது கேள்விக்குரிய விடயம். இருந்தாலும். பருவகாலத்துக்கு ஏற்றவாறே, அல்லது தற்காலிகமாகவோ சிறிய தளங்களை நாம் அமைத்துக் கொள்ளலாம். நாம் இத்தளங்களை நிறுவக்கூடியதாக இருப்பதன் காரணம் யாதெனில், தான் கைப்பற்றிய பிரதேசங்கள் எல்லாவற்றிலும் நிலை கொள்வதற்கு எதிரியிடம் போதிய ஆட்பலம் கிடையாது. அத்துடன் சீனாவின் சனத்தொகை மிகையாக இருப்பதனால் எவ்விடத்தில் வேண்டுமாயினும் நாம் தளங்களை நிறுவலாம். குளிர் காலங்களில் ஆறுகள் உறைந்துவிடும் போதும். கோடைகாலங்களில் பயிர்கள் வளரும்போதும் பருவநிலைக்கேற்ற தளங்களை சமநிலைப் பிரதேசங்களில் நிறுவலாம். எதிரியின் கவனம் வேறு திசையில் இருக்கும் போது தற்காலிக தளங்களை நாம் நிறுவலாம். எதிரிப்படைகள் முன்னேறும் போது சமநிலங்களில் தளங்களை நிறுவியுள்ள கொரில்லாக்களே அப்படைகளை முதலில் எதிர்கொள்வர். மலைப்பிரதேசத்தை நோக்கிப் பின்வாங்க நேரிட்டால் அக்கொரில்லாக்கள் தமது குழுக்களை அப்பிரதேசம் முழுவதும் கலைந்து செல்வதற்கு விட்டுச் செல்லல் வேண்டும். ஒவ்வொரு நாளும் தமது நிலையைத் தொடர்ந்து மாற்றிக் கொள்ள வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் கொரில்லாக்கள் தளம் விட்டுத் தளம் இடம் பெயர்த்தல் வேண்டும்.

ஆறுகள் குடாக்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் உள்ள பிரதேசங்களில் தளங்கள் அமைக்கப்பட்டமைக்கு வரலாற்று ஆதாரங்கள் உண்டு. இவ்வகைத் தளங்களை அமைக்கும் நோக்கில், எமது நடவடிக்கைகளைப் பொறுத்தளவில் சிறிதளவு கவனமே நாம் இதுவரை காலமும் செலுத்தியுள்ளோம். " கங்சே " நீர்த்தேக்கப்பகுதிகளில் செங்கொரில்லாக்கள் நீண்ட வருடங்களாகத் தாக்குப் பிடித்து வந்துள்ளனர். எதிரியின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில், ஆறுகள், கால்வாய்கள் முதலிய பகுதிகளில் தளங்களை அமைப்பதன் மூலம் நீர்ப்பாதைகளை எதிரி உபயோகிக்கா வண்ணம் செய்தல் வேண்டும்.

கொரில்லாப்பகுதிக்கும், தளப்பகுதிக்கும் இடையில் வேறுபாடுண்டு. எதிரி நிலைகொண்ட பிரதேசங்களில் பூரணமாகச் சூழப்பட்டபகுதியே "தளப்பகுதி" எனப்படும். கொரில்லாக்கள் பிரசன்னமாக இருக்கும் வேளைகளில் மட்டுமே தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளக் கூடிய பகுதிகளை "கொரில்லாப் பகுதிகள்"; என்போம். கொரில்லாக்கள் இப்பகுதிகளை விட்டுச் செல்லும்போது இப்பகுதிகளின் அதிகாரம். ஜப்பான் சார்பான அதன் கைப் பொம்மை ஆட்சிக்கு மீளச் சென்றடையும். "கிழக்கு கோபே" என்னும் பிரதேசத்தை இங்கு உதாரணத்துக்கு எடுத்துக் கொள்ளலாம். முதலில் இப்பிரதேசம் ஒரு கொரில்லாப் பகுதியாகவே இருந்தது. ஜப்பானியரின் கைப் பொம்மை அதிகாரம் ஒன்று அங்கு இயங்கி வந்தது. ஆனால் கொரில்லாக்கள். அப்பிரதேச மக்களின் விடுதலை உணர்ச் சியைத் தூண்டி அவர்களை அணிதிரட்டி, மக்களின் ஒத்து ழைப்புடன் கொரில்லாப் பகுதியாக இருந்த அப்பிரதேசத் தை உண்மையான ஒரு தளப்பகுதியாக மாற்றி அமைத் தார்கள். இத்தகைய பணி மிகவும் சிக்கலானது. ஏனெனில் மக்களின் விடுதலை உணர்ச்சியை எந்தளவில் தூண்டலாம் என்பதில்தான் இப்பணி தங்கியுள்ளது. எதிரி படைகள் பலமாக நிலைகொண்டுள்ள நகரங்கள். புகையிரதப் பாதை களை அண்டியுள்ள வலையங்கள் போன்ற சில பகுதிகளில் ஜப்பானியரையும் அவர்களின் கைப்பொம்மைகளையும் விரட்டியடிக்க இயலாமல் உள்ளது. இப்பகுதிகள் கொரில் லாப் பகுதிகளாகவே இருக்கும். வேறு சமயங்களில் தளப் பகுதிகள். எமது தவறுகள் காரணமாகவோ அல்லது எதிரி நடவடிக்கைகளின் நிமித்தம் கொரில்லாப் பகுதிகளாக மாறக்கூடும்.

போர் வலையத்தில் உள்ள எந்த ஒரு பகுதியிலும் கீழ் வரும் மூன்று நிலமைகளில் ஒன்று உருவாகும் என்பதில் ஐயமில்லை; அப்பகுதி சீனர்கள் கையில் நிலைத்திருக்கலாம்; ஜப்பானியரிடமோ அல்லது அவர்களின் கைப்பொம்மை களிடமோ அப்பகுதி இழக்கப்படலாம்; அல்லது அது மோதிக் கொள்ளும் இரு தரப்புகளுக்குமிடையில் பங்கு போடப்படலாம். முதலாவது அல்லது மூன்றாவது நிலையை அங்கு தோற்றுவிப்பதற்கான எல்லா முயற்சிகளையும் கொரில் லாத் தலைவர்கள் உறுதியாக மேற்கொள்ளல் வேண்டும்.

தளங்களை நிறுவுவதற்கு அத்தியாவசியமான இன்னோர் குறிப்பு யாதெனில் ஆயுதம் தரித்த கொரில்லாக் குழுக்களுக்கும் மக்களுக்கும் மத்தியில் நிலவ வேண்டிய ஒத்துழைப்பாகும். ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கும், ஒடுக்கு முறைக்கும் ஆயுதம் தரித்த எதிர்ப்பு என்ற அரசியல் தத்துவத்தை பரவச்செய்யவும், மக்களை ஆயுதம் ஏந்த வைக்கவும், தற்காப்புக்குழுக்களை அமைக்கவும், கொரில்லாக் குழுக்களுக்குப் பயிற்சி அளிக்கவும், எமது சக்தியெல்லாம் உபயோகிக்கப்படல் வேண்டும். இந்த அரசியல் தத்துவத்தை மக்கள் மத்தியில் பரப்பி அவர்களை ஜப்பான்-எதிர்ப்புக் குழுக்களாக ஒழுங்கமைத்தல் வேண்டும். மக்களின் அரசியல் இயல்புணர்வைக் கூர்மையாக்கி, அவர்களது வீரம்மிக்க ஆர்வ முனைப்பை அதிகரிக்கச் செய்தல் வேண்டும். தொழிலாளர்களும், விவசாயிகளும், விடுதலை விரும்பிகளும், இளைஞர்களும் பெண்களும், சிறுர்களும் அணிதிரட்டப் படாவிடின், அவர்கள் ஒருபோதும் தமது சுய-ஜப்பான் எதிர்ப்புச் சக்தியை உணர்ந்து கொள்ளப் போவதில்லை. மக்களின் ஒன்றுபட்ட பலம்தான் துரோகிகளை ஒழித்துக்கட்டும்; நாம் இழந்துவிட்ட அரசியல் அதிகாரத்தை மீட்டெடுக்கும்; எம்மிடம் இன்னும் எஞ்சியுள்ளவற்றைப் பேணி, அவற்றை விருத்தி செய்யும்.

தளங்கள் தொடர்பான எமது கருத்துப்பரிமாறுதல்களில், புவியியல் காரணிகளை நாம் இதுவரை ஆராய்ந்தோம். மேற்கொண்டு பிரச்சினையின் பொருளாதார அம்சங்களையும் நாம் குறிப்பட்டாக வேண்டும் நாம் எவ்வகை பொருளாதாரக் கொள்கைகளை மேற்கொள்ள வேண்டும்? நாம் மேற்கொள்ளும் எந்த ஒரு பொருளாதாரக் கொள்கையும் வணிகத்துக்கும், தொழில் ஈடுபாடுகளுக்கும் நியாயமான பாதுகாப்பை வழங்க வேண்டும், ''நியாயமான பாதுகாப்பு'' என்ற பதத்துக்கு நாம் கொடுக்கும் அர்த்தம் யாதெனில் : மக்கள் தம்மிடமுள்ள பணத்தின் விகிதாச்சார அடிப்படையில் அதைப் பொது நிதிக்குப் பகிர்ந்தளித்தல் வேண்டும் என்பதே. விவசாயிகள் தமது அறுவடையின் ஒரு குறிப்பிட்ட பகுதியை கொரில்லாக்களுக்கு கிடைக்கச்செய்தல் வேண்டும். துரோகிகளால் நடாத்தப்படும் வியாபார, தொழில்துறை சொத்துக்களைத் தவிர்ந்த ஏனையவற்றுள் சொத்துப் பறிமுதல் செய்யும் முறை தடைசெய்யப்படல் வேண்டும்.

## போராட்டத்தை விரிவாக்கல்

எதிரியின் தளங்களைத் தாக்கி அதன்மூலம் எமது தளங்களைப் பலப்படுத்தி விருத்தி செய்ய விரும்பின் தளப்பகுதிகளின் புற எல்லைகளுக்கு எமது நடவடிக்கைகள் விரிவாக்கப்படல் வேண்டும். இது மக்களை அணிதிரட்டவும் அவர்களை ஆயுதம் தரிக்க வைக்கவும் அவர்களுக்கு பயிற்சி அளித்து அதன் மூலம் கொரில்லா கொள்கைத்திட்டத்தையும், நீடிக்கப்பட்ட போராட்டம் என்ற தேசிய கொளகைத்

திட்டத்தையும் நிறைவேற்றுவதற்கு எமக்கு வாய்ப்பைக் கொடுக்கும். சில சமயங்களில் தளங்களை விருத்தி செய்து விரிவாக்குவதை நாம் வலியுறுத்தல் வேண்டும். மறு சமயங் களில் மக்களை அணிதிரட்டல், அவர்களைப் பயிற்றுவித்தல் ஆயுதம் தரிக்க வைத்தல் போன்ற நடவடிக்கைகளில் நாம் கவனம் செலுத்தல் வேண்டும்.

ஒவ்வொரு கொரில்லாத்தளமும், தாக்குதலிலும் தற்காப்பிலும் தனக்கேயுரிய சில குறிப்பிட்ட சிக்கல்களைக் கொண்டிருக்கும். பொதுவாக எதிரி தானடைந்த பலாபலன் களை வலுப்படுத்தும் பெருமுயற்சியில் கொரில்லாத் தளங் களை தரைமட்டமாக்க முயல்வான். இந்நோக்குடன் பெரு மளவு எதிரி படைகள் கொரில்லா தளங்களை நோக்கி வெவ்வேறு பாதைகளில் அனுப்பப்படும். இதை நாம் எதிர் பார்த்து இந்த முற்றுகையை எதிர்த்தாக்குதல் மூலம் முறியடித்தல் வேண்டும். நெருக்கடி காலத்தில் உதவிக்கு அழைக்கக்கூடிய படைவசதிகளைக் கொண்டிராத எதிரி அணிகளில் ஒன்றை, எமது பிரதான படைகளைக் கொண்டு எதிர்பாராவிதத்தில் தாக்குவதற்கு நாம் திட்டமிடல் வேண்டும். எதிரிக்கு தொல்லைகளையும் இடையூறுகளையும் விளைவிப்பதில் எமது இரண்டாவது முயற்சியைச் செலுத்து தல் வேண்டும். அதேவேளை எமது மறுபடைகள் எதிரியின் அரண்காவல் படைகளைத் தனிமைப்படுத்தி அவர்களின் பொருள் வழங்கு முறைகள் (Lines of Supply) மீதும் செய்தித் தொடர்பு வசதிகள் மீதும் நடவடிக்கைகள் எடுத் தல் வேண்டும். எதிரியின் ஒரு அணியை ஒழித்தபின் மற்ற அணிகள் மீது எமது கவனம் திருப்பப்படல் வேண்டும். உதாரணமாக "வு-தை சான்" போன்ற எமது பெரிய தளப்பகுதியில் நான்கு அல்லது ஐந்து இராணுவ உட்பிரிவு கள் உண்டு. எதிரியின் மேல் தாக்குதல்களை நடத்துவதற்கு அல்லது அவன் எங்கிருந்து வந்தானே, அப்பகுதியைத் தாக்குவதற்கு ஒரு பிரதான படையை உருவாக்கவும், எதிரிக்கு இன்னல்களையும், இடையூறுகளையும் விளைவிப் பதற்கு துணைப்படை ஒன்றை உருவாக்குவதற்கும் எல்லா உட்பிரிவுகளைச் சேர்ந்த கொரில்லாக்களும் ஒத்துழைத்தல் வேண்டும்

ஒரு பகுதியில் எதிரியைத் தோற்கடித்தபின், அவன் மீண்டும் தன்னைத் தயார்ப்படுத்த எடுக்கும் இடைவேளையில் எமது தாக்குதலை நாம் தீவிரப்படுத்த வேண்டும். ஏற்ற வகையில் சிறியனவாக அமைந்த பிரதேசங்களுள் எமது நடவடிக்கைகளை வரையறை செய்து அப்பகுதிகளில் உள்ள எதிரியையும் துரோகிகளையும் ஒழித்தல் வேண்டும்.

பிரதேச மக்களுக்கு எழுச்சியூட்டி, புதிய தொண்டர் களை ஏற்று, அவர்களுக்குப் பயிற்சியளித்து, அவர்களை ஆயுதம் தரிக்க வைத்து, ஒழுங்கமைப்புகளை உருவாக்கியபின் எமது நடவடிக்கைகளை பலமாகப் பாதுகாக்கப்படாத நகரங்கள், மற்றும் செய்தித் தொடர்பு அமைப்புகள் முதலி

யவற்றை உள்ளடக்கும் வகையில் விரிவாக்குதல் வேண்டும். இவற்றைத் தற்காலிகமாகவேனும் எமது கட்டுப்பாட்டில் (நிலையான கட்டுப்பாட்டுள் கொண்டுவர முடியாவிடின்) வைத்துக் கொள்ளலாம். இவை எல்லாம் தாக்குதல் திட்ட முறையில் எமது கடமைகள் ஆகும். அவற்றின் நோக்கம் யாதெனில், எதிரி தற்காப்பு நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டிருக்கும் காலத்தை நீடிக்கச் செய்வதே இதன்பின் எமது இராணுவ நடவடிக்கைகளும், மக்களை அணிதிரட்டும் பணிகளும் ஆர்வத்துடிப்புடன் விரிவாக்கப்படல் வேண்டும். அதே உத்வேகத்துடன் எதிரியின் பலம் தாக்கப்பட்டு தகர்க்கப்படல் வேண்டும். கொரில்லாக்களுக்கு ஓய்வு கொடுத்து, அவர்களுக்கு செயல்முறை விளக்கங்களைப் போதித்தல் அதி முக்கியத்துவம் வாய்ந்த கடமையாகும். இப்பணிகளை எதிரி தற்காப்பில் ஈடுபட்டிருக்கும் கால இடைவெளியில் அமுல் படுத்துதல் இன்றியமையாதது.

இடம்பெயரும் போர்முறையை விருத்தி செய்தல் சாத்தியமானது மட்டுமல்ல, அது அத்தியாவசியமானதும் கூட. நிலைமை இதுதான்; ஏனெனில் எமது இன்றைய போராட்டமானது நீடிக்கப்பட்ட இறுதிக்கட்டப் போராகும். சீனவானது ஜப்பானியக் காட்டுமிராண்டிகளை துரித கதியில் வெற்றி கொண்டு, தான் இழந்த பிரதேசங்களை மீட்டெடுக்கும் நிலையில் இருக்குமாயின், தேசிய அளவிலமைந்த நீண்டகாலப்போர் என்ற கேள்விக்கே இடமில்லை. ஆகையால், கொரில்லாப் போர்முறைக்கும் இடம்பெயரும் போருக்கும் உள்ள தொடர்பு பற்றிய கேள்வியும் எழப் போவதில்லை. ஆனல் இன்றுள்ள நிலைமையோ முற்றிலும் மாறுனதொன்று. கொரில்லாத் தாக்குதல்கள், வழமையான இடம்பெயரும் போர்முறையின் வடிவத்துக்கு விருத்தியடைவதை உறுதி செய்வதற்கு, கொரில்லாப் படைகளின் எண்ணிக்கையும் தகைமைகளும் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். மேற்கொண்டு உபயோகிக்கப்படும் உபகரணங்களின் தன்மையும், பயிற்சியின் தரமும் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். அத்துடன் எமது ஒழுங்கமைப்பு உபகரணங்களைக் கையாளும் முறைகள், எமது போர் யுக்திகள் யாவும் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். எமது உள்ளமைப்பின் ஒழுக்கமும், கட்டுப்பாடுகளும் பயன் படுத்தப்படல் வேண்டும். எமது வீரர்களுக்கு அரசியல் கல்வியைப் புகட்டுதல் அத்தியாவசியமான தேவையாகும். கொரில்லா அமைப்பு முறையில் இருந்து மரபுவழி இராணுவ அணிவகுப்பு ஒழுங்கமைப்பை நோக்கி படிப்படியர்க மாறுதல்கள் ஏற்படல் வேண்டும். அரசியல், இராணுவத் துறைகளுக்குத் தேவையான பணிமனைகளையும் அலுவர்களையும் ஏற்பாடு செய்தல் வேண்டும். மருத்துவ, சுகாதார மற்றும் பாவனைப் பொருள்களை வழங்கும் தொகுதி அமைப்புகளை உருவாக்குவதில் எமது கவனம் செலுத்தப்படல் வேண்டும். ஆயுதங்களின் தரம் உயர்த்தப்பட்டு, ஆயுத வகைகள் அதிகரிக்கப்படவும் வேண்டும். செய்தித் தொடர்பு சாதனங்

களை நாம் மறந்துவிடக்கூடாது. மரபு வழுவாத ஒழுக்கத்தின் தரம் நிலைநாட்டப்படல் வேண்டும்.

கொரில்லா அமைப்புக்கள் சுதந்திரமாக இயங்கும் வகையிலும், அவை ஆயுதம் தரித்த அமைப்புக்களில் மிகவும் ஆரம்ப நிலைகள் என்பதாலும், அதிகாரத்தை அதிகளவு ஒருமுகப்படுத்துதல் இயலாது. அவை மையப்படுத்தப்படுமாயின் கொரில்லா நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்ட செயல்திறன் கொண்டவையாகவே அமையும். அதேவேளையில் கொரில்லா நடவடிக்கைகள் ஆற்றல் மிக்கவையாக அமைய வேண்டும். ஆயின் அவை தம்முள் ஒருங்கிசைவானதாக இருப்பதுடன் மட்டுமல்லாமல் அதே பகுதியில் இயங்கும் வழமையான படைகளின் நடவடிக்கைகளுடன் ஒருமுகப்படுத்தப்படவும் வேண்டும். இது அப்போர்ப் பிராந்தியத்தின் படைத்தளபதியினதும் அவரின் அலுவலர்களினதும் பொறுப்பாகும்.

கொரில்லாத் தளப்பகுதிகளை எடுத்துக் கொண்டால், போர்முறைத்திட்ட நடவடிக்கைகளில் அதிகாரமானது ஒருமுகப்படுத்தப்படவும், தாக்குதல்கள் யுக்திகளைப் பொறுத்தளவில் அது பரவலாக்கப் படவும் வேண்டும். கொரில்லாக் குழுக்களின் பொதுவான நிர்வாகம், போர்ப்பிரர்ந்தியத்தில் கொரில்லா நடவடிக்கைகளை ஒருங்கிசைந்தல், கொரில்லாத் தளங்களின் பொதுவான கொள்கைத் திட்டம், இவையர்வும் ஒருமுகப்படுத்தப்பட்ட போர்முறைத்திட்ட தலைமையின் கவனிப்பில் உள்ள கடமைகள் ஆகும். இதற்கு அப்பால் நாம் அதிகாரத்தை மையப்படுத்துவோமாயின், அது துணைத்தொகுதிகளின் நடவடிக்கைகளில் தலையிடுவதாகவே அமையும். ஏனெனில் வேறுபட்ட புறநிலைகளில், பிரயோகிக்கும் யுக்திகளை அச்சூழ்நிலைகள் தோன்றும் போது தீர்மானிப்பதுதான் இயல்பு மரபுவழிப் போர்முறையில் படைவரிசையின் கீழ்பட்டத்துக்கும், மேல்மட்டத்துக்கும் இடையில் செய்திப் பரிமாற்றம் தடைபடும்போது நாம் இந்தஉண்மையைக் கண்டு கொள்ளலாம். ஒரே வார்த்தையில் சொல்வோமாயின், ஒருமுகப் பட்ட போர்முறைத் திட்டத்தையும், சுதந்திர செயல் பாட்டையும் ஏற்படுத்திக் கொடுப்பதுதான், பொருத்தமான கொரில்லாக் கொள்கைத் திட்டமாகும்.

ஒவ்வொரு கொரில்லாப் பகுதியும், மாவட்டங்களாகவும், இவை பின்பு உப மாவட்டங்களாகவும் பிரிக்கப்படும். ஒவ்வொரு உப பிரிவுக்கும் தளபதிகள் நியமிக்கப்படுவர். பொதுப்படையான திட்டம் உயர்மட்ட தளபதிகளால் தீர்மானிக்கப்படும். செயற்பாட்டு முறைகளைத் தீர்மானிப்பவர்கள் கீழ்மட்ட தளபதிகளே. மேல்மட்ட தளபதிகள் செயற்பட்டு முறைகளை சிபாரிசு செய்யலாம். ஆனால் அவற்றை வரையறுக்க இயலாது இவ்வகையில் கீழ்மட்ட தளபதிகளின் கையிலேயே பெரும்பாலும் உள்ளூர் கட்டுப்பாடு இருக்கும்.

*"அரசியல் என்பது இரத்தம் சிந்தாப் போர்;*
*போர் என்பதோ இரத்தம் சிந்தும் அரசியல்."*

மா சே துங்

*"சில சூழ்நிலைகளில் அரசியலும் இராணுவமும் வேறுபட்டவையாக இல்லாமல், ஒரு முழுமையான கூட்டமைப்பாக வடிவம் கொள்கிறது. இதில் மக்கள் இராணுவமும் அதன் மையக் கருவான கொரில்லாப்படையும் அங்கம் வகிக்கும்."*

ரெஜி டெப்ரே

*"கொரில்லாப் போராட்டம் என்பது ஒரு மக்கள் யுத்தம்: ஒரு வெகுசனப் போர்: கொரில்லா அணியானது மக்களின் போராட்ட முன்னணிப்படை: மக்களின் ஆயுத மையக் கரு. இந்தக் கொரில்லா அணி தனது பெரும் பலத்தை மக்களிடமிருந்தே பெறுகிறது."*

செ குவாரா